
கல்கி

KALKI 22.8.93 ரூ. 3.00



“ஆளுநர் பதவி அலங்காரப் பதவி அல்ல...”



ரஜினியின் தியானமும் ரசிகர் மன்றக் கண்மணிகளும்!

நாலு நாள் ஓடாது என்றார்கள். நாலு வாரம் ஓடினால் ஆச்சர்யம் என்றார்கள். முதலுக்கு மோசமில்லை என்றார்கள். அத்தனை பேச்சையும் ஓரங்கட்டி ஏ.வி.எம்மின் எஜமான் சைலண்டாக 25 வாரம் ஓடி விட்டது. வெள்ளி விழாப் பரபரப்பில் ம்யூஸிக் அகடமி நிறைந்து போய் விட்டது.

ரஜினி வரப் போகிறார், லண்டனிலிருந்து திரும்பியிருக்கிற இளையராஜா வரப் போகிறார் என்றதும் அகடமியின் காம்பவுண்ட் சுவரைச் சுற்றி, போக்குவரத்தைக் குலைக்கச் செய்யும் அளவுக்குக் கும்கும்பல்.

தடுப்புக் கட்டைகளும் போலீஸ் அணிவகுப்பும் வயர்லெஸ் பேச்சுக்களும் 'இது சினிமா விழாவா, ஜெ பங்கேற்கும் அரசியல் விழாவா' என்னும் மகத்தான சந்தேகத்தை உண்டுபண்ணின.

கட்டின கையை எடுக்காமல் சரவணன்; பேப்பர், பேனாவை வைத்துக் கொண்டு சிந்தனை ரேகையுடன் எஸ்.பி. முத்துராமன்; பளபள டிரெஸ்ஸில் அங்குமிங்கும் நடை பயின்ற உதயகுமார்.

ஐந்தரைக்கெல்லாம் அம்மாவோடு வந்து விட்ட சித்ரா, பத்திரிகையாளர் வரிசையின் முதல் ஸீட்டில் உட்கார்ந்து தன்



பாட்டுக்குத் தானே தாளம் போட்டுக் கொண்டிருந்தார்.

பால்கனியில் ரசிகர் மன்றக் கண் மணிகள், (நன்றி : வாக) திருமதி ரஜினி உள்ளே நுழைந்ததிலிருந்து ஆரம்பித்த கை தட்டலையும் விசிலையும் விழா முடிகிற வரை நிறுத்தவேயில்லை. ரஜினி நுழைந்த தும் கட்டுப்படுத்த முடியாத கலாட்டா. 'வருங்கால முதல்வரே வாழ்க!' 'வானவ ராயரே வாழ்க!'.

'தலைவா' என்பது மாதிரி 'முதல்வா' என்கிற சொல்லாடல் ரஜினி ரசிகர்க ளிடையே தற்சமயம் அதிகம் புழங்குவதைக் காண முடிந்தது.

சரவணன் தமது உரையில் 'ரஜினி நெடுங்காலம் சினிமாவில் இருக்க வேண் டும். வேறெங்கும் போகக் கூடாது' என்ற பின்பகுதியை அழுத்திச் சொன்னதற்கு மேடையில் மட்டும் வரவேற்பு!

ரஜினியாவது தன்னிலை விளக்கம் தந்திருக்கலாம். அவர் தற்சமயம் வாயைத் திறக்கிறவராகத் தெரியவில்லை. 'அரசிய லுக்கு வருவேனா, மாட்டேனா' என்பது குறித்து எனது அடுத்த படத்தில் சொல்லி யிருக்கிறேன்' என்பதாக ஒரு 'பொடி'. ('வள்ளி'க்கு இப்படியும் ஒரு பப்ளி சிட்டி?)

எஸ்.பி.எம். இளையராஜாவுக்கு ஏழெட்டு பக்க புகழ்மாலை சூட்ட, ரஜினி ரசிகர்கள் பொறுமையிழக்க... - முணு முணுப்பு + சலசலப்பு. வாக மட்டும் கொஞ் சம் கலகலப்பை உண்டுபண்ணவில்லை யென்றால் ஒரு சின்ன கலாட்டா உருவாகி யிருக்கலாம்.

''எத்தனையோ பேர் ரஜினியை வைத்துப் படமெடுக்கிறார்கள். நானும் தான் படமெடுக்கிறேன். ஆனால் உதயகுமா ருக்கு மட்டும்தானே வித்தியாசமாகக் காட்ட வேண்டும் என்று தோன்றியிருக் கிறது?'' என்று ஜில்லென்று ஒரு ஐஸ் க்யூபை உதய் தலையில் வைத்தார்.

முதல் வரிசையில், உட் கார்ந்திருந்த மீனா, அபாரமான மேக்கப்பும் அனாயாசமான புன்னகையுமாக சகலரையும் கலக்கிக் கொண்டிருந்தார். போதாதகுறைக்கு சரவணன் வாயாலேயே 'இவர் சாவித்ரி, பத்மினி ரேஞ்சில் வருவார்' என்கிற ஆசீர்வாதம் வேறு சேர்ந்து கொண்டபின் கேட்கவா வேண்டும்?

மிகா ஆச்சர்யம், நெடு நேரம் பொறுமை காத்து இளையராஜா உட்கார்ந்திருந் தது. மைக்கில் கூப்பிட்ட போதெல்லாம் எழுந்து போய் பரிசளித்தது தவிர மற்ற நேர மெல்லாம் ரஜினியுடன் என் னமோ ரகசியம்.

தான் இருபத்தெட்டு ஆண்டுகளாகத் தியானம் பழகு வதையும், தியான நுணுக்கம் பற்றியும் ரஜினி மைக்கில் சொன்ன போது யாரும் கவ னித்ததாகத் தெரியவில்லை.

''சரி மச்சி. அண்ணாத்த 'ட்ராக்' மாறறாரு. நான் வரட்டா?''

- இதுவும் ஒரு ரசிகர் மன்றக் கண்மணிதான்!

- பியார்

நட்சத்திரப் பேட்டம்

ஒரு அமைச்சர். அவர் ஒரு சாராய வியாபாரி. அதே ஊர்ல ஒரு கொள்ளை கூட்டக்காரன். தெனமி காட்டுல ஆயுதக் கடத்தல் பண்றான். அதே அதே ஊர்ல ஒரு தியாகி. அவரை ஒரு கொள்ளைக்காரன் ஷூட் பண்றான். அவருக்கு ஒரு பையன். பழி வாங்கறத்துக்காகவே வாரான். அவனுக்கு ஒரு லவ்வு. அது ஒரு திருட்டுப் பொண்ணு. தியாகி கேஸ்ல இன்வால்வ் ஆற போலீஸ்காரனோட தங்கச்சியோட ஆளுக்குத் தியாகியோட பையன் ஃப்ரெண்டு....

''வெய்ட்! வெய்ட்! என்னய்யா சொதப் பறே?''

''சும்மா போசுக; இன்னும் கதையையே சொல்ல ஆரம்பிக்கலையே, அதுக்குள்ளே....''

''பஸ் பிடிக்க, கல்கி ஆபிஸ் வந்து உன்னைக் கொல்லணும்னு தோணுதுய்யா!''

''ஒரு பாரா படிச்ச உங்களுக்கே இப்படின்னா, மூணுமணி நேரம் படம் பார்த்தவனுக்கு எப்படி இருக்கும்?''

- ஆர். பி. ஆர்.



* இவருதான் கொள்ளைக் காரனுக்கு விரோதியான போலீஸ்காரனோட தங்கை யோட ஆளு.

"தினம் ஒரு ஊழல் புகார் என் கவனத்துக்கு வருகிறது!"



– சு. சுவாமி சொல்கிறார் :

நிருபர் : அ.தி.மு.க. ஆட்சி போகுமானால் 'நீங்களோ, காங்கிரஸோ பதவிக்கு வரப் போவதில்லை. அவ்வாறிருக்க...

சுவாமி : ஊழலின் மொத்த உருவமாகவும், சர்வாதிகாரத்தின் சின்னமாகவும் உள்ள ஜெயலலிதா பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டுமென்பதுதான் எனது குறிக்கோள். அ.தி.மு.க.விலிருந்து ஜெயலலிதா விரட்டப்படுவார். தேர்தல் வர வாய்ப்பில்லை. அ.தி.மு.க. ஆட்சி தொடரும். இதுதான் இப்போது நான் சொல்ல முடியும். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழகத்தின் வளர்ச்சி ரொம்பவும் முடங்கிப் போய் விட்டது. தொழில் துறையில் நாலாவது இடத்தில் இருந்த தமிழகம், இன்று பதினெட்டாவது இடத்தில் இருக்கிறது. எந்தவித தகுதியும் இல்லாத சினிமாக்காரர்களை ஆட்சியில் அமர்த்தியதால் வந்த நிலை இது. இங்கு கலாசாரம் சீரழிகிறது. ஒரு மறுமலர்ச்சி தேவை.

நிருபர் : மற்ற கட்சிகளில் பிளவு உண்டாக்கி, ஜனநாயகத்தையும், கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தையும் நீங்கள் கேலிக்கூத்தாக்குவதாகப் பரவலாகக் குற்றம்சாட்டப்படுகிறதே!

சுவாமி : 'பரவலாக' என்று சொல்லாதீர்கள். ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் சொல்லி வரும் குற்றச்சாட்டு இது. நீங்களும் ஆர்.எஸ்.எஸ்.ஸின் ஊதுகுழல் ஆகி விட்டீர்களா? எந்தக் கட்சியையும் பிரிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. உயர்ந்த லட்சியங்களோடு துவங்கப்பட்ட ஜனதா கட்சியைக் கட்டிக் காப்பாற்றி வருபவன் நான். கடந்த தேர்தலில் ஆறு சதவீத வோட்டு வாங்கியிருக்கிறோம். பா.ஜ.க., ஜனதாதளம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள்தான் ஜனதா கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள். சில கட்சிகளில் தலைவர்கள், சுயநலவாதிகளாகச் செயல்படும் போது பிளவு உண்டாகிறது. அதற்கு நான் என்ன செய்ய முடியும்?

நிருபர் : 'அ.தி.மு.க. ஆட்சி, இந்தத் தேதிக்குள் கவிழ்ந்து விடும்' என்று நீங்கள் சொல்லும் கெடுப்படி எதுவும் நடக்காமல் போவதால் அ.தி.மு.க.வினர், இப்போதெல்லாம் 'சுவாமி ஒரு கோமாளி, அவர் பேச்சை யாரும் ஸீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டாம்' என்று கூறுகிறார்களே!

சுவாமி : அ.தி.மு.க.வினர் என்னை ஸீரியஸாக எடுத்துக் கொள்ளாவிட்டால், ஏன் என் பொதுக் கூட்டங்கள், நடக்க விடாமல் ரகளை செய்கிறார்கள், ஊர்வலம் செல்ல அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள்; கோர்ட்டுக்குச் சென்றால் தாக்க முயற்சிக்கிறார்கள்? இதற்குப் பதில் சொல்லுங்கள்! ஹெக்டே கூட இப்படித்தான் சொல்லிக் கொண்டு திரிந்தார். கடைசியில் பதவியை விட்டு ஓடும்படி ஆயிற்று. ஜனநாயக அமைப்பில், எனக்கிருக்கும் வழிகளைக் கையாண்டு ஜெயலலிதாவைப் பதவி நீக்கம் செய்யவே நான் முயன்று வருகிறேன். ஊழல்கள் நடந்திருப்பதற்குச் சரியான ஆதாரங்களுடன் ஆளுனர் மூலம் தேர்தல் கமிஷனை அணுகினேன். ஆனால் பீஷ்ம நாராயண் சிங் செய்த தாமதங்கள்; ஜெயலலிதா போட்ட வழக்குகள் ஆகியவற்றால் காலக் கெடு தாண்டி விட்டது. இதற்கு நான் என்ன செய்ய முடியும்? இவையெல்லாம் என்னை அலுப்புக் கொள்ளச் செய்யவில்லை. மாறாக என் முயற்சியில் மேலும் வேகம் பிறக்கவே உதவுகின்றன. தினசரி ஒரு ஊழல் புகார் என் கவனத்துக்கு வருகிறது. வன்முறை வெடிகுண்டு கலாசாரமும் இங்கு வளர்ந்து வருகிறது. எல்லாவற்றையும் சும்மா பார்த்துக் கொண்டு கை கட்டி உட்கார்ந்திருப்பவன் இல்லை, நான்.

சந்திப்பு : **ஸ்ரீநிவாசன்**
படம் : **டி. ராமமூர்த்தி**



பாலம்

(இப் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பேற்க இயலாது.)

●● வேலி வேலை வெல் கற்றுக் கொள்ள ஆசை. விவரப் புத்தகம் விலைக்குத் தரக் கூடியவர்கள் அல்லது கட்டணம் பெற்றுக் கொண்டு பயிற்சி அளிக்கக் கூடியவர்கள் உதவவும்.

- சிவ. செல்வேள் குமார்,
31/2, ஜக்கிரியா காலனி, 4-வது தெரு,
சூளைமேடு, சென்னை - 600 094.

●● சென்னையில் ஏதோ ஓர் இடத்தில், 'ஸ்ரீ வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் திருப்புகழ் பஜனை சபை' பல வருஷங்களாக நடந்து வருவதாக அறிகிறேன். அச் சபையின் முழு விலாசம் தேவை.

- எஸ். தியாகராஜன்,
49-A, கல்யாணராமன் தெரு,
கும்பகோணம் - 612 001.

●● சிவகாமியின் சபதம் தொடருக்காகக் கல்கி, 12.4.92; 16.8.92 இதழ்கள் தேவை. விலைக்குப் பெற்றுக் கொள்ளக் காத்திருக்கிறேன்.

- கே. வள்ளிநாயகி,
29, ராஜு முதலியார் தெரு,
வரதராஜபுரம், அம்பத்தூர்,
சென்னை - 600 053.

●● ஓய்வு பெற்ற எனக்குச் சிறு தொழிலாக சாக்பீஸ்கள் செய்ய விருப்பம். அதற்கான மோல்டு (அச்சு) விலைக்குத் தர விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்க.

- டி. சடகோபன்,
144, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை - 614 601.

●● மூலிகைத் தோட்டம் அமைக்க விரும்புகிறேன். அரிய மூலிகைச் செடிகள் கொடுத்து உதவவும். அல்லது அவை கிடைக்கும் இடம் பற்றிய விவரங்கள் தரவும்.

- ஆர். வி. விவேகானந்தன்,
D/65 ஹவுசிங் யூனிட்,
பட்டுக்கோட்டை,
தஞ்சை மாவட்.

●● எம். ஏ. படிக்கிறேன். "அருங்கலச் செப்பு" என்ற புத்தகம் என் படிப்புக்கு அவசியம் தேவைப்படுகிறது. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. வைத்திருப்பவர் தர முன்வந்தால் விலை கொடுத்துப் பெற்றுக் கொள்கிறேன்.

- எம். ஆர். அர்ஜுன் சங்கரன்,
74, சென்ன சமுத்திரம் (அஞ்சல்)
சோட்டூர் (வழி) கலவை - 632 506.

●● கவிஞர் கண்ணதாசன் எழுதிய "அரங்கமும் அந்தரங்கமும்" அவசியம் தேவைப்படுகிறது. இந் நூல் வைத்திருப்பவர் எழுதினால் விலை கொடுத்துப் பெற்றுக் கொள்கிறேன்.

- எஸ். இளம்வழுதி,
திரூல் ஏஜண்ட்,
சுசாமணிக்குப்பம் - 607 109.

●● நாகை கடைவீதியில் என் பர்ஸ் பணத்துடன் காணாமல் போயிற்று. அதில் இன்டேன் கேஸ் ரசீது உள்ளது. (நெ : 3452.) அதில் என் முகவரியும் இருக்கும். தயவு செய்து ரசீதையாவது அனுப்பி வைக்கவும்!

- எஸ். சுவாமிநாதன்,
40 வ.உ.சி. தெரு,
நாகப்பட்டினம் - 611 001.

●● பி.எஸ்ஸி., (கணிதம்) முதலாண்டு படிக்கிறேன். பாடப் புத்தகங்கள் உதவக் கூடியவர்கள் அனுப்பவும். தபால் செலவு மட்டும் ஏற்க முடியும். கருணை காட்டவும்.

- க. சிவகுமார்,
முதலாண்டு இளம் அறிவியல் (கணிதம்),
காதிர் முகைதீன் கல்லூரி,
அதிராம்பட்டினம் - 614 701.

●● பூனே, கடக்வாஸலாவில் பணிபுரிந்து அகால மரணமடைந்த எஸ்.என். கோவிந்தராஜனின் மனைவி லட்சுமியும் மகன் ஜெயராமனும் எங்கிருந்தாலும் தொடர்பு கொள்க. நேரில் சந்திக்க ஆசை.

- பிரேமா கோபாலகிருஷ்ணா,
340/1, முதல் மாடி N-1,
பஜனை கோயில் தெரு,
பாடி, சென்னை - 600 050.



* "நம் ஜனநாயக அமைப்புப்படி, ஆட்சியை நடத்துவதில் கவர்னருக்குப் பெரிய பொறுப்பு உண்டு."

"ஆளுனர் பதவி அலங்காரப் பதவி

சென்னை ராஜ்பவனில் டாக்டர் சென்னாரெட்டி குடியேறிய பிறகு நேரு, இந்திரா போன்றோர் படங்களுடன் சத்தியசாயி பாபா, மா ஆனந்தமயி ஆகியோரின் பிரம்மாண்டப் படங்களும் சுவர்களை அலங்கரிக்கின்றன. ராஜஸ்தான் பாணியில் பெரிய முண்டாசுடன் சென்னா ரெட்டியின் இரண்டு வண்ணப்படங்கள் அசர வைக்கின்றன. என்றாலும் ஆளுனர், மாறாத புன்னகையுடன், தோற்றத்தாலும் பழகும் விதத்தாலும் எளிமையாகவே காணப்படுகிறார். "ஃபைல் பார்க்கிறார்" என்று கூறி காக்க வைத்து விடுவது தவிர ஆளுனர் பற்றிய முணுமுணுப்பு ஏதும் இதுவரை காதில் விழவில்லை.

ஏ.டி.ஸியின் (மெய்க்காவலர்) கண்டிப்பையும் மீறி, யோகாவின் கோரிக்கையை ஏற்று, தோட்டத்துக்கு வந்த மருத்துவ டாக்டரான ஆளுனர், மலர்ச் செடிகளுக்கு முன் கைத் தடியுடன் போஸ் கொடுத்தார். மிக மிக அகலமான வாசல் படிகளில் சற்று வயதானவர்கள் (ஆளுனர் உட்பட) ஏற வசதியாகக் கைப்பிடிகள் ஒரு ஜதை நிறுவச் செய்திருக்கிறார். அந்த

'டிசைன்' மாளிகையின் பண்டைக் கால எழிலோடு இசைகிறதா என்பதில் கலை உணர்வோடு ஆர்வம் காட்டினார்.

இந்த எளிமைக்கு மறுபுறமாக பேட்டியில் அவரது மன உறுதியும் கண்டிப்பும் வெளிப்பட்டன.

அல்ல...”

கல்கி : 'தமிழ்நாட்டுக்குக் கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள்' என்ற செய்தி கேள்விப்பட்டவுடன், உங்கள் மனத்தில் உடனடியாகத் தோன்றியது என்ன?

ஆளுனர் : உண்மையைச் சொல்லப்போனால், நான் வேறு மாநிலத்துக்கு மாற்றப்படலாம் என்று அரசல் புரசலாகச் செய்திகள் அடிபட்டபோதே பிரதமரிடம், 'ஜனாதிபதி ஆட்சி நடக்கும் மாநிலங்களுக்குச் செல்லவே எனக்கு விருப்பம்' என்பதைத் தெரிவித்தேன். ஏனென்றால் என்னுடைய நிர்வாகச் செயல்பாட்டையும் கவர்னர் - முதல்வர் என்ற தற்போதைய அரசியலமைப்பு முறையையும் இணைத்துப் பார்க்கும் போது ஜனாதிபதி ஆட்சி நடக்கும் மாநிலங்களில் என்னால் சிறப்பான சேவை செய்ய முடியுமென்பது என் கருத்து. ஆனால் பிரதமரின் விருப்பம் வேறாக இருந்தது. என்னுடைய அரசியல் வாழ்க்கையில் எத்தனையோ சிக்கல்களைச் சந்தித்தவன் நான். சவால்கள் எனக்குப் புதிதல்ல! பஞ்சாபுக்குக் கவர்னராகச் செல்லப் பலர் பயந்த போது, நான் தைரியமாகச் சென்று பணியாற்றினேன். அங்கு பிரச்னை தீர ஒரு யோசனையையும் வெளியிட்டேன். காங்கிரஸுக்கும் அகாலிகளுக்கும் இடையே உள்ள பிரச்னையாக நினைக்காதீர்கள். எல்லா கட்சிகளையும் கட்சி சார்பற்ற முக்கியஸ்தர்களையும் இதில் தொடர்புபடுத்தி கருத்துப் பரிமாற்றத்துக்கு வழி செய்யுங்கள் என்றேன். என் திட்டம் ஏற்கப்படாது போயிற்று. அது பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் கவர்னர் மாளிகை என்பது அரசியல் அனாதைகளுக்குப் புகலிடமாக ஏற்படுத்தப்பட்டதல்ல என்பதை உணர்ந்து, உணர்த்தியும் இருக்கிறேன். நம் ஜனநாயக அமைப்புப்படி, ஆட்சியை நடத்துவதில் கவர்னருக்குப் பெரிய பொறுப்பு உண்டு. பல்வேறு காரணங்களுக்காகத் தமிழ் நாட்டுக்கு வர பலர் தயங்கினார்கள் என்று நான் கேள்விப்பட்டேன். தமிழ்நாட்டின் வரலாற்றுப் பெருமையும், பாரம்பரியமிக்க கலாசார, சமூக சூழ்நிலையும் எனக்கு நன்கு தெரியும். எல்.டி.டி.இ. பிரச்னை இங்கிருக்கிறது என்றால், இதர பல மாநிலங்களில் வேறு விதமான பிரச்னைகள் இருக்கின்றன. முதல்வர் அவர்களை, அவர் நடிகையாக இருக்கும் போதே சில சந்தர்ப்பங்களில் நான் சந்தித்திருக்கிறேன்.

கல்கி : தமிழ்நாட்டில் தாங்கள் கவர்னர் பொறுப்பேற்ற போது, ''உங்களுக்கும், முதல்வருக்கும் மோதல் வரும்'' என்று பலர் சொன்னார்களே?

ஆளுனர் : என் கிரகங்களில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று நினைக்கிறேன்! (சிரிப்பு) என் தோற்றமும், அரசியல் பின்னணியும், செல்வாக்கும், ''இவன் சர்ச்சைக்குரியவன்'' என்று மற்றவர்களை நினைக்க வைக்கிறது போலும்! நான் அரசியலில் கால் வைத்து மந்திரியான காலத்தில் இருந்து இன்று வரை பார்த்தால், எனக்குக் கிடைத்திருக்கும் பொறுப்புகளை முழுக்கப் பயன்படுத்தியிருக்கிறேன் என்பது புரிய வரும். ஒரு பிரச்னையில், ஒன்று, நீங்கள் என்னைத் திருப்தி செய்ய வேண்டும்; அல்லது நான் உங்களைத் திருப்தி செய்ய வேண்டும். இரண்டுமின்றி நடப்பது நடக்கட்டும் என்று ஏனோதானோ மனப்பான்மையுடன் என்னால் இருக்க முடியாது. அப்படி பதவியில் தொங்கிக் கொண்டிருப்பதை விட பதவியைத் தூக்கியெறிவதே சிறந்தது என்பது என் கொள்கை.

கல்கி : சுதந்திரப் போராட்ட காலத்தில் நீங்கள் ஹைதராபாத்தில் இருந்ததால் பிரிட்டிஷாரை மட்டுமின்றி அவர்களின் ஏஜெண்டாகச் செயல்பட்ட நிஜாமை எதிர்த்தும் போராட வேண்டியிருந்தது. அந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளலாமே?

ஆளுனர் : நிஜாமை எதிர்த்ததற்கும், பிரிட்டிஷாரை எதிர்த்



• ''எனக்குக் கிடைத்திருக்கும் பொறுப்புகளை முழுக்கப் பயன்படுத்துகிறேன்.''

ததற்கும், அடிப்படை, ''மக்களுக்கு விடுதலை வேண்டும்; ஜனநாயகம் வேண்டும்'' என்ற உணர்வு தான். ஆனால் நிஜாமின் சர்வாதிகாரம் பிரிட்டிஷ் ஆட்சியை விடவும் கடுமை. ஒரு சம்பவம் எனக்கு ஞாபகம் வருகிறது. ஒருமுறை நிஜாமை எதிர்த்து மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றை என் தலைமையில், 'தாசில்தார் அலுவலகத்தார் முன்னே நடத்தினோம். அப்போதெல்லாம், அந்த அலுவலகத்தில் உள்ள கஜானாவை ஆஜானுபாகுவான அராபியர்கள் காவல் காத்து வந்தார்கள். அவர்கள் என்னிடம் வந்து, 'நிஜாமை எதிர்த்துப் பேசினால், உயிர் உடம்பில் தங்காது' என்று மிரட்டினார்கள். 'இதற்கெல்லாம் நான் பயந்தவனல்ல, நிஜாமை எதிர்த்து முழங்கியே தீருவேன்' என்று சவால் விட்டு கூட்டத்தை நடத்திக் காட்டினேன். பொதுவாக நிஜாமின் நிர்வாகம் நன்றாக இருந்தது என்பதையும் கூற வேண்டும். அந்தக் காலத்திலேயே, பல்வேறு பெரிய தொழிற்சாலைகளை ஹைதராபாத்தில் கொண்டு வந்தவர் நிஜாம். ஆட்சியை விட்டு இறங்க இருந்த கடைசி காலங்களில் நிஜாமின் சர்வாதிகாரமும் அந்த அளவுக்கு இல்லை.

கல்கி : ''ஒரு தீவிர அரசியல்வாதியால் நல்ல கவர்னராகச் செயல்பட முடியாது'' என்று சொல்லப்படுவதைப் பற்றி உங்கள் கருத்து?

ஆளுனர் : 1974-லேயே உத்தரபிரதேசத்துக்கு என்னைக் கவர்னராகப் போட்டார் இந்திரா காந்தி. அதன் பின்னர் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்த பஞ்சாபுக்கும் கவர்னராகச் சென்றிருக்கிறேன். நான் ஒரு அரசியல்வாதியாக இருந்த காரணத்தால் அந்த மாநிலங்களிலுள்ள சிக்கலான நிலைமைகளைப் புரிந்து கொண்டு செயல்பட முடிந்தது. இன்னமும் கேட்டால், நிறைய அரசியல் அனுபவம் இருந்தால் நல்ல கவர்னராகச் செயல்பட முடியும் என்பது என் கருத்து. கவர்னர் என்பவர் அரசியல் சட்டப்படி உருவாக்கப்பட்ட அலங்காரப் பதவி வகிப்பவர் என்பது தவறான கருத்து. ஒரு மாநில முதல்வருக்கு, நிர்வாகத்தின் மீது, எந்த அளவுக்கு அக்கறை இருக்கிறதோ அதற்குச் சற்றும் குறைந்ததல்ல, கவர்னரின் அக்கறை. குடியரசு தினநாளில், கொடி யேற்றுவதும், சுதந்திர தினத்தில் விருந்து கொடுப்பதும் மட்டுமே கவர்னரின் வேலையல்ல. என்னைத் தேடி ஒருவர் நியாயமான கோரிக்கையை எடுத்துக் கொண்டு வந்தாரென்றால், அதை நிறைவேற்ற முயலுவது என் பொறுப்பு.





ஏதாவது பெரிய விபத்து அல்லது துக்க சம்பவம் மாநிலத்தில் நடந்தால், மக்களின் வேதனைகளில் பங்கு கொள்ள நான் அங்கு உடனே போக வேண்டும். நான் சுற்றுப் பயணம் சென்று வந்தால் போய் வந்த இடங்களில், கண்ட, கேட்ட குறைகளை, அறிக்கையாகத் தயாரித்து அரசுக்குக் கொடுப்பேன். இது அரசாங்கத்துக்கு உதவியான ஒரு செயல் தானே? 'இந்த அதிகாரியை மாற்றுங்கள்; அவரை சஸ்பெண்ட் செய்யுங்கள்' என்று என்றுமே நான் சொன்னது கிடையாது. ஆனால் நிலைமை இப்படி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி நடவடிக்கை கோரும் அதிகாரம் எனக்கு உண்டு. அரசின் நிர்வாகத்தில் ஆர்வம் காட்டுவது தவறல்ல, தலையீடு தான் கூடாது. இரண்டுக்கும் இடைப் பட்ட கோடு எனக்கு நன்கு தெரியும். ஆர்வம் காட்டுகிறேனே தவிர ஆதிக்கம் செலுத்துவதில்லை.

கல்கி : மதுரையில் நீங்கள் பேசும் போது மாணவர்கள் புத்தகங்களை வைத்துக் கொண்டு பரீட்சை எழுத அனுமதிக்க வேண்டும் என்று பேசினீர்கள். கொஞ்சம் விளக்க முடியுமா?

ஆளுனர் : பரீட்சையில் என்ன கேள்விகள் வரும் என்பதை ஊகித்து வைத்துக் கொண்டு, அதற்கான பதில்களை மனப்பாடம் செய்து பாஸ் செய்வது சரியான போக்கல்ல. நான் படித்த நாட்களில் பேராசிரியர்கள் ''ரிவிஷன்'' எடுக்கும் போது எதை மேலோட்டமாக நடத்துகிறார், எதற்கு முக்கியத்துவம் தந்து அலசுகிறார் என்பதை வைத்தே என்னென்ன கேள்விகள் பரீட்சையில் வரும் என்று ஊகித்து விடுவேன். இதில் தவறு இல்லை என்றாலும் இது சரியான முறையும் இல்லை. பல்கலைக் கழகங்களிலும், பள்ளிகளிலும், வார, மாத பரீட்சைகள் வைத்து, அந்த மதிப்பெண்களை வருட இறுதியில் பாஸ் செய்வதற்குக் கணக்கெடுத்துக் கொள்ள வேண்டும். இதனால் ஆசிரியர்களுக்கு வேலைப் பளு அதிகமாகலாம். அதற்கேற்றவாறு அதிக ஊதியம் தருவதுதான் சரி. நான் சொல்லும் யோசனை மேம்போக்காகப் பார்த்தால் கேலியாகவும், கலபமான ஒன்றாகவும் தோன்றலாம். ஆனால், புத்தகத்தை நன்றாகப் பயின்ற ஒருவனால் தான் எந்தக் கேள்விக்குப் பதில் எங்கிருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க முடியும்.

கல்கி : குடும்பக் கட்டுப்பாடு பிரசாரத்திற்கு அரசு செலவழிப்பதற்குப் பதிலாக, கல்வித் துறைக்குச் செலவிடலாமென்றும் கூறியிருக்கிறீர்கள். சரியான கல்வி புகட்டப்படுமானால் இப்போது உள்ள பல பிரச்னைகளுக்குத் தானே விடிவு காலம் பிறக்கும் அல்லவா?

* ''நான் கடவுளையும் விதியையும் நம்புகிறேன்.''

இலவசம்!



வாங்கும் ஒவ்வொரு ஸ்ரீபெட்
பாட்டிலுடனும் ஒரு வெல்வெட்
ஷாம்பு ஸாசே இலவசம்.
ஒவ்வொரு ஜாருடனும் இரண்டு
வெல்வெட் ஷாம்பு ஸாசே.

உங்கள் கவனத்திற்கு

★ உங்கள் ஸ்ரீபெட் பில்களை பத்திரமாக வைத்திருங்கள். ஒரு உன்னதமான வாய்ப்பு காத்திருக்கிறது. விரைவில் மேலும் விவரங்கள்.

இச்சலுகை 31 ஆகஸ்டு 1993 வரை மட்டுமே.

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் நிறுவனத்தின் தரமான தயாரிப்பு!

ஸ்ரீபெட்

ஜார்கள் ◆ பாட்டில்கள்

உடையாதவை

உணவுத்தரம் காப்பவை ◆ சுகாதாரமானவை

விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீராம் சேல்ஸ் இன்டர்நேஷனல்

AKSHAR SSI/93041

★ இந்த வாய்ப்பு சென்னை, வேலூர், திருச்சி, கரூர், தஞ்சை, சேலம், ஈரோடு, கோவை, திருப்பூர், மதுரை, நெல்லை,. மயிலாடுதுறை, கடலூர், தூத்துக்குடி, நாகர்கோவில், பாண்டிச்சேரி ஆகிய நகரங்களில் மட்டுமே. இச்சலுகை இல்லாவிட்டாலும் ஸ்ரீபெட் கிடைக்கும்.

✱ ''ஆர்வம் காட்டுகிறேனே தவிர ஆதிக்கம் செலுத்துவதில்லை!''

ஆளுனர் : நாடு சுதந்திரம் பெற்றவுடன் நாம் அதிகமாக அக்கறை செலுத்தியது, தொழில், மற்றும் விவசாயத் துறைகளில் தான். பல அவசியமான பொருட்களை இறக்குமதி செய்து வந்த காரணத்தினால் நாம், இந்தத் துறைகளில் கவனம் செலுத்தி னோம். கல்லூரிகள், பள்ளிகளில் பணத் தைக் கொட்டுவது வீண் என்று நானே நினைத்த காலமும் உண்டு. ஆனால், கல்வித் துறையில், கவனமாகச் செயல்பட் டிருந்தால், இந்த அளவுக்குக் குடும்பக் கட்டுப்பாடு பிரசாரத்திற்கு அவசியமே இராது என்பதை இப்போது உணர்கிறேன். வாழ்க்கையை, செழுமையாக, திட்டமிட்டு நடத்த கல்வி ஒருவனுக்கு உதவும். இப் போது என்ன நடக்கிறது? ஏகப்பட்ட எண் ணிக்கையில் கு.க. துறையில் ஆட்கள் வேலை செய்கிறார்கள். பணத்தைச் செல வழிக்கும் அளவுக்குப் பலன்கள் உண்டா? கிடையாது! இனியும் தாமதிக்காமல், கு.க. துறைக்கு ஆகும் செலவில் பாதியைக் கல்விக்குத் திருப்பி விட வேண்டும். அது வும் துவக்கப் பள்ளிகளுக்குச் செலவிட வேண்டும். அப்போதுதான் அஸ்திவாரம் சரியாக அமையும். ராஜஸ்தானில் நான் கவர்னராக இருந்த போது, 7000 துவக்கப் பள்ளிகள் திறக்க ஏற்பாடு செய்தேன். குறிப் பாகப் பெண்களைப் படிக்க வைக்க வேண் டும். கல்வியின் மூலம் பெறும் விழிப்புணர் வின் காரணமாக கு.க. பிரசாரத்திற்கே அவ சியமில்லாது போகும். கொடுக்கிற கல்வி அர்த்தமுள்ளதாக விளங்கினால் வேறு பல பிரச்னைகளையும் கல்வி மூலமே சந்தித்து சரிசெய்து விடலாம்.

கல்கி : சென்னைப் பிரமுகர்களுக்கு ராஜ்பவனில் நீங்கள் அளித்த ஒரு வரவேற் பின் போது தமிழகம் தேசிய நீரோட்டத்தி லிருந்து விலகி வருகிறது என்று குறிப்பிட் டீர்கள். அரசியல் ரீதியாகவா அல்லது உணர்வு பூர்வமாகவா? எப்படி விலகி வரு கிறோம்?

ஆளுனர் : தி.மு.க.வுடன் காங்கிரஸ் கூட்டணி இருந்த போது நான் கலந்து கொண்ட ஒரு பொதுக் கூட்டத்தில் என் னுடன் கருணாநிதியும் பங்கு கொண்டார். நான் பேச எழுந்தவுடன் ஒருவர் எழுந்து 'நீங்கள் போன முறை அ.தி.மு.கவுடன் கூட்டணி வைத்துக் கொண்டீர்கள். இந்த முறை தி.மு.க.வுடன் வைத்துள்ளீர்கள். நிலையான உறவு உங்களுக்குக் கிடை யாதா?' என்று கேட்டார். நான் அவரிடம், ''நீங்கள், திராவிட கலாசாரத்தின் மீதும், திராவிட தத்துவத்தின் மீதும் அதிக பற்று வைத்திருக்கிறீர்கள். மகிழ்ச்சி. ஆனால், அதன் காரணமாகத் தனிமைப்பட்டுப் போகாதீர்கள்! தமிழகம் பெரியதுதான். ஆனால் இந்தியா அதைவிடப் பெரியது. முன்பெல்லாம் டில்லி தலை மைச் செயலகத்தில், தென்னக ஆட்கள், குறிப்பாகத் தமிழர்கள் நாம் நிறையப்பேர் இருப்பார் கள். இப்போது அந்த எண் ணிக்கை ரொம்பக் குறைந்து விட்டது. வடக்கே இருப்பவர் களுக்குத் தெற்குப் பகுதி என்றாலே மதறாஸ்தான்! வேறு நினைவு வராது. அப்படிப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த உங்களை மீண்டும் தேசிய நீரோட்டத்தில் இணைத்து வைப்பதுதான் தேசியக் கட்சியான காங்கிரஸின் நோக்கம்'' என்று பதில் சொன்னேன். ஒரு மொழி, மக்கள் மீது திணிக்கப் படும் போது எதிர்ப்புகள் தோன்றுகின்றன. எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த போது இந்தி திணிப்பை எதிர்த்து, தென் மாநில முதல்வர்களின் மாநாட்டைக் கூட்டியிருந் தார். ''அந்த மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம்'' என்று இந்திரா என்னைத் தடுக்கப் பார்த்தார். ஆனால் நான் அதையும் மீறி கலந்து கொண்டேன். உ.பி.யில் கவர்ன ராக இருந்த போது இந்தி பண்டிதர்களின் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டி யிருந்தது. அதிலே பேசியவர் எல்லோரும், ''சுதந்திரம் பெற்று எத்தனையோ ஆண்டு களுக்குப் பிறகும், ஆங்கிலமே நீடிக் கிறதே... இதற்குக் காரணம் நேருதான்'' என்று அவரைத் தாக்கிப் பேசினார்கள். நான் பேசும் போது தெளிவாகவே சொன் னேன் : ''நேரு ஒன்றும் இந்தி மொழியின் பிரசாரகர் அல்ல! இந்த நாட்டின் ஒரு மைப்பாட்டைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பிலிருந்த நேரு, இந்தியைத் திணிக்க முற்பட்டிருந்தால், நாடு பாதி யாகப் போயிருக்கும்.''



இது ஒருபுறமிருந்தாலும் மறுபுறமாக இந்தி படிக்கக் கூடிய வாய்ப்பு - குறிப்பாகச் சிறுவர்களுக்கு, - நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதில் எனக்கு உடன்பாடு உண்டு. ஹிந்தி கற்க வேண்டும் என்று விரும்புவோருக்கு அதை மறுக்கின்ற உரிமை நமக்கில்லை.

கல்கி : சமீபத்தில் முதல்வர் உண்ணா விரதமிருந்த போது, அவரை நீங்கள் சந்தித்து, பிரச்னையைத் தீர்க்க வழிமுறை களைச் சொன்னீர்கள் என்று பத்திரிகை களில் வந்தது. நீங்கள் சொன்னதும், பின்வர் கல்லா சொன்னதும் ஒன்றுதானா?

ஆளுனர் : முதல்வர் உண்ணா விரதத் தைத் துவக்கிய போது நான் பாண்டிச்சேரி யில் இருந்தேன். ''சாகும் வரை உண்ணா விரதம் துவக்கியிருக்கிறாரே'' என்ற கவ லையுடன் சென்னைக்கு விரைந்து வந்தேன். நிர்வாகம் எந்தவித பிரச்னையுமில்லாமல்



* "முதல்வருடன் நல்லுறவே நீடிக்கிறது."

நடக்க வேண்டுமே என்ற கவலை எனக்கு! பிரதமரைத் தொடர்பு கொண்ட போது முதல்வரைச் சந்தித்துப் பேசச் சொன்னார். மெரீனாவில் அவரைச் சந்தித்து 'என்ன திடீரென்று இப்படிச் செய்து விட்டீர்கள்?' என்று கேட்டேன். ''என் மந்திரி சபை சகாக்களுக்குக் கூடத் தெரியாது' என்று பதிலளித்தார் அவர். ''நான் உங்கள் மந்திரி சபை சகா அல்லவே. மாநிலத்தின் தலைவன் (Head of State) அல்லவா?'' என்று அவரிடம் கூறினேன். அவரது உண்ணாவிரதம் முடிவடைவதற்கும், பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் ஒரு சுமுகமான அடித்தளம் அமைத்துக் கொடுத்தேன். அத்தோடு என் பணி முடிந்தது. அதன் பின்தான் கக்லா வந்தார். உண்ணாவிரதத்தின் போது சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டுமென்றும், பஸ்கள், ரயில்கள் ஓட போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டுமென்றும், மாநில அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டேன்.

கல்கி : சமீபத்தில் சுப்பிரமணிய சாமியின் மனுவைத் தேர்தல் கமிஷனுக்கு அனுப்பி வைத்தீர்களே, உங்களுக்கு முன் இருந்த ஆளுனர் போன்று இதில் உங்களுக்குத் தயக்கம் ஏதுமில்லையா?

ஆளுனர் : நமது அரசியல் சட்டப்படி, 'தேர்தல் கமிஷனுக்கு அனுப்ப வேண்டி கவர்னரிடம் கொடுக்கப்படும் ஒரு மனுவை' அவர் பரிசீலித்த பிறகு கமிஷனுக்கு அனுப்ப வேண்டுமென்று இருக்கிறது. அதே சமயம் சுப்ரீம் கோர்ட் இரு வழக்குகளில் கொடுத்த தீர்ப்புப்படி, 'ஆதாரமற்ற புகார் என்பதாகக் கருதப்பட்டாலும் தேர்தல் கமிஷனுக்கு அதை அனுப்பி விட வேண்டும்'. ஒரு பக்கம் பரிசீலிக்க வேண்டும் என்று இருக்கிறது. இன்னொரு பக்கம் ஆதாரமற்ற புகாரானாலும் அனுப்பி விட வேண்டும் என்று தீர்ப்பு. இது குறித்து சுப்ரீம் கோர்ட்டே ஒரு விளக்கத்தை அளிப்பது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. மேலும் 'மனுக்களை கவர்னர் தேர்தல் கமிஷனுக்கு அனுப்ப தாக்கீது தர வேண்டும்' என்பதாக சுவாமி சுப்ரீம் கோர்ட்டில் போட்ட வழக்கு ஜூலை 23-ம் தேதி எடுத்துக் கொள்ளப்படவிருந்தது. நான் அனுப்பாமல் வைத்திருந்து, கோர்ட் ஏதாவது கண்டனங்களைச் சொன்னால் என்னாவது? இப்படி பல காரணங்களால், சுவாமி மனு, தேர்தல் கமிஷனுக்கு அனுப்பப்பட்டது. இதனால், எனக்கு முதல்வரிடம் சுமுக உறவில்லை என்று கருதுவது தவறு. நல்லுறவே நீடிக்கிறது.


கல்கி : மறுபடி தீவிர அரசியலுக்கு நீங்கள் திரும்புமாறு ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் ஏற்பீர்களா?

ஆளுனர் : உத்தரபிரதேசத்துக்குக் கவர்னராகச் சென்று வந்த பின்தான் முதல்வரானேன். அதே போல் பஞ்சாப் கவர்னராகப் பணியாற்றி விட்டு முதல்வராக வந்திருக்கிறேன். நான் கடவுளையும் விதியையும் நம்புகிறவன். மீண்டும் அரசியலில் நுழைய அழைப்பு வருமானால், அந்தச் சமயத்திலுள்ள, மனநிலை, உடல்நிலை, சூழ்நிலை ஆகியவற்றுக்கு ஏற்றாற்போல் முடிவு செய்வேன்.

கல்கி : அ.தி.மு.க. அரசு அவசியமான தகவல்களைக் கூட பத்திரிகையாளர்களுக்குத் தருவதில்லை. இதனால் பத்திரிகையாளர்கள் ஊகங்களையே செய்திகளாக எழுத வேண்டியிருக்கிறது...

ஆளுனர் : பத்திரிகைகளுக்குச் சரியான, முழுமையான தகவல்களைத் தருவது அரசின் பொறுப்பு. பத்திரிகைகளுக்கு மட்டுமல்ல, எதிர்க்கட்சிகளுக்கும் ஒளிவு மறைவு இன்றி எல்லாத் தகவல்களும் கொடுங்கள் என்றுதான் நான் சொல்வேன். இதனால் ஆட்சியில் நேர்மைத் திறன் அதிகரிக்கும். மக்களிடையே வதந்திகள் பரவுவது தடுக்கப்படும். நான் முதல்வராக இருந்த போது செய்தித் துறையின் இயக்குனரை மந்திரி சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளச் சொல்வேன். அங்கே எடுக்கப்படும் முடிவுகள் சரியான முறையில் பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கமே அதற்குக் காரணம்.

மேலட்டை வண்ணப்படம், படங்கள் :
யோகா


எனக்கு வேணாம், நீங்களே வச்சுக்குங்க!
சி.பி.ஐ. விசாரணை
ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் குண்டு வெடிப்பு
ராஜேஷ் பைலட்
எனக்கு எதுக்கு? நீங்களே சமாளிங்க!...
சி.ஐ.டி. விசாரணை
உங்களை மிஞ்ச முடியுங்களா? உங்களோட உள் நாட்டுப் பயணச் செலவே இன்னும் தாண்டி எங்கேயோ போயிட்டிருக்கே!...
பலே, பலே! தேர்தலைச் சந்திக்க எல்லாரும் தயார்ப் படுத்திக்கிறாங்க போலிருக்கே?...
கேட்டது போங்க! தேர்தலாவது, ஒண்ணாவது! எல்லாம் உங்களை எதிர்க்கத்தான்...
அர்ஜுன் சிங்
சரத் பவார்



ஸ்ரீ
கல்கி



1993
ஆகஸ்ட் 22
மலர் : 52
இதழ் : 4
ஸ்ரீமுக
ஆவணி 6

குண்டு வெடிப்பும் குறட்டை ஒலியும்

சென்னை ஆர்.எஸ்.எஸ். காரியாலயத்தில் குண்டு வெடித்து பத்து பேர் மரணமுற்றது தமிழக அரசுக்குப் பெரிய தலைகுனிவு. அதை விடவும் பெரிய தலைகுனிவு, இவ்வளவு பெரிய அக்கிரமம் நடந்திருக்கும் போது முதல்வர் ஹெலிகாப்டர் ஏறி, நடக்காத தேர்தலுக்காகப் பிரசாரம் பண்ணப் போனது. இன்னும் பெரிய தலைகுனிவு, முதல்வர் திரும்ப வந்து, ''எனக்குச் சரியான தகவல் தரப்படவில்லை, அதனால்தான் போனேன்'' என்று நொண்டிச் சமாதானம் சொன்னது. சரியான தகவல் அவருக்குத் தரப்படாததற்குப் போலீஸ் துறையை நிர்வகிக்கும் முதல்வரேதான் பொறுப்பேற்க வேண்டுமே தவிர, வேறு யாருமில்லை. ஆக, இந்தச் சமாதானம் 'ஜெ'யின் திறமையற்ற நிர்வாகத்துக்கு அவரே சாட்சியம் வழங்கியது போலாகி விடுகிறது. தட்டிக் கேட்க வேண்டிய நிலையில் உள்ள முதல்வர் ஏன்தான் சால்ஜாப்பு சொல்கிறாரோ?

இதற்கு நேர்மாறாக அனுவைப் பாருங்கள் : ''அதிகாரிகள் ஏன் எனக்கு நேரத்தோடு சரியான தகவல் தரவில்லை?'' என்று ஒரு பிடி பிடித்திருக்கிறார். ''டெலிபிரிண்டர் செய்தியைப் பார்த்து விட்டு நானாக வல்லவோ தலத்துக்கு ஓடினேன்!'' என்று உலுக்கி எடுத்தும் இருக்கிறார். இதுதான் சரியான அணுகுமுறை.

நமது போலீஸ் தூங்கி வழிகிறது என்பதற்கு மேலும் சாட்சியம் இருக்கிறது. 'தமிழக கடற்கரைப் பகுதியில் வெடிமருந்துகள் ஊடுருவுகின்றன' என்று மத்திய புலனாய்வுத் துறை சமீபத்தில் எச்சரித்திருக்கிறது. இதனை ராஜேஷ் பைலட் உறுதிப்படுத்தியும் இருக்கிறார். அப்படி ஊடுருவிய வெடிமருந்துதான் ஆர்.எஸ்.எஸ். காரியாலயத்தில் வெடித்ததா என்பது வேறு விஷயம். எச்சரிக்கப்பட்ட பிறகும் போலீஸ் மெத்தனம் காட்டியிருக்கிறது; உளவுத் துறை குறட்டை விட்டிருக்கிறது என்பது நிதர்சனம். ஓர் உயர் அதிகாரியாவது தார்மிகப் பொறுப்பு ஏற்று ராஜினாமா செய்வதாகச் சொல்ல வேண்டுமே? மூச்! சரி, அவர்கள்தான் சொல்லவில்லை; முதல்வராவது ஓர் அதிரச்சி வைத்தியம் பண்ணக் கூடாதா? அதுவும் இல்லை!

மாறாக, ராஜேஷ் பைலட்டிடம் 'புலனாய்வை சி.பி.ஐ. ஏற்றுக் கொள்ளட்டும்' என்று கூறி, சரணாகதி அடைந்திருக்கிறார் முதல்வர். இது மாநில போலீஸிடமும் உளவுத் துறையிடமும் தமக்கே நம்பிக்கை இல்லை என்று முதல்வர் வாக்குமூலம் வழங்கியதற்கு ஒப்பாகும். இதற்கு நேர்மாறாக, பம்பாயில் தொடர் குண்டுகள் வெடித்து ஏராளச் சேதம் ஏற்பட்டும் கூட, 'சி.பி.ஐ. தேவையில்லை; மாநில போலீஸே துப்பறியும்' என்று நம்பிக்கையோடு விட்டுக் கொடுக்காமல் பேசினார் பவார். நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு தோன்ற, மத்திய அரசு, 'சி.பி.ஐயும் உதவட்டும்' என்று பவாரிடம் அனுமதி பெற அரும்பாடுபட வேண்டியிருந்தது. இங்கேயோ, ராஜேஷ் பைலட்தான், 'இது அப்படியொன்றும் சிக்கலான விஷயமாகத் தோன்றவில்லை; மாநில போலீஸே ஆராயலாம்' என்று கூறி, நமது காவல் துறையின் மிச்சம் சொச்சம் பாக்கியிருக்கும் மானத்தைக் காப்பாற்றித் தந்திருக்கிறார். 'அத்வானி - ஜெயலலிதா அரசியல் உறவு காரணமாகத்தான் பைலட்டின் இந்த முடிவு' என்று எண்ணுவது பிசகு. அது காரணம் எனில், சி.பி.ஐ. இதில் நுழைவதைத்தான் பைலட் விரும்புவாரேயன்றி, விலகி நிற்பதை அல்ல.

பம்பாயில் பயன்படுத்தப்பட்டது போன்ற RDX இங்கு உபயோகப்படுத்தப்படவில்லை என்பது இப்போது உறுதிப்பட்டுள்ளது. எனவே, இது உள்ளூர் வேலையாகவே இருக்கலாம். எவ்வாறாயினும் இதன் எல்லா அம்சங்களையும் சி.ஐ.டி. நுணுகி ஆராய வேண்டும். 'காங்கிரஸ் தலைவர் எஸ்.ஆர்.பி. சொன்னது தவறு; இது கிடங்கு விபத்து அல்ல' என்பதை நிரூபிப்பதற்காகவாவது சகலத்தையும் துருவிப் பார்க்க வேண்டும்.

'ஆர்.எஸ்.எஸ். காரியாலயத்தைக் கட்டித் தருகிறேன்' என்றும் 'உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு அனுதாபத்துடன் நஷ்டஈடும் தருகிறேன்' என்றும் முதல்வர் செயல்படுவது, ஆர்.எஸ்.எஸ். - பி.ஜே.பி. வட்டாரத்தின் மதிப்பைப் பெற உதவலாம். ஆனால் சந்தேகத்துக்கிடமின்றி உண்மைகளை வெளிக்கொணர்வது ஒன்றுதான் மக்களுக்குத் திருப்தி தரும்.

பழனி பாபா மீது தடா பாய்ச்சல் நடத்தியதுடன் தமிழக போலீஸ் திருப்தியடைந்து, மறுபடி தலையணையைத் தட்டிப் போட்டுக் கட்டையை விரித்து விடக் கூடாது.

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

வட்ட மேஜை

தீப்பந்த ஈட்டி!

◆ நம் நாடு நாலு லட்சம் கோடி ரூபாய்க்குக் கடன் பட்டிருக்கிறது என்பதை அறிந்தபோது, என் தலை தாழ்ந்தது. அடிமைத் தளையை அறுத்து எறிந்து விட்டோம் என்று மார் தட்டும் நாம், இன்னும் அடிமைகளாகவே இருப்பதை கோபாலன் அடிக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

கும்பகோணம், பால பத்மாவதி.

◆ இத்தனை வயதாகியும் தம்மை நாடி வரும் நோயாளிகளுக்குப் பரிவோடு மருத்துவம் செய்யும் டாக்டர் தேவதாஸை தமிழக அரசு இனம் கண்டு விருது ஒன்றைத் தரலாமே!

தோழகிரிப்பட்டி, ஆர். முத்துக்குமரன்.

◆ கல்கி 18.7.93 இதழில் "கர்நாடகாவின் 'லிங்காயத்' வகுப்பைச் சார்ந்த பெண்கள் பூணூல் அணிகின்றனர்" என்ற தகவல் இருந்தது. லிங்காயத்து வகுப்பைச் சார்ந்த அனைவரும் ஆண் பெண் பேதமின்றி 'லிங்கம்' அணிந்திருப்பார்கள். ஆண்கள் கழுத்தில் தொங்கவிட்டுக் கொள்வார்கள். பெண்கள் அசௌகர்யத்தைத் தவிர்க்க அதைப் பூணூல் போல ஒரு முறையாக அணிகிறார்கள். "அது பூணூல் அல்ல லிங்கமே".

வாணியம்பாடி, இராம. திருநாவுக்கரசு.

◆ "வறுமையினிடையிலும் வெற்றித் தங்கம்" என்ற கவர் ஸ்டோரி பெண்குலத்திற்கே பெருமையைத் தேடித் தந்தது!

புதுவை - 3, லீலா பாஸ்கரன்.

◆ "பஸ்டாக்" அரசு பஸ் மாதிரி அடிக்கடி 'பிரேக்டவுன்' ஆகாமல், வாராவாரம் வாசகர்களை வந்தடைய வேண்டும்.

வேட்டைக்காரன் புதூர், பி. ஜெயப்பிரகாஷ்.

◆ 'ஒரு எம்.பி.யின் விலை என்ன?' - தலையங்கம் கண்டேன். இப்படிப்பட்ட தீப்பந்த ஈட்டிகளை எறிய கல்கியால்தான் முடியும். படிக்கும் போதே நமக்கு ஒரு ரோஷம் பொங்கி எழுந்தது. அந்த ரோஷம் இந்த நாட்டை ஆள நினைக்கும் அரசியல்வாதிகளுக்கு வருவது எப்போது.....?

பாண்டிச்சேரி - 3, தா. செல்வராசன்.

◆ எதை எதையோ 'சூப்பர்' என்று போடுகிறீர்! இந்த வார (8.8.93) இதழில் ராம் ஜெத்மலானி அவர்களின் பேட்டியை வெளியிட்டுள்ளீர்களே, அதுதான் 'சூப்பரோ சூப்பர்!! அவரது ஆணித்தரமான கருத்துக்களும், பதில்களும் என்னைக் கவர்ந்தன.

சென்னை - 4, வெ. முத்து கிருஷ்ணன்

◆ ஆளும் அதிகாரப் போர்வைக்குள் காங்கிரஸ் செய்து வரும் குளறுபடிகளுக்கு ராம் ஜெத்மலானியைப் போன்றோர் கொடுக்கும் சவுக்கடிதான் ஜனநாயக தர்மம். அவரது நேர்மையான நெஞ்சை அறியவைத்த கல்கிக்கு நன்றி!

மதுரை - 9, இரா. கல்யாண சுந்தரம்.

◆ ராம் ஜெத்மலானியின் பேட்டி சற்று முரண்பாடாக இருந்தது. ஒரு வக்கீல் என்னும் முறையில் ஜெத்மலானி யாருக்கு வேண்டுமானாலும் ஆஜராவதில் தவறில்லை. ஆனால் இவர் அரசியல் சாயம் பூசிக் கொண்டு விதண்டாவாதத்திற்காகவே ஒரு சில காரியங்கள் செய்வதாக ஒரு எண்ணம் தோன்றுகிறது.

சேலம் - 1, கே. ராஜுபாலு.

◆ தமிழ் வளர்ந்தது, வாழுகிறது எனச் சொல்லிக் கொண்டால் நிகழ்காலத்தில் ஏ.கே. ராமானுஜஜனும் அதற்குப் 'பதியம்' போட்டிருக்கிறார் என நினைக்க வைத்தது. அவரைப் பற்றிய நினைவுத் தொகுப்பு.

மதுரை - 14, ரெ. பழநி.

◆ மைக்கேல் ஜாக்சன் ஓர் உலகப் புகழ் பெற்ற பாடகர், டான்சர் என்பதுதான் பொதுவாக எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவர் கல்விக்காகவும், உலக அமைதிக்காகவும், தாழ்ந்துள்ள கறுப்பர் இன முன்னேற்றத்திற்காகவும் செய்யும் நன்கொடைகளையும், உதவிகளையும் கல்கி மூலம் தான் முதல் முதலில் தெரிந்து கொண்டேன். அதோடு அவர் மீது நான் கொண்ட நன் மதிப்பை மேலும் உயர்த்திக் கொண்டேன்.

லால்குடி, எம். இராஜேந்திரன்.

◆ தேவகாந்தன் எழுதிய 'ஞானத் தீ' சிறுகதையில் ஆசிரியரின் நடை ஆர்ப்பாட்டமில்லாமல் நேர்மையாக இருக்கிறது. சாராய வியாபாரி தர்மபால அப்புஹாமியின் ஆத்ம விசாரம் பாராட்டப்பட வேண்டியதாகும். கதையில் ஆங்காங்கே இலங்கை வட்டார வழக்கு இயல்பாக அமைந்துள்ளது. பரிசுக்கு ஏற்ற கதைதான்.

ஸ்ரீரங்கம், வி. சௌரிராஜன்.

◆ இரண்டாம் பரிசுக் கதை, மனிதாபிமான வெளிப்பாடுகளை, மனித நேயத்துடன் இணைத்து எழுதப்பட்டுள்ளது. ஒரு வரலாற்று உண்மையைப் பதிவு செய்யும் தஸ்தாவெஜு போல சில இடங்களில் இருக்கிறது. இனப் பிரச்னைக் கலவரம் என்பது ஒரு முடிவில்லாத தொடர்கதையோ என இலங்கைத் தமிழர்கள் கவலைப்படுவதை, கதை வேறு கோணத்தில் நமக்குப் புரிய வைக்கிறது. தேவகாந்தனுக்குப் பாராட்டுக்கள்.

சென்னை - 17, ஜனகன்.


● வாசகர்கள் கடைவாசலில் காத்து நின்று இடித்துப் புடைத்துக் கொண்டு விகடனை வாங்குமாறு செய்த நாவல் தியாகபூமி!
● இன்றும் அதே பரபரப்பை அறிவிப்பின்போதே உருவாக்கியுள்ள நாவல் தியாகபூமி!
அமரர் கல்கி எழுதிய
சரித்திரம் படைத்த சமூக நாவல்
தியாக பூமி
கல்கி
செப்டம்பர் 5ல் ஆரம்பமாகிறது!

'யமனுக்கு ஏழு பிள்ளை கொடுத்தாலும் உயிரோடு ஒரு பிள்ளை கொடுக்க மாட்டோம்...'

இது மதுரை, சேலம், மாவட்ட கிராமங்கள் சில வற்றில் இன்று வழங்கி வரும் புது மொழி! பெண் சிசுக் கொலைக்குப் பெயர் போன இந்தக் கிராமங்களில், தமிழக அரசின் தொட்டில் திட்டத்தைப் பற்றிப் பேச்செடுத்த போது பல தாய்மார்கள் இந்தப் புதுமொழியைத்தான் பதிலாகச் சொன்னார்கள். (புள்ளை என்பது வட்டார வழக்கில் பெண் குழந்தையைக் குறிக்கும்.)

''எங்க புள்ளைங்கள சாதி கெட்டு எங்கேயோ அனாதையா வளர விடறதைக் காட்டிலும் அதுகளைக் கருணைக் கொலை செய்யறதே மேல்....'' கூச்ச நாச்சமின்றி பெண்கள் இப்படிப் பேசுகிறார்கள். அந்த அளவுக்கு ஜாதி உணர்வு மட்டுமின்றி, தங்கள் செயல் நியாயம்தான் என்கிற நம்பிக்கையும் அவர்களுக்குள் வேரூன்றியிருக்கிறது. இல்லாவிட்டால் பச்சைக் குழந்தைக்கு எருக்கம் பாலையோ கடச் கட கோழிக் குழம்பையோ புகட்டிச் சாகடிப்பதைக் 'கருணைக் கொலை' என்று அழைப்பார்களா.....? அரசாங்கம் அமைத்துள்ள தொட்டிலில் குழந்தையைப் போட்டால் அதன் ஜாதித் தூய்மை மாசுபட்டுப் போகும் என்ற உணர்வு மேலிட, மூச்சுத் திணறும்படி குழந்தையை ஈரத் துணியால் சுற்றி இறுக்கிச் சாகடிப்பார்களா....?

இந்தக் கொடுமையைக் கேட்க எங்களுக்குத்தான் சகிக்கவில்லை. அந்த கிராமத்துப் பெண்கள் சர்வ சாதாரணமாக, உணர்ச்சிவசப்படாமல் பேசுகிறார்கள்.

பெண் சிசுவைக் கொன்ற தாய் ஒருவரை சேவை அமைப்புகள் சிலவற்றின் உதவியுடன் சந்தித்தோம். குழந்தை கொல்லப்பட்ட பதினாறாம் நாள், வீட்டைச் சுத்தப் படுத்தும் சடங்கின் ஓர் அங்கமாகச் சுவருக்குத் தாமே வெள்ளை அடித்துக் கொண்டிருந்தார்....

''குழந்தை எப்படிங்க இறந்தது....'' - கேட்டோம்.

''அதுக்கு இழுப்பு வந்துடுச்சு....''

உணர்ச்சிவசப் படாமல் பொய் சொன்னார். 'லை டிடக்டர்' பயன் படுத்தினால் கூட கண்டு பிடிக்க முடியாதோ....?

பெண் சிசுக் கொலை வழக்கமாகி விட்டதைச் சுட்டிக் காட்டி, ''ஏன் இப் படிச் செய்யறீங்க...?'' என்று கேட்டால் ''கட்டிக் குடுக்கற காலத்துல நீங்க வந்து சீர் செனத்தி செய் வீங்களா....?'' என்று நம்மை மடக்குகிறார்கள் இந்த கிராமத்துப் பெண் கள்.

அந்த அளவுக்கு வரதட்சணைக் கொடுமை! சான்றாக, சேலம் புதுப் பாளையத்தைச் சேர்ந்த இளைஞர் - ஒருவர் - எம்.ஃபில் படித்தவர்.

''ஏங்க, இவ்வளவு படிச்சிருக்கீங்க நீங்கல்லாம் வரதட்சணை கேட்கலாமா....?'' என்ற போது,

''என் தங்கைக்கு 1-1-1-வரதட்சணையா கொடுத்தேன். அதை நான் திருப்பிச்

* தொட்டில் குழந்தைகளுக்கு வரவேற்பு



தொட்டில் திட்டத்தின் தோல்வி

சம்பாதிக்க வேண்டாமா....?'' என்றார்.

''அதென்னங்க 1-1-1-?''

''ஒரு லட்சம் ரொக்கம், ஒரு கார், ஒரு கிலோ தங்கம்....''

வசதியான விவசாயக் குடும்பங்களில் கூட பெண் குழந்தைகளை 'யமனுக்குக் கொடுத்து விடுகிறார்கள்' கல்யாண காலத்தில் பிள்ளை வீட்டார் நிலத்தைச் சீராகக் கேட்டால் பிரித்துத் தர வேண்டுமே என்ற கவலை... மண்ணாசையின் ராட்சஸ பரிமாணம்!

அகில பாரதீய வித்யா பரிஷத் என்ற அனைத்திந்திய மாணவர் அமைப்பு, சமீபத்தில் ஓர் ஆய்வை மேற்கொண்டது. பெண் சிசுக் கொலையைத் தடுப்பதற்குத் தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் பலன் அளிக்கின்றன என்பதைக் கண்டறிய நடத்தப்பட்டது இந்த ஆய்வு. (ஆய்வறிக்கையைத் தமிழக அரசுக்குக் கொடுக்கப் போகிறார்கள்....) இதற்கென மதுரை, சேலம் மாவட்டங்களில் சுமார் பதினாறு கிராமங்களில் பயணம் செய்தனர் சுபஸ்ரீ, கங்கா, சுமதி, ஹேமா, சித்ரநிர்மலா ஆகியோர். இவர்களுடைய அனுபவங்களின் தொகுப்பு இக்கட்டுரை.

● முதல்வரின் முத்தத்துடன் தொடக்கம்....





ஏழைக் குடும்பங்களிலும் ஆடம்பரத் துக்கொன்றும் குறைவில்லை. ஒரு காது குத்து விழாவுக்கு ஐம்பதும் நூறுமாக நோட்டுகள் மொய்யெழுதப்பட்டன. மைக் செட்டும் பாட்டும் மிக எளிய குடும்பத்துச் சிறிய விழாக்களில் கூட காதைக் கிழித்தன. கௌரவம் கருதி பணத்தை வாரி விடத் தயாராய் இருந்தார்களேயொழிய பெண் குழந்தைக்குச் சோறு போட்டு வளர்ப்பதை, அவர்களுக்காகச் சேமிப்பதை, வீண் செலவாக எண்ணினார்கள் என்பதைக் கண்கூடாய்ப் பார்த்தோம்.

பெண் - இரண்டாந்தரப் பிரஜை கூட இல்லை; ஒரு ஈனப் பிறவி அவள் - இப்படித்தான் இந்த வட்டாரங்களில் இன்னமும் பல பெண்களே எண்ணுகிறார்கள். சுய மரியாதை தன்னம்பிக்கை போன்றவற்றின் நிழலைக் கூட அறியாத பேதைகளாக இருக்கிறார்கள்.

''நாங்க உசுரோட இருந்து என்னத்தைக் கண்டோம்....'' என்று பல பெண்கள் சொல்லக் கேட்டபோது இங்கே பெண்களிடையே தற்கொலை விகிதம் சராசரியைவிட மிக அதிகமாக இருந்ததன் காரணம் புரிந்தது.

சேலத்தில் நிலைமை மிகச் சிறிய அளவில் மாறியிருந்தாலும், மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிட்ட ஜாதியினரிடையே பெண் சிசுக் கொலை மிக அதிகமாக இன்னமும் இருந்து வருகிறது. அப்பகுதி காவல் துறையினரும் அதே சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் ஜாதி உணர்வு அதிகமாக ஆதிக்கம் செலுத்தும் போது சட்ட பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப் படுவதில்லை.

இந்த ஜாதியினரிடையே, ஊர்ப் பஞ்சாயத்து கூட்டி அதன் முன்நிலையில் மனைவியைக் கணவன் தள்ளி வைப்பது மிகச் சுலபம். இம் மாதிரி சமயங்களில் பெண் குழந்தைகள் அம்மாவுடனும் ஆண் குழந்தைகள் அப்பாவுடனும் பிரிந்து செல்ல வேண்டும். டைவோர்ஸ், திருமணச் சட்டம் போன்றவற்றின் வாசனை கூட அறியாத பெண்கள் ஒற்றையில் பெண் குழந்தையை வளர்க்க நேரும் சூழ்நிலைக்கு ஆளாகும் அச்சுறுத்தல் எந்நேரமும் இருக்கிறது. இந்தப் பயமும் அவர்களைப் பெண் குழந்தைகளை வெறுக்கவும் கொல்லவும் தூண்டுவதுடன், பெண்களின் வாழ்க்கைக்கே எந்த வித அர்த்தமும் இல்லை என்று முடிவுகட்டத் தூண்டுகிறது.

தவிரவும், பல ஏழை, எளிய பெண்களைப் பயமுறுத்தி, முறைகேடாகப் பயன்படுத்தும் அரக்கத்தனம் செல்வாக்குப் படைத்த ஆண்களிடையே இருப்பதால் அவர்கள் அஞ்சி அஞ்சியே வாழ்கிறார்கள் என்ற தகவலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றும் பெண் மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

துன்பங்கள் அதிகமானதாலோ என்னவோ பெண்களிடையேயும் குடி பழக்கம் பரவலாக இருக்கிறது. கள்ளச் சாராயம் காய்ச்சி விற்கும் தொழில் மேள தாளத்துடன் நடைபெறுகிறது.

ஆக, பெண் சிசுக் கொலைகளுக்கான காரணங்கள் வறுமையும் வரதட்சணைக் கொடுமையும் மட்டுமே அல்ல. அடிப்படை மனிதப் பண்புகளுக்கே இங்கே பஞ்சமாகயிருக்கிறது! அன்பு, அரவணைப்பு ஆகியவற்றை வழங்கும் ஆரோக்கியமான குடும்பச் சூழல் என்பதே காணோம். மாறாக வறட்டு ஜாதிப் பெருமையும், பெண் இன்றி ஆண் இல்லை என்பதை உணர மறுக்கும் கண்மூடித்தனமான ஆணாதிக்கமும்தான் ஆட்சி செய்கின்றன. எல்லா திசைகளிலிருந்தும் தாக்கப்படும் பெண் கருகி வாடி தன்னையே வெறுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறாள்.

இந்தச் சூழ்நிலையில் புரட்சித் தலைவி ஜெயலலிதாவின் பெயரில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் படுதோல்வி அடைந்துள்ளன என்றே முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது.

கட்டுரையின் ஆரம்பத்தில் சொன்னது போல் தொட்டில்களுக்குக் குழந்தைகள் வருவது நின்று போய்விட்டது ஒருபுறமிருக்க, நாங்கள் சென்று பார்த்த பல இடங்களில் தொட்டிலையே காணோம்!

இந்தத் திட்டம் வெற்றி பெறுவதாக வைத்துக் கொண்டாலும் கணக்கு வழக்கின்றி அனாதைப் பெண் குழந்தைகள் பெருகுவதோடு, குடும்பக் கட்டுப்பாடு என்பதே அர்த்தமிழந்து போகும் அபாயமும் உள்ளது.

தொட்டில் திட்டத்தைத் தொடர்ந்து அறிவிக்கப்பட்டதுதான் இரண்டாயிரம் ரூபாய் திட்டம். இதன் கீழ் முப்பத்தைந்து வயதுக்கு உட்பட்ட ஏழைப் பெற்றோர்,





இன்னும் எத்தனை நாட்கள்தான் இப்படி...?

மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதை ஓரளவு புரிந்து கொள்ள முடிந்தும், அவர்களிடம் ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசி விடுவோமோ என்று பயந்து கொண்டு எத்தனை நாட்கள்தான் மௌனம் சாதிக்கப் போகிறீர்கள்?

ஆங்கிலத்தில் பேசக் கற்றுக் கொள்வது அப்படியென்ன கடினமான விஷயமா என்ன?

நீங்கள் நினைத்தால், ஆறே மாதங்களில் இம்மொழியைச் சுலபமாகக் கற்றுக்கொண்டு, சரளமாகப் பேச முடியும்.

ஆம்... விவேகானந்தா கல்வி நிலையம் அளித்து வரும் ஓர் எளிய பயிற்சியினை நீங்கள் மேற்கொண்டால் போதும்.

தவறாகப் பேசி விடுவோமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் மிகச் சரளமாகப் பேசும் ஆற்றலை நீங்கள் நிச்சயம் பெற முடியும்.

இதுவரை இரண்டு லட்சத்திற்கும்மேற்பட்டவர்கள் இப்பயிற்சியில் சேர்ந்து பயனடைந்துள்ளனர்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இப்பயிற்சியினை நீங்கள் மேற்கொள்ளலாம்.

பயிற்சிக்காக தினசரி அரைமணி நேரம் செலவிட்டால் போதும்.

இனியும் தயக்கம் ஏன்?

இன்றே ஒரு போஸ்ட் கார்டில் உங்களது முகவரியைத் தெளிவாக எழுதி, எங்களுக்கு அனுப்புங்கள்.

பயிற்சி பற்றிய விபரங்களை உங்களுக்கு உடனே அனுப்பி வைக்கிறோம்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு."

விவேகானந்தா கல்வி நிலையம்

9, நடேசன் தெரு, தி.நகர், சென்னை-600 017.

ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தபின் கு.க. செய்து கொண்டால் பெண் குழந்தையின் பெயரில் அரசாங்கம் ரூ. 2000 வைப்பு நிதி செலுத்தும். இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை, குழந்தையின் கல்விக்கு உதவுவதோடு பெண்ணின் இருபதாவது வயதில் பத்தாயிரம் ரூபாய் ரொக்கத் தொகையாகத் தரப்படும்.

நாங்கள் இந்தத் திட்டத்தைப் பற்றிக் கேட்டபோது பல கிராம நிர்வாக அதிகாரிகள் அதைப் பற்றித் தங்களுக்கு எந்தவிதமான அறிவிப்பும் வரவில்லை; தொகை எதுவும் ஒதுக்கப்படவில்லை என்றார்கள்.

சென்னையில் நாங்கள் சந்தித்த அமைச்சர் இந்திரகுமாரியோ இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே ஐயாயிரம் பெண் குழந்தைகள் பயனடைந்திருப்பதாகச் சொல்லியிருந்தார். நாங்கள் ஆய்வு செய்த கிராமங்களில் ஒருவர் கூட அத்தகைய உதவி பெற்றதாகச் சொல்லவில்லை. மேலும், அவர்கள் யாவருமே ஆண் குழந்தை பெறுவதற்கு முன் கு.க. செய்து கொள்ளத் தயாராக இல்லை என்றனர்! ஒருவேளை பெண் குழந்தையின் படிப்புக்கும் எதிர்காலத்துக்கும் செய்துதரப்படும் வசதி போதாது என்று கருதுகிறார்களோ என்னவோ. பெண் குழந்தைகளை வளர்க்க அவர்கள் தயாராய் இல்லை.

இந்தக் கொடூரத்தினிடையே பிரச்னைக்குத் தீர்வுதான் என்ன....? எங்கள் முடிவுகள் இவை :

- ஆதாரக் கல்வி என்பது வாழ்க்கைக் கல்வியாக யாவருக்கும் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்.
- கல்வியுடன் சமூக நலத்திட்டங்களைத் தனியார் அமைப்புகள் மூலம் வழங்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்.
- தெய்வ பக்தியும் ஆழ்ந்த மத ஈடுபாடும் கிராம மக்களிடையே இருப்பதால் சமயப் பிரசாரகர்கள், மடங்கள், போன்ற அமைப்புகளின் உதவியுடன் விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளலாம்.
- அரசாங்கம் வழங்கும் பட்டா நிலங்களைப் பெண்கள் பெயரில் வழங்கலாம். அவர்களின் சமூக அந்தஸ்தும் பொருளாதார நிலையும் உயரும்.

– எஸ். ஆர்.

'வாலிக்குக் குஷி பிறந்து விட்டால் அது நாடகமாக வடிவெடுக்கும் போல!

முன்பு மனோரமா கை கொடுத்தார்.

இப்போது சார்லி.

எங்கோ ஓர் ஊரில் புராண நாடகங்களில் ராமனாகவும் கிருஷ்ணனாகவும் நடித்துக் கொண்டிருக்கும் சார்லியை சினிமா தயாரிப்பாளர் எம்.ஆர்.கே., தம் படத்துக்கு ஹீரோவாகப் 'பிடித்து'ப் போடுகிறார்.

ஸ்ரீ ராம நவமி



சினிமா கதாநாயகனாக வந்த பிறகு ஆளே மாறிவிடுகிறார். புட்டி என்ன, குட்டி என்ன - ஆளின் 'சுய சரித்திர'மே மாறிவிடுகிறது. வெளி உலகில் படத்தில் வருகிறது போல படு சுத்தமானவராக மக்கள் நினைக்க, சொந்த வாழ்க்கையில் பலான பேர்வழியாக இருப்பதை, பழைய நாள் நண்பர் 'நாவல்' ராமன் தோலுரித்துக் காட்டப் போகிறேன் என்று சவால் விடுகிறார். (அவருடைய பின்னணியை, சார்லியின் பெண் வேறு காதலித்து வைக்கிறாள்!)

பட முதலாளி பதறுகிறார். தம் ஹீரோவின் இமேஜ் பாழாகிவிடுமே என்று: படங்கள் படுதோல்வி அடையுமே என்று. சம்பந்தியாகப் போகும் நண்பனுக்கா, எங்கோ கிராமத்தில் இருக்கவனை சூப்பர் ஸ்டாராக்கிய நண்பனுக்கா - யாருக்குப் பணிவது என்று சார்லி குழம்புகிறார். தயாரிப்பாளருக்குக் கிடைக்கிறது வெற்றி.

வானத்தில் தற்கால அரசியல் கிண்டல் நிறையவே அள்ளித் தெளித்திருக்கிறார் வாலி.

அது சரி, ஸ்ரீராமநவமிக்கும், நாடகக் கதைக்கும் என்ன சம்பந்தம்? புரியவில்லை.

– சித்தார்த்

புகைப்படம் : கோபிநாத்

ஜென்டில்மேன்




அப்பள வியாபாரியாக ஒரு முகம், அண்டர்கிரௌண்ட் ஆசாமியாக ஒரு முகம், கல்விச் செம்மலாக ஒரு முகம்.

அர்ஜுனின் அஞ்ஞாதவாசம் இத்துடன் முடிவடைகிறது. மனுஷர், நம்பர் ஒன் ஆக வலம் வரப் போகிறார். ஜோராக ஒரு தரம் விசிலடியுங்கள்.

கதராடையும் பட்டை விபூதியுமாக வருவது 100 வாட்ஸ் என்றால், மாறு வேடத்தில் போலீஸ் வேனை மடக்கி, கொள்ளையடிப்பதில் 1000 வாட்ஸ். ஆரம்பத்தில் சாதா தோசையாகத் தெரிந்தாலும் போகப் போக நெய் ரோஸ்ட்!

மாமிகள் அணிவகுப்பில் அப்பளக் கம்பெனி பின்னணி கிளாஸ்! தேய்க்கும் பாத்திரம், தோய்க்கும் துணி, இடுகிற அப்பளம் சகலத்திலும் அர்ஜுனைக் கண்டு உருகும் மதுபாலா, ஆக்ரோஷமான உற்சாகத்துடன் வந்திறங்கும் புதுப் புயல் சுபாஸ்ரீ, கிண்டு முடியும் அந்த கண்ணாடி மாமி... ஒரு கேரக்டர் கூட சோடை போகாதது இந்த நூற்றாண்டின் மகத்தான சினிமா ஆச்சர்யம்.



அதைவிட ஆச்சர்யம் செந்தில், கவுண்டமணி சீன்களில் நிஜமாகவே சிரிப்பு வருவது.

கதையின் உயிர் தொக்கி நிற்கும் அந்த ஃப்ளாஷ்பேக் - ஜான்ஸன் சோப் பாப்பா மாதிரி அத்தனை போஷாக்கு! ஆயினும் 95% எடுத்தவனுக்கு மெடிக்கல் ஸீட் கிடைக்காததற்கு அமைச்சரைக் காரணம் காட்டும் இடம் சறுக். 95 அல்ல; 100 எடுத்தாலும் 'என்ட்ரன்ஸ்' என்கிற சம்பிரதாயம் இருப்பதை டைரக்டர் ரொம்ப சுலபமாக மறந்திருக்கிறார். தவிரவும் ஒரு சாதாரணன், அத்தனை சுலபமாக அமைச்சரை வீட்டில் - அதுவும் சின்ன வீட்டில் - சந்திக்க முடிகிறதாவது?

இருப்பினும் மன்னிக்கத் தோன்றுவதற்குக் காரணம் பாலகுமாரன். ஜகஜாலகுமாரனாய் வசனங்களில் புகுந்து விளையாடியிருக்கிறார். ஒரு தேர்ந்த பூக்காரியின் லாகவத்தில் அளந்து அளந்து கோத்திருக்கிற விதம் - வெகு நயம்.

பாடல்களில் ஒன்று காதிலும், ஒன்று உதட்டிலும், இரண்டு மனத்திலும் தங்குகின்றன. (அந்த ரயில் பாட்டு அநாவசியம்.)

(கேமரா) ஸ்ரீராமின் சிஷ்யப் பிள்ளை ஜீவாவுக்கு யாராவது திருஷ்டி சுத்திப் போட்டால் நல்லது. 16 அல்ல; 32 அடி பாய்ந்திருக்கிறார்.

ஒரு நல்ல 'டீம்' கிளம்பியிருக்கிறது. ஆரம்ப உற்சாகம் குறையாதிருக்கக் கூட்டுப் பிரார்த்தனை செய்யலாம்!

- ஆர்.பி.ஆர்.

என்று தணியும்?

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - ரூ 500 மூன்றாவது பரிசு பெறும் கதை - II

ஜன்னல் வழியாக வெய்யில் சுளீரென்று முகத்தில் உறைக்க, கண் விழித்தாள் ஆனந்தி. விழிக்கும்போதே வழக்கம் போல் நேற்றைய வேலையின் கடுமையை உணர்ந்தாள். இன்று ஞாயிற்றுக் கிழமை. அலுவலகம் விடுமுறையானாலும் வீட்டில் விடுமுறை இல்லை.

பாத்ரூமில் குளிக்கிற சப்தம் கேட்டது. ராஜாராமாகத்தான் இருக்க வேண்டும். படுத்திருந்தபடியே தலையை உயர்த்தி டேபிள் மேலே இருந்த டைம்பீஸைப் பார்த்தாள். மணி ஏழரை ஆகியிருந்தது. ராஜாராம் டூட்டிக்குப் போக நேரமாகி விட்டது நினைவுக்கு வர, படுக்கையை விட்டு எழுந்தாள். மூன்று வயது குழந்தை தாரிணி 'x' போல் ஒரு மாதிரியாகப் படுத்திருக்க, நோக்கினாள். முகம் கழுவி விட்டுச் சமையல் அறைக்குள் நுழைந்த போது ராஜாராம் காப்பி போட்டுக் குடித்திருப்பது தெரிந்தது. 'தனக்கும் காப்பி போட்டு எழுப்பி இருந்தால் என்ன?' - கேள்வியான போது சலிப்பு உண்டாயிற்று அவளுக்கு.

அவசரமாக ராஜாராமுக்கு டிபன் செய்வதில் ஈடுபட்டாள். பக்கத்து நாயுடு வீட்டில் அவர் மகன் அழுகிற சப்தம் கேட்டது. தெருவில் வருகிற வியாபாரங்கள் மெதுவாகச் சூடுபிடிக்க ஆரம்பித்தன. எல்லா வகை காய்கறிகளையும் தன் கட்டைக் குரலில் அடக்கி கூவிச் செல்லும் சரசுவின் குரல் கேட்டது. அவள் தினந்தோறும் இந்தத் தெரு வழியே தவறாமல் சப்தம் போட்டுக் கொண்டு செல்லும் போது கடிகாரத்தின் நேரத்தைச் சரிசெய்து கொள்ளலாம். அவ்வளவு சரியாகப் போவாள். ஆனந்தி அவளிடம் காய்கறி வாங்கும் போது, தான் படுகிற கஷ்டங்களை சரசு சொல்லுவாள். ஆனந்தியின் மன ஓரத்தில் ஈரம் கசியும்.

சரசுவை மாதிரியே இன்னொருத்தியைப் பொன்மலை ரயில்வே ஸ்டேஷனில் அடிக்கடி பார்த்திருக்கிறாள். கூலி வேலை பார்ப்பவள் போலும். கை கால்களில் எல்லாம் வியர்வை உப்பு பூத்திருக்கும். கிழிந்த ரவிக்கை அணிந்து, எந்த முதலமைச்சர் பிறந்த நாளுக்கோ கொடுத்த சாயம் வெளிறிப் போன புடவையைக் கட்டிக் கொண்டிருப்பாள். வேலை பளு காரணமாக ரொம்பச் சோர்ந்து முகமெல்லாம் வெளுத்துப் போய்



இருக்கும். அவளிடம் சென்று ஏதாவது பேச லாமா என்று ஆனந்தி நினைப்பாள். ஆனால் இதுநாள் வரை பேசியதில்லை.

ராஜாராம் குளித்து விட்டு வந்து சாமி கும்பிட்டான். வேலைக்குத் தயாராகிக் கொண்டே ''என்ன டிபன் ரெடியா...?'' என் றான்.

''இதோ ஆயிட்டுது...'' என்றாள்.

''அழுக்குச் சட்டையெல்லாம் இருக்கு... துவைச்சி வைச்சிடு... முடிஞ்சா 'அயர்ன்' பண்ணியும் வைச்சிடு... எனக்குப் போட்டுத் தந்தியே கேரியர் கூடை ஒண்ணு.. அதுபோல சீனுவுக்கு வேணு மாம்... மேஜை மேல பணம் வைச்சிட்டுப் போறேன்... இன்னைக்கே ஒயர் வாங்கிப் போட ஆரம்பிச்சிடு...'' என்றான் ராஜா ராம். அவளிடத்தில் ஒரு ஊழியையிடம் பேசுகின்ற தொனிதான் தெரிந்தது.



ஆனந்தி அவனைத் திரும்பிப் பார்த்து, மெதுவாகவே சொன்னாள்.

''இன்னிக்குத் தேதி இருபது... தாரி ணியை டாக்டரிடம் அழைத்துப் போவ ணும்...''

''நான் வர லேட்டா ஆகலாம்... நீயே அழைச்சிட்டுப் போய்ட்டு வந்துடேன்...''

''என் ப்ரெண்ட் மாலாவுக்குக் குழந்தை பிறந்திருக்கு... நீங்களும் வந்தீங்கன்னா அப் படியே பார்த்துட்டு வந்திடலாம்...''

''அங்க வர்றதெல்லாம் எனக்குப் பிடிக் காது...''

அவள் அதற்கு மேல் பேசவில்லை. அனுமதிக்க மாட்டான்.

சாப்பிட்டு விட்டு வேலைக்குச் சென் றான் ராஜாராம். ஞாயிற்றுக் கிழமைகளில் அவனுக்கு டூட்டி வந்து விட்டால் மதியச் சாப்பாட்டை கேண்டீனில் பார்த்துக் கொள் ளுவான். மெதுவாக - அதுவும் விருப்பம் போல் - சமைத்துக் கொள்ள ஆனந்திக்கு அது உதவியாக இருந்தது.

துணிகளை நிர்மாவில் நனைத்து விட்டு மத்தியானத்திற்குக் கொஞ்சமாக சாதம் வைத்தாள். தாரிணியை எழுப்பி, பல் தேய்த்து விட்டாள். தாரிணி பிறந்ததி லிருந்து அவளுக்கான அனைத்துப் பொறுப் புகளையும் ஆனந்தியேதான் பார்த்துக் கொள்கிறாள். தனியாக அவளை வளர்த்து வருவது போல் உணர்ந்திருந்தாள். பிரசவத் தின் போது கூட ராஜாராமால் துணைக்கு இருக்க முடியவில்லை. ஆபீஸ் வேலை விஷயமாக வெளியூர் சென்றிருந்ததால் மறு நாள் மாலைதான் வந்து பார்த்தான். குழந் தையை மடியில் வைத்திருக்கும் போது அவன் சட்டையை நனைத்து விட்டது. வழக்கமாக அப்பாக்கள் மகிழ்ச்சியடை வார்கள். பரபரப்படைவார்கள். ராஜாராம னுக்கு ஆஸ்பிடல்லை விட்டு வெளியேற வாய்ப்பாகி விட்டது.

ஆனந்தி துணிகளை அலசி, காயப் போட்டு விட்டுக் குளித்தாள். தாரிணியை யும் வெதுவெதுப்பான நீரில் குளிப்பாட்டி னாள். அவள் அடம் பண்ணாமல் குளித்தது பெரும் ஆறுதலாக இருந்தது.

''**ஒ**ரு வாய் குடிக்க தண்ணி தாங் கம்மா...'' சரகவின் கட்டைக் குரல் கேட்க, ஆனந்தி ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்த போது, பெரும்பாலான காய்கறிகளை சரக விற்று விட்டிருப்பது தெரிந்தது. தள்ளு

ப.ரவிகுமார்

அறிமுக எழுத்தாளர்

வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டு ஆகவாச மாய்ப் புடைவை தலைப்பால் விசிறிக் கொண்டே உட்கார்ந்தாள்.

தண்ணீர் வாங்கிக் குடித்து விட்டுப் பெரிய விருந்து சாப்பிட்டவள் போல் நீ...ண்...ட ஏப்பம் விட்டாள். தாரிணிக்குக் காம்ப்ளானைக் கரைத்துக் கொண்டே சரகவைப் பார்த்தாள் ஆனந்தி. அவளுடைய ஒல்லியான தேகத்தைக் கண்டு 'குழந்தைகளை அடிக்கடி பெற்றுக் கொள்ளுவாளோ?' என்ற எண்ணம்தான் ஆனந்திக்குத் தோன்றும்.

''சரக, காய்கறியெல்லாம் வித்திட்ட போலிருக்கே...?''

''என்னமோம்மா... பொழப்பு ஓடுது... காலங்காத்தால இப்படி அலைஞ்சா பத்தோ இருபதோ கிடைக்கும்... அதையும் அந்தப் பாவி மனுஷன் சாராயம் குடிக்க பிடுங்கிப் பான்... அந்த கோடி வீட்டு வாத்தியார் பொண்டாட்டி இல்ல... அது தர வேண்டிய மூணு ரூபா சில்லறை பாக்கி இருக்கு... கிட்டதட்ட இருபது நாளாவப் போவுது... அந்த அம்மாவைப் பார்க்கக் கூட முடியல... பார்த்துக் கேட்டுப்புட்டா 'இந்த காசுக்கு இத்தனை பீத்து பீத்திக்கிறியே'ன்று என்கிட்ட வாங்கிப்புட்டு என்னையே திட்டுவாளுங்க...'' என்றாள் சரக ஆற்றாமையுடன். அவளுக்குப் பேச்சு கொஞ்சம் அதிகம்தான். அவளைப் போன்ற அன்றாடங்காய்ச்சி ஏழைகள் எல்லாம் அப்படித்தான். தினசரி குடித்து விட்டுப் புருஷன் அடிப்பதை, பகல் முழுதும் உழைத்து விட்டு வரும் உடல் அசதியை நினைத்துக் கூடப் பார்க்க நேரமில்லாதவர்கள் - இப்படி சற்று ஓய்வு கிடைக்கும் போதுதான் பொருமுவார்கள்.

''உன் அண்ணி இப்ப நல்லபடியா நடந்துக்கறாங்களா...?''

''அவ கிடக்கறா சண்டாளி... பேரு தான் அன்னபூர்ணி... எச்ச கையால காக்காயைக் கூட விரட்ட மாட்டா... அவ வச்ச செய்வினைதான் என் புருஷனை இன்னும் எழுந்திரிக்க விடல...'' என்றாள் சரக.

அவள் புருஷன் வேறொரு பெண்ணுடன் இருப்பதையும் செய்வினை என்று சொல்லிக் கொண்டு அலைகிறாள் சரக! இந்த விஷயத்தில் மட்டும் சரக சங்ககாலப் பெண்ணாகவே இருந்து வருகிறாள்! அவளைப் பற்றி யார் என்ன சொன்னாலும் அவளுக்குப் பொறுக்காது. ஒரு பிடி பிடித்து விடுவாள்.

சற்று நேரம் எதை எதையெல்லாமோ பேசிக் கொண்டிருந்து விட்டு சரக போய் விட்டாள். இனி நாளை காய்கறி விற்றுக் கொண்டு செல்லும் போதுதான் அவளைப் பார்க்கலாம்.

''ஆளுங்கட்சிக்கு ஓட்டுப் போட்டதில் எவ்வளவு லாபம்?''

''இருபது லட்சம் நஷ்டம்தான்!''

''எப்படி...?''

''ஐம்பது லட்சம் எதிர்பார்த்தேன்... முப்பது லட்சம்தான் கொடுத்தாங்க...''

- ராஜிராதா.


ஆனந்திக்கு டாக்டரிடம் செல்ல வேண்டிய நினைவு வர, சாப்பிட்டாள். வீட்டைப் பூட்டிக் கொண்டு, தாரிணியை இடுப்பில் வைத்து நாயுடு வீட்டைத் தாண்டிப் போகும் போது, ''என்னம்மா? வெளியே கிளம்பிட்டியா? இந்த ஸ்டவ் திரியை அப்படியே வாங்கிட்டு வந்து டேன்'' என்று நாயுடுவின் அம்மா கேட்டதும் சரியென்று வாங்கிக் கொண்டாள்.

ஆனந்தி ஆஸ்பிடல் சென்ற போது அதிகக் கூட்டமில்லை. ஒரு பணக்கார பேஷண்டைச் சுற்றி மட்டும் ஆரவாரமும், ஜன சந்தடியும் இருந்தது. டாக்டர் தாரிணியின் டெஸ்ட் ரிப்போர்ட்டைப் பார்த்து விட்டு பிரைமரி காம்ப்ளெக்ஸ் குறைந்துள்ளதாகச் சொன்னார். மருந்துகளை ஒழுங்காகக் கொடுக்குமாறு பட்டியல் இட்டு, மீண்டும் இரண்டு நாட்கள் கழித்து வரச் சொல்லி, அடுத்த பேஷண்ட் வருகையை எதிர்பார்த்துக் கொட்டாவி விட்டார்.

ஆஸ்பிடலை விட்டு ஆனந்தி வெளியே வந்த போது வானம் கருத்திருந்தது - மழை வருவது போல். மெடிக்கல் ஷாப்பில் தேவையான மாத்திரைகளை வாங்கிக் கொண்டாள். மறக்காமல் பக்கத்தில் இருந்த டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் கூடை பின்ன ஒயரும் நாயுடு அம்மா கேட்டபட்டைத் திரியும் வாங்கிய போது, மழை நன்றாகப் பிடித்துக் கொண்டது. இனி மாலாவைப் போய்ப் பார்க்க முடியாது. இன்னொரு நாள் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்.

மாலாவைப் பார்க்க முடியாமல் போனதால் அருகில் இருந்த மீனாவைப் பார்த்தாலாவது மனசுக்கு ஆறுதலாக இருக்கும் போலிருந்தது ஆனந்திக்கு. மணி நேரத்திற்குப் பெய்த மழை நின்ற பின், மீனா வீட்டிற்கு அவள் வந்த போது, தாரிணி அழுத அழுகையை சடுகட்ட அவள் தோளில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

மீனா அப்போதுதான் தூங்கி எழுந்திருந்தாள் போலும். தூக்கம் முகத்தில் சொச்சமாக நின்றது. மீனா இரண்டு வருஷங்களுக்கு முன்னால் மஞ்சத் திடலில் கண



வனுடன் வசித்து வந்தாள். அவன் இவளை மூன்று மாதக் கருவுடன் விட்டு விட்டு, நாலு மாதத்திலேயே ஓடி விட்டான். மீனா தளரவில்லை. அவன் கொடுத்த குழந்தை எதற்கு என்று வயிற்றைச் சுத்தம் செய்து கொண்டாள். அதிலிருந்து அவளுக்கு வாழ்க்கையின் மீது வெறுப்பு. 'இதுக்குத் தானா ஆண்களின் இத்தனை பீடிகை, முகஸ் துதி' என்று அப்படி ஒரு வெறுப்பு!

அவள் கேட்காமலே டீ போட்டுத் தந்து விட்டு தலையைக் கொண்டை போட்டுக் கொண்டே எதிரே அமர்ந்தாள் மீனா.

''என்ன... ஞாயிற்றுக் கிழமை அது வுமா ஷாப்பிங் - மழை நேரத்திலே?'' என் றாள் மீனா.

''தாரிணியை டாக்டரிடம் காண்பிக்க வேண்டி இருந்தது... வர்ற வழியில திடீர்னு மழை பிடிச்சிக்கிட்டுது... நல்ல வேளை உன் வீடு பக்கத்தில் இருந்தது...'' என்று சொல்லி விட்டு, எதிரே இருந்த மீனா வைப் பார்த்து, ''என்ன இப்பத்தான் தூக்கம் கலைஞ்சுதா..?'' என்று கேட்டாள்.

''எனக்கென்ன... சுதந்திரப் பறவை!''

''எவ்வளவு நாட்களுக்கு...?''

''எவ்வளவு நாட்களுக்கு...?'' தோளைக் குலுக்கிக் கொண்டு, திருப்பிக் கேட்டாள் மீனா. ''உன்னைப் போல குழந்தை பெத்துக்கற வரைக்கும்? எனக் கென்னவோ அந்த ஆசையே இல்ல.. அந்தக் கால இலக்கியத்திலிருந்து இந்தக் கால சினிமா வரைக்கும் எல்லாத்திலுமே பெண் கள் தவறாகச் சித்திரிக்கப்படறாங்க... இது ஆணாதிக்க உலகம்... இங்கே நம்ம கருத் துக்கு இடமில்லை... இன்னொரு முறை என்னை ஏமாத்திக்கவோ, சிறைப்படுத்திக் கவோ விரும்பலை...'' என்றாள்.

''பயலாஜிக்கல் நீடியா உன்னால தனியா இருக்க முடியுமா..?'' என்று ஆனந்தி தெரிந்தே கேட்டாள்.

அதற்கு மீனாவுடைய சிரிப்பு இயல் பாகத் தெரியவில்லை. பெண்ணினத்தின் மீது அவளுடைய அக்கறை ரொம்பவும் பொய்யானது என்று தோன்றியது. இந்தச் சமயத்திலேயே அந்த மூர்த்தி வந்து விட்டால் அவனோடு சென்று விடுவாள். ஏன் சில நேரங்களில் ஊரிலே இருக்க மாட் டாள். இரண்டு மூன்று நாட்கள் கழித்து வரும் போது மாமாவோடோ சித்தப்பா வோடோ ஊருக்குப் போய் விட்டு வந்த தாகச் சொல்லுவாள். அவள் சொல்லுவதில் நிஜம் எது? பொய் எது? என்று யாராலும் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் ஆனந்தி அவள் கைப் பையில் சில மாத்திரைகளைப் பார்த்திருப்பது மட்டும் நிஜம்.

''குடியும் குடித்தனமுமா இருந்துட்டு எப்படி உன்னால வேலைக்குப் போக முடி யுது?'' - இப்போது மீனா ஆனந்தியைக் கேட்டாள்.

''பழகிடுச்சி...''


''வாழ்க்கையில் அர்த்தமே இல்லாம இப்படியே ஓட்டிடலாம்னு பார்க் கறியா?''

''எதை அர்த்தம்னு சொல்றே? உன் னைப் போல திறந்த புத்தகமா இருக் கறதைச் சொல்றியா! என்னைப் பொறுத்த வரைக்கும் யார் வாழ்க்கைக்கும் ஒரு அர்த் தமும் இல்லை... மீனா, நீ செய்யற அத் தனை காரியத்துக்கும் உன் கோணத்தில் சரி யான ஒரு காரணம் இருக்கலாம்... அதை அடுத்தவங்க பக்கத்திலிருந்தும் நீ பார்க் கணும்... எல்லா ஆண்களையும் ஒண்ணா நினைச்சி உன் வாழ்க்கையை நீயே அசிங் கப்படுத்திக்காதே...''

அவள் சொன்னதும் மீனா தத்தளித் தாள். ஏதாவது மழுப்ப வேண்டுமா? அல்லது சிரிக்க வேண்டுமா? ஒன்றும் புரிய வில்லை. தன்னுடைய அந்தரங்கத்தைத் தாக்கியது போல் தோன்றியது. அதற்குப் பிறகு மீனா அழ ஆரம்பித்து விட்டாள். ஆனந்தியின் மடியில் தலையை வைத்துக் கொண்டு ரொம்ப நேரத்துக்கு அழுது கொண்டிருந்தாள்.

ஒரு வழியாக அவளைச் சமாதானப் படுத்தி விட்டு வீடு வரும் போது ஆனந் தியை அந்தச் சம்பவம் ரொம்பவும் பாதித்து விட்டது. மீனாவிடம் இந்த மாதிரியான உணர்வுகள் கூட இருக்கின்றனவா என்று ஆச்சரியமாக இருந்தது. ஏனோ சரகவின் ஞாபகமும் வந்தது.

நாயுடு அம்மாவிடம் ஸ்டவ் பட்டைத் திரியைக் கொடுத்து விட்டு வாசற்படி ஏறிய போதுதான் வீடு திறந்திருந்தது தெரிந்தது. தலைவலி என்று ஏதாவது சொல்லி விட்டு பர்மிஷன் கேட்டு ராஜாராம் வந்திருக்க வேண்டும். ஆனந்திக்கு அலைந்த அலுப்பு அசதியாகி விட்டது. உள்ளே ராஜாராம் தூங்கிக் கொண்டிருந்தது - அதனால் அவளுக்கும் கொஞ்ச நேரம் ஓய்வு கிடைத் திருப்பது - சிறிது ஆறுதலாகவும் அதே சமயம் வெறுப்பாகவும் அவளுக்கு இருந் தது.



HYPNOTIC REGRESSION

மனவசியம் செய்யப்பட்ட நிலையில் ஒருவர், தமது குழந்தைப் பருவத்து நிகழ்ச்சிகளையும் உணர்வுகளையும் நினைவுகூர்வதுதான் hypnotic regression. அந்த நிகழ்ச்சிகளின் போது ஏற்பட்ட உணர்ச்சிகள், உண்டான மன, உடல்ரீதியான விளைவுகள் யாவும் மனோவசியம் செய்யப்பட்ட நிலையில் மீண்டும் ஏற்படும். பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகளைப் போல் முற்பிறப்பின் நிகழ்ச்சிகளையும் மனோவசிய நிலையில் உணருவது சாத்தியமே.

- மார்லி பெர்ன்ஸ்டீன்

எச்சரிக்கை!

கடைசி வாரம்!
ராஜேந்திரா, இந்த ஏழு நாளாவது
பெற்றோரை அழைத்து
சேவை செய்.

முடிச்சுகள் அவிழும்.

அத்யம் - ஒ

ஓய்வாக, அதிநவீனமான அந்தச் சிறையின் பிரத்யேக அறைக்குள் குரு. கதவைச் சுற்றிலும் பாதுகாப்பு லேஸர் கதிர்கள். தப்ப முடியாது. சிறைக்குள்ளிருந்து வெளிவர நான்கு அறைகளைத் தாண்ட வேண்டும். நான்கிலும் காவலாக அதிரடிப் படை வீரர்கள். பாதுகாப்புப் படை ஒருவித பயத்தில் தவித்தது. எந்த நேரத்தில் என்ன நடக்குமோ? எது வெடிக்குமோ? ஆத்மாவே கதி.

குரு வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்தான். உலகத்தின் மீது அவனுக்கு வெறுப்பு குமுறியது. பாழாய்ப் போன உலகம். மக்களுக்கு உதவி செய்ய நினைத்த எண்ணம் அடியோடு வறண்டது. இந்த உலகில் நல்லதற்குக் காலமில்லை.

ஆத்மாவுக்கு ஆபத்து

நளினி சாஸ்திரி

ஓய்வில்லம் என்ற பெயரில் ஒரு மோசடி நடக்கிறது. மக்கள் உழைப்பு மறுக்கப்படுகிறது. ஆதார உரிமை மீறல். அதனை விட இறுதி இல்லம் என்ற போர்வையில் ஐம்பது வயதானவர்களைக் கருணைக் கொலை செய்கிறார்கள். இதெல்லாம் இந்த அப்பாவி மக்களுக்குத் தெரியாமல் அழகாய் நடக்கிறது.

மக்களின் மனோசக்தி மழுங்கடிக்கப் பட்டு விட்டது. உணவு, உடை, உறையுள் தந்து நடமாடும் எந்திரங்களாக மாற்றி விட்டார்கள். ஜடங்கள்! ஜடங்களாய் வாழ்வதை விட துன்பங்களை அனுபவிக்கும் அடிமை வாழ்வே மேல். ஆம். அதுதான் சரி. குரு நீர யோசித்து முடிவுக்கு வந்தான். மௌனம் கலையலாம் எனத் தீர்மானித்த போது அந்த போஃபிஸர் கதிர் திறுத்தி உள்ளே நுழைந்தார்.

''மனிதனே பேசு! உன் மௌனம் உன் அழிவை அழைக்கும், குற்றங்களை ஒத்துக் கொள். ஆத்மா தயவில் உயிர் பிழைக்கலாம். நீ யார்? காணாமல் போன பிரஜைகளுக்கு என்ன பதில் சொல்கிறாய்? எங்கே ஒளித்திருக்கிறாய்? உன் நோக்கம்தான் என்ன? இந்தக் கேள்விகளுக்குப் பதில் தெரிந்திருந்தும் கூறாவிட்டால் லேஸர் சித்திரவதை அனுபவிக்க நேரிடும். உடலைச் சேதப்படுத்திக் கொள்வதை விட பேசுவது உனக்கும் நல்லது. எனக்கும் நல்லது. பேசு.''

''........''

''பேசடா உன் பேர் என்ன?''

''........''

''வி ளை ல ம க னே! உனக்கு அழிவு ஆசை வந்து விட்டது. என்ன பிடிவாதம்? இப்போது என்ன செய்கிறேன் பார்!''

அந்த போஃபிஸர் பாக்கெட்டிலிருந்து அந்த நவீன சித்திரவதைக் கருவியை வெளியே எடுக்கையில் குரு பேசினான்.

''என் பெயர் ஸ்ரீநிவாச குரு-

''என் வயது 518.

இதே பூமியைச் சேர்ந்தவன்.

இன்னும் சொல்கிறேன் கேள்

....

..........''

விசாரணைக்குச் சென்ற அதிகாரி இன்னும் திரும்பி வராமல் போகவே வெளியறையில் காவலிருந்த இருவர் உள்ளே போய் அதிர்ந்தார்கள். குரு மட்டும் அப்பாவியாக அமர்ந்திருந்தான் ஆபீஸர் இல்லை.

''எங்கே அவர்?''

''எவர்?''

''போஃபிஸர்?''

''தெரியாது.''

''உள்ளேதான் வந்தார்.''

''தெரியாது.''

''என்ன செய்தாய் அவரை?''

''இந்தக் கிழவனை மதித்துக் கேள்வி ஏண்டா கேட்கிறாய். லேஸரில் எரித்து குப்பையில் எறிவதை விட்டு...'' என்ற இரண்டாமவன் லேஸர் துப்பாக்கியை உருவிக் குறி பார்த்தான்.

''பொறு... அவசரம் வேண்டாம். இவன் உலகமே கவனிக்கும் மனிதன். ஆத்மாவின் கோபம் பாய்ந்தால் நாம் பொது மக்கள் தீர்ப்பு பெற வேண்டி வரும். துப்பாக்கி வேண்டாம். பொறு. இவனைப் பேச வைக்க எனக்குத் தெரியும். நீ வெளியே இரு. பயந்துவிடப் போகிறாய்.'''

''........''

''டேய் உண்மையில் யார் நீ?''

''கடவுள்.''

''கொழுப்பா! என்ன செய்தாய் போஃபிஸரை? எங்கே மறைத்தாய் அவரை? சொல்லி விடு... இல்லாவிட்

டால், உன் அந்தரங்கம் அவஸ்தைப்படும்.''

குரு திரும்பிப் பார்த்தான்.

''இது என்ன தெரியுமா? வேஸர் வைப்ரேட்டர். தாங்க முடியாத அதிர்வை உள்ளே உண்டாக்கும். யார் நீ?''

''ஸ்ரீநிவாஸ குரு.''

''அப்படி வழிக்கு வா. எந்த ஊர்?''

''கோவிந்தம்பாளையம்.''

''மூன்றெழுத்துக்கு மேல் பேர் கிடையாது. ரீல் விடாதே!''

''சேலம்.''

''அதானே பார்த்தேன். அடி உதவற மாதிரி அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள். எங்கே போஃபிஸர்? எங்கே அவர்?''

''இதோ இங்கே'' என்று திறந்து காட்டினான்.

''அந்த மனிதன் நரமனிதன். மனிதர்களையே விழுங்கி விடுகிறானாம். எலும்பு கூட மிஞ்சாதாம்.''

''வேறு உலகிலிருந்து வந்தவனாக இருப்பான். எப்படிச் சமாளிக்கப் போகிறார்களோ? கோபத்துக்கு ஆளானால் என்னென்ன விபரீதம் நடக்குமோ?''

''ஒழுங்கா மம்மம் சாப்டு. படுத்தாதே. இல்லாட்டா மாயமனிதன் வந்து விடுவான். நம்மளையே சாப்டுருவான். வா வா!''

''வெளில போய்ட்டுச் சீக்கிரமா வீடு வந்து சேருங்க. யாராவது ஆறடி மனிதனைப் பார்த்தா போய் 'ச'ன்னு பேச வேண்டாம்.''

''மர்ம மனிதனைப் பிடித்து மூன்று நாட்கள் ஆகிறது. ஒன்றும் செய்ய முடியவில்லை. போஃபிஸர்களே காணாமல் போகிறார்களாம்.''

''எல்லாம் அழிவின் ஆரம்பம்!''



''ஆத்மாவுக்கு அவமானம்'' என்று போஸ்டர்கள் விஷமிகள் ஒட்டினார்கள். உலகம் பூராவும் ஒருவித பீதி பரவியது. விவி போட்டே வைத்திருந்தார்கள். எந்த நிமிடத்தில் மர்ம மனிதன் பற்றின செய்தி வருமோ?

குரு தலையில் ஹெல்மட் அணிந்து வந்த அந்த அதிகாரியை விநோதமாகப் பார்த்தான். குருவி தலையில் பனங்காய் மாதிரி இருந்தது. சிரிப்பு வந்தது.

''என்ன சிரிக்கிறாய்! குருவி தலையில் பனங்காயா?'' என்றார்.

அட! குரு நினைத்ததை அவர் எப்படி சொல்ல முடிந்தது? மாயா ஜாலமா?

''மாயா ஜாலமில்லை எல்லாம் டெலிவி உபாயம்.''

''டெலிவியா?'' என்றான் குரு.

''டெலிவி விஞ்ஞானி ஆர்யா கண்டுபிடிப்பு. இந்த ஹெல்மட் அணிந்து கொண்டால் நினைவைப் படிக்க முடியும். நீ பேச வேண்டாம். எல்லாம் நானே அறிந்து கொள்வேன். பாரதி யார்?''

திடுக்கிட்டுத் திரும்பினான் குரு. இது ஆபத்தில் முடியும். வேண்டாம்.

''பாரதி யார் என்றா கேட்டீர்கள்? பாரதியார் ஒரு கவிஞர். தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தை அழிக்கச் சொன்னவர்.''

''நான் கேள்விப்பட்டதில்லையே!''

''விவரமாகச் சொல்கிறேன் கேளுங்கள்.''

''இரு. நீ இவ்வளவு சகஜமாகப் பேச தப்போ, இந்தப் பனங்காய் எதற்கு; கழற்றி விடுகிறேன். இப்ப சொல்.''

''என் பெயர் குரு...''

என்று வழக்கம் போல் ஆரம்பித்தான் குரு.

அந்த அறை 510 ஓரமன் வெளிச்சம் தெறி மங்கலாக இருந்தது. நடுவில் பிரத்யேக இருக்கையில் குரு. வாகாய்ச் சாய்ந்து, கால் நீட்ட வசதியான குஷன் இருக்கை. எதிரே திரையில் சைகடெலிக் வண்ணங்களின் விளையாட்டு.

மனோதத்துவ அறிஞர் டாக்டர் ஷாங்கோ கண்ணுக்குத் தெரியாத சன்னமான ஊசியால் குரு கையில் எறும்பு கடித்தார். மெலிதான, சுகமான உறக்க நிலை குருவை இழுத்தது.

குருவைப் பேச வைக்க மூன்று ஆட்களைப் பலிகொடுத்த அரசு கடைசி ஆயுதமாக ஹிப்னாடிக் ரெக்ரஷனைப் பிரயோகித்தது. கைதேர்ந்த டாக்டர் ஷாங்கோ பாசிடிவ் ரிசல்ட் தருவதாக உறுதி சொல்லியிருந்தார்.

''குரு இப்போது நீ ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறாய்.

ஆழ்ந்த உறக்கம்.

இன்ஸ்பெக்டர் : கார் திருடன் யாராவது மாமூல் கொடுக்க வந்தானா?

போலீஸ்காரர் : எப்படிக் கண்டுபிடிச்சீங்க சார்?

இன்ஸ்பெக்டர் : வாசல்ல நிறுத்தியிருந்த நம்ம போலீஸ் வேனைக் காணோமே!

- அம்பை தேவா



நிம்மதியான உறக்கம்.

அமைதியான... உறக்கம்.

டீப்.... ஸ்லீப்.

டீப் .... ஸ்லீப்.

சுகமான உறக்கம்.

உன்னைத் தொந்தரவு செய்ய யாருமில்லை.

ஆழ்ந்த உறக்கம்.

உடலும் உள்ளமும் தளர்ந்த உறக்கம்.''

குரு இப்போது ஹிப்னாடிஸ உறக்கத்தில் ஆழ்ந்தான். உலகை மறந்த நிம்மதியான உறக்கம்.

''குரு நான் உன் நலனில் அக்கறை கொண்டவன்.

நான் சொல்வதெல்லாம் உன் நலனுக்கே!

என்னிடம் மட்டும் பேசப் போகிறாய்!

கேள்விகளுக்குப் பதில் சொல்லப் போகிறாய்.''

- ஷாங்கோ மிருதுக் குரலில் கட்டளைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

''நீ இன்னும் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்குகிறாய்

உன் மனம் இலேசாகி இருக்கிறது.

உன் நினைவுகள் இளகி, பின்னோக்கித் திரும்புகின்றன.

கடந்த காலம் நோக்கி நினைவுகள் பயணம்.

500 வருடங்கள் பின்னால் போகிறாய்

500 வருடங்கள்.

500 வருடங்கள் முந்தி.

இப்போது 500 வருடம் முன் நீ வாழ்கிறாய்.

நீ வாழ்ந்ததெல்லாம் நினைவுக்கு வருகிறது.

அதே இடம்.

அதே மனிதர்கள்.

நீ நிஜமாக வாழ்கிறாய்.

எங்கே சொல் பார்க்கலாம்.

உன் வாழ்க்கையை விவரி...''

ஷாங்கோவின் கட்டளைகளில் குரு தனது 25 வயதுக்குப் போனான். 25 வயதில் வாழ்ந்தான். அவன் விவரிக்க ஆரம்பிக்கையில் ஷாங்கோ அந்த டேப் ரிகார்டரை இயங்க வைத்தார்.

''என் பெயர் ஸ்ரீநிவாஸ குரு. என் வயது 25. நான் இப்போது சொல்லப் போகும் கதை முந்திக் கொண்டு ஏழாம் அத்தியாயம் போய் விட்டது. கதைச் சுருக்கம் இப்போது.

சூரியன் உதிக்கிறான்.

மலர்கள் பூக்கின்றன.

தினம் - தினம்.

என் வாழ்க்கை இன்னும் மொட்டாகவே

கனவில் மட்டுமே வேலை.

கிருஷ்ண ஜெயந்தி. என் பிறந்த நாள்.

விரக்தியில் மாடி...

வானத்தில் மின்னும்

ஜகஜ்ஜோதி மின்னல்.

என் உடல் பூராவும் பரவும் பரவச நிலை. உடல் லேசான மாதிரி ஓர் அதிர்வு. அருகில் வருகிறது. ஒளி விளையாட்டு. கண் கூசுகிறது.

இதற்கு முன் கேட்டிராத விநோதமான ஒலி அதிர்கிறது. உடல் செல்களில் எல்லாம் பரவசம். பரமானந்த நிலை.

எப்படி நான் அந்த வஸ்துவுக்குள் வந்தேன்?

அதை என்னால் விவரிக்க முடியவில்லை.

எப்படி? எப்படி? எப்படி?...''

இந்த இடத்தில் டேப்ரிகார்டர் அணைந்து போனதைக் கூட கவனிக்காமல் ஷாங்கோ ஒருவித ஆர்வத்தில் குருவை முன்னோக்கிக் கொண்டு வந்தார்.

50, 50 வருடங்களாக.

50, 50 வருடங்களாக.

அதே சமயம் அரசு முக்கிய அதிகாரிகளும், விஞ்ஞானிகளும், தலைவர்களும் ஆவலுடன் அந்த அறைக்கு வெளியே காத்திருந்தனர்.

மூன்று மணி நேரமாகியும் ஷாங்கோ வெளிவராததால் பொறுமையிழந்து கதவைத் திறந்து அனைவரும் உள்ளே நுழைய,

ஸ்ரீநிவாஸ குரு அந்த நாற்காலியில் உறங்கிக் கொண்டிருந்தான். ஷாங்கோவைக் காணவில்லை. இத்தனை பேர் வெளியே இருக்கையில் அவர் எப்படி மாயமாய் மறைந்தார்?

உடனே அங்கிருந்த டேப்பை ரீவைண்ட் செய்து போட, குரு ஏழாம் அத்தியாயத்தை விவரித்து விட்டு அந்த வஸ்துவுக்குள் மறைந்து போனான்.

எப்படி? எப்படி? எப்படி?

சரியான இடத்தில் முடிந்து போன டேப் மௌனம் சாதித்தது.

(தொடரும்)



கரைம்
ஆர். வஸ
"என்ன ஸார் இது? சமூக நாவலை இந்த அளவுக்குக் கொலை பண்ணியிருக்கீங்க?"
"அப்போ, இதை 'கிரைம்' நாவலா, போட்டுடுங்களேன்.....!"
"ஏண்டா, சோகமா இருக்கே?"
"போயும் போயும், ஒரு பொம்பள போலீஸ்கிட்டே, மாட்டிக் கிட்டேனேன்னு தான்!"
"உன் பெண்டாட்டியைக் கொஞ்சம், கண்டிச்சு வைடா....."
"ஏம்மா....?"
"என் முன்னாடியே, 'மாமியாரைக் கொன்ற மருமகள்'ன்ற கிரைம் நாவலை, அடிக்கடி படிக்கிறா....!"
பயங்கரமான கிரைம் சப்ஜெக்ட்'ன்னு இருந்தீ சார்..
எழுதிக் கொண்டு வாங்கன்னேன்..
எழுதும்போது பயத்திலே கை நடுங்குதே, எப்படி சார் எழுதுவேன்?


ஜோக்ஸ்
"உங்க பையன் எதிர் காலத்தில் பெரிய கிரைம் ரைட்டரா வருவான்..."
"எப்படி சொல்றீங்க?"
"இலைஉதிர் காலம்ன்னு எழுதச் சொன்னா, கொலை யுதிர் காலம்ன்னு எழுதறான்...."
"ஒரு நிமிஷம், நீ, யோசிச்சிருந்தா, உன் மனைவியின் சாவைத் தடுத் திருக்கலாமேப்பா..."
"ஒரு நிமிஷம் யோசிச் சிருந்தா, அவ, என்னைக் கொன்னுட்டிருப்பா மை லார்ட்.....!"
என் மனைவியை விஷம் வைச்சுக் கொன்னுடுவோம். அப்புறம், நாம கல்யாணம் பண்ணிக்கலாம், முனியம்மா...
ஓகே! ஆனா, ஒரு கண்டிஷன். அப்புறம், நமக்கு வேலைக்காரியே வைச்சுக்கக் கூடாது...!
"எவ்வளவு சிறப்பா பேர் வாங்கினாலும், என் பெண்டாட்டி, என்னை மட்டமா பேசிட்டாய்யா..."
"ஏன்?"
"'வீட்ல, எலி செத்துப் போய், நாலு நாளா ஸ்மெல் வருது... அது எங்கேந்து வருதுன்னு, கண்டு பிடிக்க முடியாத நீங்க என்ன சி.ஐ.டி.யோ'ன்னு மூக வாய்ல இடிச்சுக் காட்டறா...!"

அக்கறை

அந்த வார இதழ் அலுவலகம் இருந்த தெருவை நெருங்கிய போது, ராமச்சந்திரன் ராமச்சந்திரனாக இருக்க முடியவில்லை. விரட்டி விரட்டிக் கல்லெறியப்பட்ட நாயாக அவன். சலிப்பும் எரிச்சலுமாய்ப் பொருமிப் போயிருந்தான். 'யார் மீது பாயலாம், யாரைக் கடித்துக் குதறலாம்' என்று அலைபாய்ந்து திரிகிற உள் தீவிரம். உலர்ந்து, காய்ந்து கனன்று கிடந்தான்.

அலுவலகத்தில் நுழைந்தான். வாட்ச்மேன் அடித்த சல்யூட்டை வாங்கிக் கொண்டான். பதிலாகத் தலையசைப்பும் புன்சிரிப்பும் உதிர்த்து விட்டு உள் நகர்ந்தான். அதுவும் வழக்கமான செயல்பாடாய்.

நேராக நிர்வாகப் பிரிவுக்குள் நுழைந்தான். பழகி மரத்துப் போன நுழைவு. இடையில் எதிர்ப்பட்ட 'ஹலோ'க்கள், 'ஹவ் ஆர் யூ'க்கள், 'ஃபைன்'கள். எல்லாமே யந்திரச் சப்தங்களாய்...

வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்ட சூட்டோடு கேண்டீனுக்குள் நுழைந்து வடைக்கும் டீக்கும் டோக்கன் வாங்கினான். சப்ளையிலிருந்த புண்ணிய கோடி இவனைக் கண்டதும் புன்சிரித்தார்.


''ஹைய் ராம்ஸ், சௌக்யமா?''

''ஓகே புண்ஸ்.''

''என்னது?''

''வடையும் டீயும்தான் புண்ஸ்.''

இது இப்போதைய புது மோஸ்தர். மச்சி, பங்காளி, தலைவா என்று நண்பர்கள் பரஸ்பரமாய் அழைத்துக் கொள்கிற கேலி கிண்டல் காலா



மேலாண்மை
பொன்னுச்சாமி

வழியாகி, இது அறிமுகம். பெயரைச் சுருக்கி, 'ஸ்' சேர்த்துக் கொள்வது.


ராமச்சந்திரன் என்றால் ராம்ஸ். புண்ணிய கோடி 'புண்ஸ்'. காமராஜ் 'காம்ஸ்'. வெங்கடாசலம் 'வெங்க்ஸ்'. பொன்னுமணி 'பொன்ஸ்'.

இந்த விநோதச் சுருக்கத்தில் என்ன அர்த்தம்? நட்பின் அர்த்தம் அடையாளமாகிறது. நெருக்கத்தின் முகம். அந்யோந்யத்தின் வெளிப்பாடு. மன அண்மையில் எடுத்துக் கொள்கிற உரிமை.

புண்ஸின் ஜாலியான குசல விசாரிப்பு கூட இவனுள் ஒரு விளைவும் செய்து விடவில்லை. வறண்ட தொனியில் மரக்கட்டையாய்ப் பதில் சொல்லி விட்டு நகர்ந்தான்.

கேண்டீனுக்குள் காலை நேரச் சுறுசுறுப்பு. பரபரப்பான ஊழியர் நடமாட்டம். சுற்றிலும் சளசளப்பு. அர்த்தமற்ற மனிதக் கூப்பாடு. கொசுவின் ரீங்காரமாய் முகத்தில் மோதி மொய்க்கிற சப்த அதிர்வுகள்.

ரெண்டு மடக்கு டீ, கனத்த திரவமாய் உள்ளிறங்க, மெல்ல உயிர் அரும்புவதை உணர முடிந்தது. டீயின் அடர்த்தியான ருசி மனசுக்குப் பிடித்திருந்தது. ரசனையோடு மூன்றாவது மடக்கை விழுங்கும் போது, முகத்தில் கற்றையாய் வந்து மோதுகிற சிகரெட் புகை. குடலைப் பிடுங்குகிற குமட்டல் நாற்றம். வெகுண்டு போய்த் திரும்பினால்... புகையை ஊதிய ஜிப்பாக்காரன் எங்கோ பார்த்த நிலையில்.



ராமச்சந்திரனுக்குள் ஒரு கொந்தளிப்பு. கத்த வேண்டும் என்கிற மனத்தினவு. நாக்கு வரை பீறிட்டு வந்து விட்ட நாராசச் சொற்கள். நாகரிகம் நாக்கை மடக்க, வார்த்தைகளை நிறுத்தி எடை போட்டு வெளி விட்டான்.

"சார், சிகரெட் புகையைக் கொஞ்சம் தள்ளி ஊதுங்க."

ஜிப்பாக்காரன் பார்த்த பார்வையில் அலட்சியம்.

"ஏன், நீங்க தள்ளிப் போய் டீ சாப்புடலாமே?"

நூறு சத எகத்தாளம். மனிதனைப் பொருட்டாக நினைக்காத திமிர்த்தனம். நடப்புச் சமூகத்தின் குறியீடு. சாக்கடையில் புரண்டெழுந்த சந்தோஷ மதர்ப்பில் உரசிச் செல்கிற பன்றித்தனம்.

அவனுள் குப்பென்று ஒரு தீக்கற்றை. அந்த உணர்வை அணைக்கிற நீர்த் தெளிப்பாய் ஒரு பிரக்ஞை.

'ராம்ஸ், பொறுடா. நிதானம் காட்டு. சண்டைக்குப் பலியாகாதே. சண்டை விவேகமல்ல. வீரமல்ல. தரக்குறைவு. லகானைச் சுண்டு. நிறுத்து. உன்மத்தத்தை அடக்கு.'

இறுகிப் போய் மௌனமாய் நிமிர்ந்தான், ராமச்சந்திரன். பார்வையில் தெறிக்கிற வெப்பம். கற்றைக் கோபம்.

"டீசண்டா இருக்குறீங்க. பேச்சிலேயும் அதைக் காட்டலாமே."

"மத்தவர் உரிமையிலே குறுக்கே வுழுறதுதான், உங்க டீசண்டா?"

"எது உரிமை? சிகரெட் குடிச்ச புகையை விடுறதா?"

"புகையை விடாம எதை விடுறது?"

அவ்வளவுதான். ராம்ஸ் வெடித்து விட்டான். தாறுமாறான வெடிப்பும், சிதறலும். ஜிப்பாக்காரனும்தான். 'வாடா, போடா' என்று பலத்த வாய்ச் சப்தம். வெக்கை வார்த்தைகள். சூழலே தகிப்பாகி விட்டது.

அதிர்ந்து திகைத்துப் போன கேண்டீன். பதைத்துப் போய் மேனேஜரும், சிப்பந்திகளும் தலையிட்டு, சப்தம் போட்டு, இருவரையும் சமாதானப்படுத்தி, வெளியேற்றிக் கழித்தனர்.

அவமானப்பட்ட மனச் சீற்றத்தில் ராமச்சந்திரன். காயங்களில் அடிபட்ட வலி. கொதி பானையாய்த் தளதளக்கிற நெஞ்சோடு மாடியேறினான்.

தன்னை மறந்த நிலையில் வெந்த மனசின் சிடுசிடுப்பாய்த் தெறித்த முணுமுணுப்பு.

"ச்சே! மனுசனை மனுசனா மதிக்கிற பய... நாட்லே ஒருத்தனுமில்லே. எவன் கிட்டேயும் மனுசத்தன்மையேயில்லே. கால்லே ஒட்டுன எச்சிலா நெனைச்சு, மனுசனைத் தேய்ச்சுத் தள்ளிட்டுப் போறாங்களே..."

வீட்டில், டிபனுக்கு நேரமாகி விட்டதே என்று பதைத்துப் போய்ப் பரபரத்த போது, மனைவியின் அலட்சியமான சீறல். எடுத்தெறிந்து பேசிய அவளது சாடல். இழிந்த ஜந்துவாய்த் தன்னை உணரவைத்த அந்த அவமதிப்பு.

பஸ்ஸில் வந்தால்... கண்டக்டரின் அத்துமீறலான அதட்டல். செல்லாத நோட்டை பார்க்கிற தோரணையில் பார்வை. மன ஆழத்தில் பூரான் ஊர்கிற நடுக்கமான கூச்சம்.

சாக்குமூட்டையை இடிக்கிற மாதிரி வந்து ஒட்டி உரசுகிற சக பயணிகள். காது மடலில் சூடாய் மோதுகிற சுவாச அருவருப்பு. எரிச்சலும் எதிர்ப்புணர்வுமாய்த் திரும்பிப் பார்த்த இவனைப் புறங்கால்களால் ஏற்றுகிற அலட்சியம். கத்தியாய்

நெஞ்சில் சொருகி ரத்தம் பெருக்குகிற புறக்கணிப்பு.

ஊமைக் குமைச்சலாய்ப் பொருமிய இவனைக் கண்டனமாய்ப் பார்த்த சக பயணிகள்.

''அடுத்தவன் கைபடாம, அலுங்காமப் போகணும்னா, ஆட்டோவுல டாக்ஸியிலே போக வேண்டியதுதானே? பல்லவன்லே வந்தா... கூட்டத்துலே கால் கை படத்தானே செய்யும்?''

காயத்தில் உப்பையள்ளிப் போட்ட அவர்களது முணுமுணுப்புகள். நசுக்கப் பட்ட புழுவின் அவஸ்தையில் ராமச்சந்திரன்.

இங்கு வந்தால்... சிகரெட்காரன்!

சப்-எடிட்டர் பிரிவுக்கான அறையின் கதவைத் தள்ளிக் கொண்டு உள் நுழைந்தான்.

''ஹலோ... ராம்ஸ், என்ன லேட்?''

சக சப்-எடிட்டர்களின் உற்சாகச் சப்தங்கள்.

விசாரிப்பா, விசாரணையா என்று தொனியைக் கண்டு பிடிக்க முடியாத ஒரு தோரணையான 'குட்மார்னிங்' அது. முள்ளாய்க் குத்திய வரவேற்பு. எரிச்சல்.

வெறுமனே 'ஹலோ' மட்டும் சொல்லி விட்டு, அவர்களை மட்டம் தட்டிய திருப்தியில் டேபிளில் பேக்கை வைத்தான். சீட்டில் உட்கார்ந்தான். வாட்டர் பேக்கை டேபிளில் வைத்து விட்டு, சுவரை திமிர்ந்து பார்த்தான். மணி, பத்து நாற்பது.

துணுக்கு எழுதுகிற சப்-எடிட்டர் ஆங்கிலப் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். அவரவர் அவரவர் பணிகளில்.

இவன் முகத்தில் இன்னும் உட்கார்ந்திருக்கிற சிடுசிடுப்பு... மென்மையோ குழைவோ இல்லாத மன விறைப்பு. யார் யாரோ முறுக்கேற்றி விட்ட விறைப்பு.

பியூன் கொண்டு வந்த தபால்கள். கனத்த கனத்த கவர்கள், இன்லெண்ட் காகிதங்கள், கார்டுகள். தபால் முத்திரைக் காயங்களால் கசங்கலாயிருந்தன.

''காதோரம் லோலாக்கு'ன்னு பாடினாளேன்னு லோலாக்கு வாங்கிக் கொடுத்தது தப்பாப் போச்சு!''

''ஏன், என்ன ஆச்சு?''

''இப்ப, 'மூக்கோரம் புல்லாக்கு'ன்னு பாடித் தொந்தரவு பண்றா!''

- சி. ஆர். நாகராஜன்



இதுதான் இவன் பணி. மலைப்பும், சலிப்புமான பணி.

எல்லாவற்றையும் பிரிக்கணும். வகை பிரிக்கணும். வாசகர் கடிதங்களை - மறுப்புக் கடிதங்களை - கவிதைகளையெல்லாம் ரக வாரியாய் ஒழுங்குபடுத்தி அதனதன் டிபார்ட்மெண்டுக்கு அனுப்பணும். சிறு கதைகளைப் படிக்கணும். பிரபல எழுத்தாளர்கள் கதை என்றால், எடிட்டர் ரூமிற்கு அனுப்ப வேண்டும்.

எல்லாவற்றையும் ஒன்று விடாமல் படிக்கணும். பென்சில்களால் கோடுகள் போடணும். குப்பை குப்பையாயிருந்தாலும் வாசித்து சரிபார்த்து, திருத்தங்கள் செய்து, 'நோட்' எழுதி வைத்து எடிட்டர் பார்வைக்கு அனுப்பி வைக்கணும்.

ஆரம்பத்தில் குஷியாக இருந்து உற்சாக மூட்டிய பணி இது. எத்தனையோ எழுத்தாளர்களின் விதம்விதமான எழுத்தை வாசிக்கிற விநோத அனுபவங்கள்.

சீக்கிரத்திலேயே அலுப்பூட்டி விட்டது. பணி ஒரு சுமையாய் அழுத்திற்று. இவனது தனித்துவத்தை உள் ஒடுங்க வைத்து விட்டது.

தனித்துவத்துக்கான அங்கீகார வறுமை, திறமையை - காழுணர்ப்பை - ஊமையாக்கி விட்டது.

வந்திருக்கிற மேட்டர்களைத் திருத்தி, நகாசு வேலை செய்து, படைப்பாற்றலைக் காட்டி கதைகளைத் தேற்றிப் பிரசுரம் செய்து, எத்தனையோ புது எழுத்தாளர்களை ஆர்வமாய் உருவாக்கியிருக்கிறான். அந்த உழைப்பு, அந்த எழுத்தாளர்களால் கூட அங்கீகரிக்கப்படவில்லை. நன்றியும் பாராட்டும் ஆசிரியருக்கும், இதழுக்கும் தான். இவனுக்கில்லை.

பத்திரிகைகளில் சப்-எடிட்டர்களும், சினிமாக்களில் அஸிஸ்டெண்ட் டைரக்டர்களும் ஒரே ரகம். மாடாய் வேலைகள். நாயாய்ப் பாடுகள். பலனும், புகழும் மட்டும் வேறு யார் யாருக்கோ.

அஸிஸ்டெண்ட் டைரக்டர்களுக்காவது கூட்டத்தோடு கூட்டமாய் டைட்டிலில் கார்டு வரும். உறவினர்களிடம் காட்டி மகிழலாம். சப்-எடிட்டர்களுக்கு அதுவுமில்லை. இதழின் மொத்தப் புகழில் அடையாளம் தெரியாமல் புதைந்து, நாசமாய்ப் போக வேண்டியதுதான்.

இந்த ஏமாற்ற அனுபவங்களின் அடர்த்தியே பணியின் வெறுப்பாகவும் சலிப்பாகவும் ஆகி விட்டது. மன ஈடுபாட்டை கத்தரித்து, வயிற்றுப் பாட்டுக்கான மாரடிப்பாக்கி விட்டது. முகம் தொலைத்த வறட்டுப் பிழைப்பு. சுயமிழந்த கடுப்பு. ஒரு பகாசுர யந்திரச் சுழற்சியில் கண்காணாமல் போகிற ஒரு திருகாணியைப் போல சிறுமைப்பட்டிருக்கிற நிரந்தர வேதனை.

இந்த நுண்ணுணர்வுகளைப் புரிந்து கொள்ள ஒரு நாதியில்லை. பலனடைந்த எந்தப் பாவியும் இவனை ஒரு பொருட்டாக



யெல்ட்சின் பார்த்த ஜோதிடம்!

சிக்கல்கள் வரும்போது ஜோதிடம் பார்ப்பது பலருக்கும் சகஜம். இதற்கு போரிஸ் யெல்ட்சினும் விதிவிலக்கல்ல! ஒரு கட்டத்தில் தமது பதவி ஆட்டம் கண்டுவிடுமோ என்ற பயத்தில், தமது ஜாதகத்தைப் பரிசீலனை செய்ய சென்னையைச் சேர்ந்த ஏ. பார்த்தசாரதியை அணுகியிருக்கிறார். பூமியில் ருஷ்யாவும் இந்தியாவும் அமைந்துள்ள நிலையில் வித்தியாசங்கள் இருப்பதால் ஜாதகம் கணிப்பதில் சில பிரச்னைகள் ஏற்பட்டன. ஒருவழியாகக் கணக்குப் பார்த்துப் புள்ளி போட்டு ருஷ்யத் தலைவரின் பதவிக்கு ஆபத்தில்லை என்று ருஷ்ய ஜாதகம் மூலம் தெரிவிக்கப்பட்டது. இப்போது ஜாதக அதிகாரிகள் பலருக்கும் ஜோதிடத்தில் பயங்கர ஈடுபாடு!

நன்றி : சண்டே

தகவல் : கிருஷ்ணவேணி ரங்கநாதன்

நினைத்ததில்லை. இவனையும் - இவன் தொழிலையும் - மனசால் தொட்டுணர்ந்து கௌரவிக்கிற மனிதநேயம் எவனிடமுமில்லை; எந்த எழுத்தாளனிடமும் இருந்ததில்லை. ச்சே!

''மனுசத்தன்மையேயில்லாத இவங்க எழுத்துலே என்ன ஈரம் இருக்கும்? எப்படியிருக்கும் உயிர்ப்பு? சவக்கதைகள்!''

உள்மன முணுமுணுப்பாய் நீண்ட நினைவுகளோடும், பெருமூச்சோடும் கத்தையைப் பிரித்தான். எடுத்த எடுப்பில் ஒரு கடிதம். வாசகர் கடிதம். நடப்பு வார 'இஷ்யூ'வைப் பாராட்டிய கடிதம். அட்டை டு அட்டையாகப் பாராட்டு. சகலத்திற்கும் பாராட்டு.

பாராட்டில் போலித்தனம் பல்லை இளித்தது. அந்தக் கடிதமே ஒரு பிச்சைப் பாத்திரத்தின் 'ஐயா, தர்மவானே' என்ற குரலாக இவனுக்குத் தோன்றியது.

'இப்படி வாசகர் கடிதம் எழுதியிருக்கிறவன், பிரகர மேட்டர் எதுனாச்சம் அனுப்பியிருப்பானே...'

அனுபவம் யூகமாய் உறுத்த, அவசர அவசரமாய் கலந்த கவர்களைப் புரட்டினான், ராமச்சந்திரன். அதில் ஒன்று, இதே ஃப்ரம் அட்ரஸோடு.

அந்தக் கர்ப்ப கவரை உடைத்தால்... இவன் நினைத்த மாதிரியே பிரகரத்துக்குக் கெஞ்சுகிற கடிதத்துடன் கூடிய ஒரு மேட்டர். முழுவதையும் படித்துத் துழாவினாலும், ஒரு துணுக்குக் கூட தேறாது. வெறும் குப்பை.

இப்படி காக்காய் குணத்தோடு உதயமாகிற எழுத்தாளனிடம் மருந்துக்குக் கூட முதுகெலும்பு இருக்குமா? நூறு சதப் போலியாயிருக்கிற இவனெல்லாம் என்னத்துக்குப் பேனா பிடிக்கணும்? தன்னையே மனுசனா மதிக்காத - சுயமரியாதையற்ற ஜந்து. ச்சே!

கை எந்திரமாய்ச் செயல்பட்டது. வாசகர் கடிதங்களைப் பொறுக்கி, இன்னொரு சப்-எடிட்டரிடம் தந்து கவனிக்கச் சொன்னான், ராமச்சந்திரன். மறுப்பும், விளக்கமுமாய் வந்த இன்லெண்ட் லெட்டர்களை வாசித்து, நீக்க வேண்டிய பகுதிகளில் சிவப்புப் பென்சில் கோடுகள் போட்டு பியூன் மூலம் எடிட்டர் ரூமிற்கு அனுப்பினான்.

வந்திருக்கும் சிறுகதைகளைப் பிரித்து, நம்பர் போட்டு, ரெஜிஸ்டரில் பதிவு செய்துவிட்டு, கதைகளோடு கவரையும் பின் அடித்து, விரித்த நிலையில் ஃபைல் பண்ணினான்.

கடைசியாக அந்தக் கவரைக் கிழிப்பதற்கு முன்பு, ஃப்ரம் அட்ரஸைப் பார்த்தான். அதே எழுத்தாளர். கிராமத்து எழுத்தாளர். அடிக்கடி கதை எழுதி அனுப்புவார். கதையோடு இணைத்து நிச்சயமாய் ஒரு கடிதம் வரும். அதில் 'கதையில் கை வைக்க வேண்டாம்' என்கிற உறுதியான வேண்டுகோள். அதற்கான நியாயங்கள்.

எரிச்சலூட்டுகிற வேண்டுகோள். அத்துமீறலான வேண்டுகோள். முகம் பார்க்காத அந்த எழுத்தாளர் மீது இவனுக்கு எப்போதுமே வெறுப்பும், கோபமும்தான்.

சக சப்-எடிட்டர்கள் மூன்று பேருமே அந்த எழுத்தாளர் கட்சி. ''தன்னம்பிக்கையுள்ள எழுத்தாளர். சுயமதிப்புமிக்க எழுத்தாளர்களில் ஒருவர்'' என்பது அவர்கள் வாதம்.

அடிக்கடி இது பற்றி சர்ச்சை நடக்கும்.

இவன் வாதமே தனி. கேள்விகளை மாறி மாறி அடுக்குவான், மிக உக்கிரமாய்.

''கதையை பப்ளிஷ் பண்ற பொறுப்புள்ள எடிட்டருக்கு அதைத் திருத்துற ரைட்ஸ் உண்டு. அந்த ரைட்ஸை இவர் எப்படிப் பிடுங்கலாம்?''

''இந்தப் பத்திரிகையிலே கதை பப்ளிஷாகணும், பப்ளிசிட்டி பெறணும்னு ஆசைப்படுற இந்த ஆளு, கண்டிஷனுக்கு மட்டும் உட்பட மாட்டேன்னு சொல்றது என்ன நியாயம்? கொள்ளுன்னா வாயைத் திறக்குறதும், கடிவாளம்னா மூடிக்கிறதும் பம்மாத்து இல்லியா? போலித்தனமில்லியா?''

''ஒரு கதையைக் காயப்படுத்தாம திருத்துற இலக்கிய அறிவு கூட இல்லாமலா, எடிட்டோரியல் போர்டு இருக்கும்? அதை அலட்சியமா எடுத்தெறியுறது அத்துமீறல் இல்லியா?''

''தனக்கு மட்டும் கூடுதலா - விசேஷச் சலுகை கேட்குறது பிரபுத்துவக் குணமில்லியா? மனித நேயம், சமத்துவம்னு வாய்

லியப் பேசுற எழுத்தாளன் கிட்டே இந்தக் குணம் இருக்கலாமா?''

இதெல்லாம் இவன் உக்ரமாய்க் கேட்கிற கேள்விகள். அசலான மனக் கொதிப்போடு வெறுப்பாய்த் துப்புகிற வாதங்கள்! ஆனால், கேட்காமல் உள்ளுக்குள் நிரந்தரமாய் உறுத்துகிற கேள்வி ஒன்று உண்டு. உண்மையில் அதுதான், மற்ற கேள்விகளுக்கெல்லாம் மூலப் பிறப்பிடம்.

'கதையில் கை வைக்க வேண்டாம்' என்கிற இந்த வேண்டுகோள், சப்-எடிட்டர் தொழிலையே துச்சமாக நினைக்கிறது. மிச்ச மீதியாயுள்ள சொற்ப அதிகாரத்தையும் பிடுங்கிக் கொள்கிறது.

கதையை வாசித்து, திருத்த வேண்டிய பகுதிகளில் பென்சில் கோடுகளும், நீக்க வேண்டிய இடங்களில் சிவப்புக் கோடுகளும் போட்டு 'நோட்' எழுதி அனுப்பி வைக்கிற சப்-எடிட்டர் அதிகாரத்தையே காலில் போட்டு நசுக்கி விடுகிறது.

''என் கதையை வாசித்து அபிப்பிராயம் சொல்கிற தகுதி கூட உனக்குக் கிடையாது'' என்று இவனைப் பார்த்து எகத்தாளம் பண்ணுகிற வேண்டுகோள்.

இவனை மட்டுமல்ல - இவனது பணியையும் சேர்த்துச் சிறுமைப்படுத்துகிற திமிர்த்தனம். சக மனிதர்களில் ஒருவனான சப்-எடிட்டரை நம்பாமல் - மதிக்காமல் - அலட்சியம் செய்கிற குரூரம்.

நினைக்க நினைக்க அவனுள் நெருப்பின் ஜ்வாலைகள். காலையிலிருந்தே தளதளத்துக் கொண்டிருந்த தகிப்பு. யாரையாவது கடித்துக் குதற வேண்டுமென்று துடியாய்த் துடித்த வெறி. வடிகாலற்ற உள் குமைச்சலின் அடர்த்தியான சீற்றம்.

கவரைப் பார்த்தான். பிரித்து நம்பர் போடாமலேயே குப்பையில் ஒழித்துக் கட்டி விட்டால் என்ன? பிறரை மதிக்காத இவன் கதையை மட்டும் நான் ஏன் பொருட்படுத்தணும்? சப்-எடிட்டரைத் தூக்கி யெறிகிற இந்த எழுத்தாளனை - நாம் தூக்கி யெறிந்து விட வேண்டியது தான்...

எதிர் வினையாற்றத் துடித்த மனத் துடிப்பு கையில் இறங்க - இதைக்



காணாமலாக்கு வதன் மூலமே தனது அதிகாரத்தை - தனது இருப்பை - இருப்பின் அர்த்தத்தை தானே உணர முடியும் என்ற நினைப்போடு டேபி ளுக்கடியில் உள்ள கூடையில் போடப் போனவனுக்குள், ஒரு சிறு தயக்கம். ஒரு சின்ன நெருடலான தப்பாசை.

பிரித்துப் பார்த்து விட்டு... கிழித்துப் போட்டால் என்ன.. மேலோட்டமாய் ஒரு பார்வை மேய்ந்து விட்டு, காணாமல் ஆக்கி விட வேண்டியதுதான்...

பிரித்தான். நாலாய் மடித்த மடிப்புகள் விரிய மறுத்து அடம்பிடிக்கின்றன. கதையின் இணைப்பாய் ஒரு கடிதம். அதே வேண்டுகோள். 'கதையில் கை வைக்க வேண்டாம்' என்கிற பணிவான வேண்டுதல். 'பிரசுரிக்க இயலாவிட்டால் திருப்பி அனுப்பி விடுங்கள்' என்கிற திமிர்த்தனம்.

'ச்சே' என்கிற வெறுப்போடு கடிதத்தைப் புரட்டி விட்டுப் பார்த்தால்... கதையின் தலைப்பு : 'அர்த்தம்.'

கதையின் முதல் வாக்கியமே அவன் ஆத்மாவுக்குள் அதிர்வோடு இறங்கிற்று. அவனைக் கண்டியிழுத்து வசீகரித்து உள் இழுத்தது:

''சங்கடத்தில் மாட்டிக் கொண்ட சப்-எடிட்டர் சங்கரநாராயணன் மீள வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தார்.''

படிக்கப் படிக்க இவனுள் அலைமோதுகிற பரவசம். அள்ளி இழுத்துக் கொண்டு பாய்கிற மகிழ்ச்சிப் பிரவாகம்.

இவனது மனசையே - உணர்வையே - ஒத்தியெடுத்த மாதிரியான கதை. திரைக்குப் பின்னால், முகம் மறைத்துக் கொண்டு புதிய புதிய எழுத்தாளர்களைப் பிரபலப்படுத்துகிற நல்ல பண்பு. பிரதிபலன் கருதாத கர்ம சிந்தனை. வார்த்தைச் சிக்கனமில்லாத கதைகளை 'எடிட்' பண்ணுகிற கலையின் மூலம், நீவிச் சிங்காரித்து நேர்த்தியாக்கி விடுகிற திருஷ்டியற்புதம்...

ராமச்சந்திரனுக்குள் உணர்வுப் பரபரப்பு. முகம் தெரியாத அந்த எழுத்தாளனின் கையை முத்தமிடணும் போல ஓர் உள் தீவிரம்.

இவனை மட்டுமல்ல - இவனது தொழிலை மட்டுமல்ல - அதன் ஆத்மாவையே, அதன் சகல அழகுகளோடு வார்த்தைப்படுத்தி மகிமைப்படுத்தியிருக்கிற கச்சிதம். அதையும் செயற்கையாகச் செய்யாமல், இயல்பு குன்றாத யதார்த்தமாய்...

அவனது விறைப்பு, கிடுகிடுப்பு, எல்லாம் இருந்த இடம் தெரியாமல், மாயமாய் மறைய... மனிதனை மனிதனாக மதிக்கிற மகத்துவத்தைத் தரிசித்த பரவசத்தில் அவன் கிறுகிறுக்க....

எடிட்டர் ரூமிற்கு அக்கணமே அக்கதையை அனுப்ப விரும்பினான். பியூனுக்காகக் காத்திருக்கிற பொறுமையில்லாமல் அவனே எழுந்த போது -

அவன் அவனாகியிருந்தான்.

சக்கரவர்த்தித் திருமகன்

"ஓடி வாருங்கள், ஓடிவாருங்கள்!" என்றாள் சீதை, தான் பார்த்துக் கொண்டிருந்த மானை ராமனும் லக்ஷ்மணனும் பார்க்க வேண்டுமென்று.

"சீக்கிரம் வாருங்கள், வாருங்கள்" என்றாள் மறுபடியும்.

அவர்களும் வந்து அந்த விசித்திர மானைப் பார்த்து வியந்தார்கள்.

லக்ஷ்மணனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. 'இது மானல்ல, மாரீசன்' என்று உடனே அவனுக்குத் தோன்றிற்று. அதற்கு முன் மாரீசன் மானாக உருவம் தரித்துக் கொண்டு காட்டில் வேட்டையாட வந்த பலரை ஏமாற்றிக் கொன்று தின்று கொண்டிருந்தது ராம லக்ஷ்மணர்களுக்குத் தெரியும்.

லக்ஷ்மணன் "இத்தகைய மிருகம் இயற்கையில் கிடையாது. இது ராக்ஷசனுடைய மோசம்" என்றான்.

"இந்த மானைப் பிடித்து வாருங்கள். இதை ஆசிரமத்தில் கட்டி வளர்க்கலாம். நான் காட்டில் பார்த்த அத்தனை மிருகங்களிலும் இது மிக அழகாக இருக்கிறது. ஐயோ! அதைப் பாருங்கள். என்ன நிறம், என்ன விளையாட்டு. இதற்குச் சமானம் ஏதுமில்லை" என்று சீதை மானைப் பார்த்துத் தாங்க முடியாத ஆசை மேலிட்டு அதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள். "இதை எப்படியாவது பிடித்துத் தாருங்கள்" என்று மிக வேண்டினாள்.

"நாம் ஊருக்குத் திரும்பும் காலம் கிட்டி வந்து விட்டது. இதை அயோத்திக்குக் கொண்டு போவோம். காட்டிலிருந்து ஏதாவது விசித்திரப் பொருள் நம்முடைய அந்தப்புரத்துக்குக் கொண்டு போக வேண்டுமல்லவா? பரதன் இதை மிகவும் அனுபவிப்பான். இதை நான் அவனுக்குத் தரவேண்டும். எப்படியாவது, நாதா, இதைப் பிடித்து வாருங்கள்" என்று ராமனை வருந்திக் கேட்டாள்.

லக்ஷ்மணனுக்கு விஷயம் பிடிக்கவில்லை என்று கண்டு ராமனை இன்னும் அதிகமாக வருந்திக் கேட்டுக் கொள்ள ஆரம்பித்தாள். ஒரு ஆசை மனத்தைப் பலமாகப் பற்றிக் கொண்டு விட்டால் அதைத் தடுக்கும் நம்முடைய பந்து மித்திரர்கள் மேல் எவ்வளவு பிரியமானவர்களானாலும் கோபம் உண்டாகி விடுகிறது. இதை பகவான் கீதையில் எவ்வளவு பரிஷ்காரமாகச் சொல்லியிருக்கிறார். அது அன்று சீதையின் உள்ளத்தில் நிகழ்ந்து விட்டது.

"அதோ தங்கமாகவே இருக்கிறது, பார்! அதோ வெள்ளி மயமாகவே இருக்கிறது, பார்! இதைப் பிடிக்க முடியாமல் போனால் அம்பு எறிந்து, தோலையாவது ஊருக்குக் கொண்டு போவோம். இதைப் போன்ற விசித்திரமான தோல் நாம் பார்க்கப் போவதில்லை. கீழே விரித்து உட்காருவதற்கு எவ்வளவு விநோதமாக இருக்கும்! போய் விடும்! போய்ப் பிடித்து வாருங்கள், அல்லது தோலையாவது எனக்குத் தர வேண்டும்" என்றாள்.

"ஐயோ, அதன் கொம்பைப் பாருங்கள்! இப்படிக் கேட்கிறேனே என்று என் மேல் ஆயாசப்பட வேண்டாம்! எனக்கு இதன் பேரில் அவ்வளவு ஆசை. தருவீர்களா, இல்லையா?" என்று விடாமல் ராமனைக் கேட்டுக் கொண்டாள். "நக்ஷத்திரங்கள் போல் பிரகாசிக்கிறது, பாருங்கள்!" என்றாள்.

இவ்வாறு சீதை ஆசைப்படுவதைப் பார்த்து ராமன் நிச்சயம் செய்து கொண்டான். 'லக்ஷ்மணன் சொன்னதில் உண்மை இருந்த போதிலும் ராக்ஷசனாயிருந்தாலென்ன, கொன்று விடுவது நலம்தானே. இதில் பயம் என்ன? பிடிக்க முடியாமல் போனால் அம்பு செலுத்தி மானை அடித்து, சீதைக்குத் தோலைத் தரலாம். அவள் இவ்வளவு பிரியப்படும் பொருளை நான் அவளுக்குச் சம்பாதித்துத் தரவேண்டாமா?' என்று தீர்மானித்துக் கொண்டு லக்ஷ்மணனுக்குச் சமாதானம் சொல்லி,

ராஜாஜி

''வில்லும் அம்பும் கொண்டு வா'' என்றான்.

லக்ஷ்மணனுக்குச் சம்மதமில்லை. ஆயினும் ராமன் வில்லும் கையுமாக மானைத் தொடர்ந்து சென்றான்.

''லக்ஷ்மணா, ஜாக்கிரதை! சீதையைப் பார்த்துக்கொள். மானைக் கொன்று விட்டுச் சீக்கிரம் கொண்டு வந்து விடுகிறேன். கவலைப்படாதே. ராக்ஷசனாயிருந்தாலுமென்ன? வாதாபியின் கதி இந்த ராக்ஷசனுக்கும் ஆகும். மோசம் செய்ய வந்திருந்தால் அகஸ்தியரைப் போல் நானும் மோசக்கார ராக்ஷசனை அவன் மோசத்துக்கே அவனை இரையாக்கி விட்டு ஒழிப்பேன். என்னை இந்த மான் என்ன செய்யும்? மானாயிருந்தாலும் சரி, அரக்கனாயிருந்தாலும் சரி'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

''ஜாக்கிரதை! சீதையைப் பார்த்துக் கொள். எந்தச் சமயத்தில் எது நேருமோ என்று வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். அலட்சியமாக இருக்காதே!'' என்று போகும்போது சொல்லி விட்டுப் போனான்.

தெய்வம் எல்லா விதத்திலும் விபத்துக்கு ஏற்பாடு செய்து விட்டது. சாதாரணமாக லக்ஷ்மணன் பாபரப்பாக இருப்பான். இந்தச் சமயம் அவனுக்குச் சந்தேகம் உண்டாகி எச்சரிக்கை செய்தான். அதற்கு எதிரிடையாக, எப்போதும் மிக ஜாக்கிரதையாக இருந்த ராமசந்திரன் இந்தச் சமயம் சீதையின் இஷ்டத்தை, சிறிய விஷயத்திலும் பூர்த்தி செய்ய வேண்டும் என்று, லக்ஷ்மணன் சொன்னதைத் தட்டி மாய மானைத் தொடர்ந்து போய் விட்டான்.

ராவணனுக்குப் போதிய அவகாசமும் சந்தர்ப்பமும் தருவதற்காகக் கைக்குச் சிக்குவது போலவே காட்டிக் கொண்டு மானானது ராமனை வெகு தூரம், விதி மனிதனை இழுத்துப் போவது போல், இழுத்துக் கொண்டு போய் விட்டது.

மெல்ல மெல்ல கால் எடுத்து வைக்கும், ஓடாமல் அங்கே நின்று வெறித்துப் பார்க்கும். திடீர் என்று பயந்தாற் போல் மேலே குதிக்கும். காதை நீ



டும். உடனே நாலு குளம்புகளையும் மார்போடு சேர்த்து மேலே துள்ளும். ஒரே பாய்ச்சலாகக் காட்டிற்குள் காற்று வேகமாக ஓடி மறையும்.

மிதித்தது மெல்ல மெல்ல
வெறித்தது, வெருவிமீதில்க்
குதித்தது, செவியை நீட்டிக்
குராதும் உரத்தில்க் கூட்டி
உதித்தெழும், உவதை உள்ளம்
என்றிவை உருவச் செல்லும்
கதிக்கொரு கதியும்வேறே
காட்டிய(து) ஒத்த தன்றே.

மறைந்த மாதிரி கொஞ்ச நேரம் இருந்து திடீர் என்று ஒரு உயர்ந்த இடத்தில் நின்று தன் அழகைத் தனியாகக் காட்டும். மேகங்கள் ஆகாயத்தில் உலாவ அவற்றோடு கலந்து காட்சி தரும். பிடித்து விடலாம் போல் கிட்ட நிற்கும் கிட்டப் போனால் தூரமாகப் போய் விடும். நின்றது போல் இருக்கும், அப்படியே மறைந்து விடும்.

குன்றிடை இவரும் மேகக்
குழுவிடைக் குதிக்கும், கூடச்
சென்றிடின் அகலும், தாழிந்
திண்டலாம் தகைமைத் தாகும்
நின்றதே போல நீங்கும்
நிறிவழி நேசம் நீட்டும்
மன்றலங் கோதை மாதர்
மனம் எனப்போயிற் றம்மா!

மாரீசனுக்கும் மரணம் கிட்டியது என்று பட்டு விட்டது. அதே கணத்தில் ராமனும் 'இனி போதும் தொடர்ந்தது' என்று வில்லை வளைத்து அம்பைச் செலுத்தினான். மாரீசன் ''ஐயோ, சீதையே! ஐயோ, லக்ஷ்மணா!'' என்று ராமன் குரலில் உரக்கக் கத்தி விட்டு மாண்டான். மானும் சமயம் நிஜ வடிவம் வந்து விட்டது. மலை போன்ற சரீரத்துடன் மாரீசன் ரத்தம் பெருகப் பூமியில் விழுந்து புரண்டு இறந்தான்.

''லக்ஷ்மணன் சொன்னது மெய்யாயிற்று'' என்றான் ராமன். மோசத்தைக் கண்டான்.

''இந்தக் கூக்குரலைக் கேட்டு சீதை என்ன வெல்லவோ எண்ணிப் பயப்படுவாளே!'' என்று யோசித்தான்.


பிறகு 'ஆனால் பயம் என்ன? லக்ஷ்மணன் பக்கத்திலிருக்கிறானல்லவா?' என்று சமாதானப்படுத்திக் கொண்டான்.

வெய்ய வந்தன்
உருவொடு வீழ்தலும்
செய்ய(து) அன்றெனச்
செப்பிய தம்பியை
'ஐயன் வல்லன்! என்
அருயிர் வல்லன்! நான்
உய்ய வந்தவன்
வல்லன்!' என்றுன்னினான்.



''எத்தகைய தம்பியை நான் பெற்றேன்! வனத்தில் எனக்கு எத்தகைய துணைவனைப் பெற்றேன்!'' என்று ராமன் தன் அன்புக்குரிய இளைய பெருமானை நினைத்து நினைத்து மனத்தில் பாராட்டுகிறான். அடுத்த கணம் தம்பிக்கு என்ன நேரிடுகிறது. அவன் காதில் எத்தகைய நாராச மொழிகளைக் கேட்க வேண்டியதாகிறது என்பதை அறியான் ராமன். விதியோ விதி!

(தொடரும்)



ஓசோன் ஆராய்ச்சிக்கு ஒரு வேவு விமானம்!

சாதாரண வர்த்தக ஜெட் விமானங்கள் 40,000 அடி உயரத்தில் பறக்கக்கூடியவை. சுமார் 60,000 அடி உயரத்தில் கான்கார்டு அதிவேகப் பயணியர் விமானம் செல்கிறது. 1,10,000 அடி உயரத்துக்கு மேலே ஓசோன் ஆராய்ச்சிக்கென உயர்மட்ட பலூன்களைச் செலுத்தி வருகிறோம்.

சுமார் 85,000 அடி உயரத்தில் பறக்கும் வேவு விமானங்களில் ஒன்று பிளாக் பேர்டு - எஸ்.ஆர். 71. இது இவ்வாண்டு மார்ச் 9-ம் தேதி தனது வெள்ளோட்டப் பயணம் மேற்கொண்டது. அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமான இந்த விமானம் நாசா விண்வெளி நிறுவனத்தின் கீழ் இயங்கும்.

'கரும் பறவை' என்றழைக்கப்படுகிற இது, காற்றில் ஒலி பரவும் வேகத்தை விட மூன்று மடங்கு வேகத்தில் பறக்கிறது. அதாவது நொடிக்கு 3000 அடி பாய்ச்சல்.

விண்ணில் சுமார் 57,300 அடி உயரம் தாண்டியதுமே 'ஸ்ட்ராட்டோஸ்ஃபியர்' (stratosphere) என்கிற சீரடுக்கு மண்டலம் ஆரம்பமாகி விடும். இந்தச் சீரடுக்குப் படலத்தில்தான் ஓசோன் உற்பத்தி. இந்த ஓசோன் மண்டலத்தின் வெப்பநிலை மைனஸ் 56.5 பாகை செல்சியஸ்.

'சூரியஒளியிலிருந்து வெளிப்படும் அபாயகரமான புறஊதாக் கதிர்களைத் தடுத்து பூமியைப் பாதுகாக்கின்ற இந்த ஓசோன் குறித்து பலூன்கள், செயற்கைக் கோள்கள் வழி ஆராய்ச்சி நடத்தி வரும் வேளையில் இந்த 'பிளாக் பேர்டு' விமானமும் தன் பங்கிற்கு புறஊதாக் கதிர் ஆய்வில் ஈடுபட்டது.

இதற்கென 'சி.சி.டி.' என்கிற மின்னேற்றம் இணைக்கப்பட்ட கருவி (Charge Coupled Device) மூலம் தகவல்களைப் பதிவு செய்து கொண்டு பின்னர் பரிசோதனைக் கூடத்தில் ஆய்வுகள் தொடரலாம்.

ஒருநாளில் 16 தடவை 'சூரியோதயம்' கண்டு திரும்புகிற விண்வெளி ஓடப் பயணிகள் நிலை ஒரு விஷயத்தில் கொஞ்சம் பரிதாபம்தான்.

விண்வெளி ஓடங்களின் உள்ளே சகல சௌகரியங்களும் உண்டு. ஆனால் இந்த விண்வெளி ஓடக் கழிவறைகளில் துர்நாற்றம் தவிர்க்க முடியாத உபத்திரவமாகி விட்டதாம்.

பார்த்தது - நாசா நிறுவனம். புதிதாகக் கட்டமைத்துள்ள 'எண்டவர்' (Endeavour) விண்வெளி ஓடத்தில் - பழைய டிஸ்கவரி, கொலம்பியா போன்ற ஓடங்களிலிருந்ததை விட மூன்று மடங்கு செலவில் அதாவது 23.4 மில்லியன் டாலர் செலவு செய்து அதிநவீன கழிப்பறை ஒன்றை நிர்மாணித்தது!

சாதாரண வீட்டுக் கழிப்பறையில் 85 பாகங்கள் இருப்பதாகக் கொண்டால் இந்த நவீன விண்வெளிக் கழிப்பறையில் 4000 உறுப்புகள் அடக்கமாம். இத்தனைக்கும் இது தெருவோரம் இருக்கும் தொலைபேசிக் கூண்டில் பாதி அளவே உள்ள இடத்திலுள்தான் அமைந்துள்ளது. இதனை இயக்க நான்கு நூறு வாட் பல்பு எரிக்க ஆகும் மின் ஆற்றல்தான் தேவைப்படும். மலஜலம் கழிக்க மட்டுமன்றி, சாக்கடை அகத்தங்களைச் சுத்திகரிக்கும் (sewage treatment) நிலையமும் இதில் அடக்கம்!

'கழிப்பறைக்கு இவ்வளவு செலவா, தேவைதானா' என்று வெள்ளை மாளிகையிலேயே பலத்த சர்ச்சை நடந்து அங்கீகாரம் பெற்றது!

– நெல்லை சு. முத்து.

படம் : கொலம்பியா விண்வெளி ஓடம்

32. அமைச்சர் ஓலை; அரையன் பயணம்

"கங்க மண்டலமும் சிங்கண மென்னும் பாணியிரண்டும் ஒரு விசைக் கைக் கொண்டு..."

- என குலோத்துங்களின் மெய்கீர்த்தி எழுதப்படக் காரணமாயிருந்த அந்தப் படை, காலிங்கராயனின் உத்தரவுக்காகக் காத்திருந்தது. உரிய வேல்களும் வாட்களும் சாளுக்கியப் போருக்குப் பிறகும் தீராத தாகத்தைத் தெரிவித்துக் கொண்டிருந்தன.

ஜெயந்தன் கூறியவைவற்றைச் சர்வசாதாரணமாகக் கேட்டுக் கொண்ட காலிங்கராயன், "விவரமாகச் சொல்" என உத்தரவிட்டான்.

"கங்க மன்னனைக் கோட்டையிலிருந்து வெளியே இழுத்துப் போராட வேண்டியிருக்கும் என நாம் நினைத்தது தவறு பிரபு. சிங்கணனும் சேர்ந்து கொண்டதால் அவன் துணிவு அதிகரித்திருக்க வேண்டும். நதியிலிருந்து இந்தக் கால்வாய் பிரியுமிடத்தில் பாசறை அமைத்திருக்கிறான். இரண்டாவது ஜாமத்தில் நம்மை எதிர்பாராது தாக்கவும் உத்தேசித்திருக்கிறான்!"

காலிங்கராயனின் புருவம் உயர்ந்தது. "அவன் உத்தேசம் உனக்கெப்படித் தெரிந்தது?"

"குவளால பரமேசுவரன் உதவினான் பிரபு."

"யார் அவன்?"

பதில் அரையனிடமிருந்து வந்தது. "அமராபரனின் முன்னோன். சிங்கணன் நாட்டை இணைக்கும் பெரும் கருங்கற் பாலத்தை இந்த ஆற்றின் குறுக்கே அமைத்தவன். அந்தப் பாலத்தினடியில் மறைந்து அவர்களின் திட்டத்தை ஜெயந்தன் அறிந்திருக்க வேண்டும். என்ன ஜெயந்தா?"

ஜெயந்தன் பிரமித்தான். "தங்களுக்கு எப்படித் தெரிந்தது பிரபு?"

"இதில் ஒன்றும் அதிசயமில்லை, ஜெயந்தா. கவிநாராயண பட்டரிடம் பயின்ற போது இந்த கங்கநாட்டைப் பற்றியும் குவளால பரமேசுவரன் கட்டிய அந்தப் பாலத்தைப் பற்றியும் கூறியிருக்கிறார். சிங்கணநாட்டையும் பங்கள நாட்டையும் கங்க நாட்டுடன் இணைக்கும் அந்தப் பாலம் நமக்கு நேர் எதிரிலிருக்கிறது. நீ பரமேசுவரன் பெயரைக் கூறியதும் மீதியை நான் யூகித்தேன்" விளக்கினான் அரையன்.

"ஆம் பிரபு. அங்கு நான் மறைந்து நின்று கங்கன், படைத்தலைவனிடம் கூறியதைக் கேட்டேன். அது மட்டுமல்ல, நாம் கங்க நாட்டு எல்லையிலிருந்து யானைப் படையைப் பக்கவாட்டிலேயே அழைத்து வருவதையும் அவன் அறிந்திருப்பதாகத் தெரிகிறது."

"அப்படியா?" காலிங்கராயன் கேள்வியில் திருப்தி இருந்தது.

"ஆம் பிரபு. அவனது யானைப் படை முன்னணியிலும் காலாட்படை பக்கவாட்டிலும் நிற்கின்றன. சிங்கணனது புரவிப்படை பாலத்தை ஒட்டி பின் பகுதியில் அணிவகுத்திருக்கிறது."

பாண்டியன் மகள்

விஷ்வக்ஸேனன்

ஆற்றல்மிக்க எதிரியைச் சந்திக்கப் போகிறோம் என்பதால் போர் மகிழ்ச்சியைத் தர "நன்று, நன்று" என்று சிலாகித்த காலிங்கராயன், "மதுராந்தகா, தாக்குதலை எப்படித் துவங்கலாம்?" என்று விசாரித்தான்.

சாளுக்கிய விக்கிரமாதித்தனின் பெரும் படையைப் பல போர் முனைகளில் எதிர்கொண்டவனும் படைகளை நடத்துவதில் இணையற்றவனுமான சோழர் படையின் பிரதான படைத் தலைவன் காலிங்கராயனின் கேள்வியால் சற்றே சங்கடமடைந்த அரையன், ஆசான் முன்பு சோதிக்கப்படும் சீடனின் மனோநிலையை அடைந்தான். மெல்லத் தானறிந்த யுத்த தந்திரத்தை விளக்க ஆரம்பித்தான்.

"படைத் தலைவரே, யானைப் படையை முன்னால் நிறுத்தி இருக்கிறான், கங்கன்."

"ஆம்."

"நமது காலாட்படையின் வில்லாளிகளை முன்னணியில் நிறுத்துவோம். அவர்களுக்குப் பாதுகாப்பாகப் புரவிப் படை தொடரட்டும். கங்கனை நெருங்கியதும் வேல்களையும் அம்புகளையும் பொழியலாம். யானைகள் பிரண்டு திரும்பியதும் ஏற்படும் இடைவெளியில் நமது புரவிகள் பாய்ந்தால் கங்கன் அணிவகுப்பு சிதறும்."


''பிறகு?'' காலிங்கராயன் முகத்தில் முறுவல் விரிந்திருந்தது.

''நமது படையின் ஒரு பிரிவு கால்வாயின் மறுகரையின் வழியே ஜெயந்தன் கூறிய பாலத்தை அடையலாம். சிங்கணனின் புரவிப் படையை நாம் பக்கவாட்டில் தாக்க இயலும். பக்கவாட்டுத் தாக்குதல் எத்தனை அபாயமானதென்பதைத் தாங்கள் அறிவீர்கள். சிங்கணன் படை சிதறியதும் நமது யானைகள் களத்திலிறங்கட்டும். பின்புறம் நதியிருப்பதால் கங்கன் படை இருபுறமும் நெறிக்கப்படும். ஒன்று அவன் போராட வேண்டும். அல்லது நதியில் குதித்துத் தப்ப வேண்டும்'' என்றான் அரையன்.

கவியின் சீடன் விளக்கிய திட்டத்தால் மிகுந்த உற்சாகமடைந்த காலிங்கராயன் அரையனது முதுகில் அறைந்த அறை அவனுக்குப் பெரும் பட்டயம் கிடைத்ததைப் போல இருந்தது.

அரையனின் திட்டப்படியே இரு பிரிவுகளாகப் பிரிந்த சோழர் படையின் ஒரு பிரிவு அரையன் தலைமையில் மறுகரையில் ஏறி நகர்ந்தது. கால்வாயின் ஓரமே சென்று பின் மரக்கூட்டங்களினூடே வளைந்த அந்தப் பாதையில் முன்னணியில் அரையனும் அடுத்து ஜெயந்தனும் சென்றனர். புதர்களிலும் மரநிழல்களிலும் பதுங்கி நின்ற இரண்டொரு கங்க ஒற்றர்கள் ஜெயந்தனின் கூரிய பார்வைக்கும் குறுவாட்களுக்கும் பலியானார்கள்.

பாலத்தை அரையன் நெருங்கு முன் மறுபுறத்தில் தாரைகள் ஒலித்தன. காலிங்கராயன் தனது தாக்குதலைத் தொடங்கி விட்டதை உணர்ந்த அரையன் தன் வாளை உயர்த்தினான். பந்தங்கள் திடீரென எரிந்தன. தடதடவெனப் பாலத்தில் குளம்பொலிகள் ஒலிக்க, உயர்த்திய வாட்களுடன் சோழர் படை சிங்கணனின் புரவிப் படையின் மீது பாய்ந்தது. சிங்கணன் தன் படையை அணிவகுத்துத் திருப்பு முன் காற்றைப் போல் புரவிகளில் பாய்ந்த சோழ வீரர்கள், சரமாரியாக சிங்கணன் வீரர்களை வெட்டித் தள்ளினர். பின்னால் வரிசையாகப் பெரும் விற்களைத் தரையில் நாட்டி அம்பு மழை பொழிந்த வில்லாளிகளையும் கண்ட



சிங்கணன், கோபத்துடன் தன் புரவியை அரையனிருந்த திசையில் திருப்பினான். எதிரில் பாய்ந்து வரும் சோழர் படையை நடத்துபவன்தான் சாளுக்கிய ஜெயதுங் கனை வாட்போரில் கொன்றவன் என்ப தைத் தனது உபதலைவனொருவன் மூலம் அறிந்திருந்த சிங்கணன், அந்த உயரமான வாலிபனை வியப்புடன் பார்த்தான். அகல மும் கனமுமான தன் பெரும் வாளைச் சுழற் றியபடியே அரையனை நேருக்கு நேர் சந்தித் தான்.

தன் பெரும் வாளை அந்த வாலிபனது மெல்லிய நீண்டு வளைந்த வாள் அத்தனை உறுதியாகத் தடுத்து, திசை திருப்பவும் இயலுமென்பதை எதிர்பார்த்திராத சிங்கண னின் வியப்பு அதிகரித்தது. கனமான தனது வாளை வெகு அலட்சியமாக இலக்கி லிருந்து திருப்பி விடுவதையும், எந்தப் பக்கத்தில் தாக்கினாலும் முன்னதாக அங்கு அவன் வாள் வந்து நிற்பதையும், கண்ட சிங்கணன், சற்று நேரத்தில் எதிரிலிருப் பவன் சாமானிய வீரனல்ல என்பதைப் புரிந்து கொண்டான். அந்த வாலிபனின் மெல்லிய கரம் அசாத்திய உறுதியுடன் லாக வமாக வாளைச் சுழற்றியது. வாட்போரில் வெல்ல இயலாதவன் என்று பெயரெடுத்த சாளுக்கிய ஜெயதுங்கனை இவன் வென்ற தாகக் கூறப்பட்ட செய்தி உண்மை என்ப தற்கு அவனுக்கு வேறு நிருபணம் தேவைப் படவில்லை.

மறுபுறத்தில் கங்கமன்னன் அமரா பரணனைச் சந்தித்த காலிங்கராயனின் நிலை வேறு விதமாயிருந்தது.

முகப்பில் நின்ற யானைப் படை எதிரில் திடீரென்று தோன்றிய பந்தங்களையும் வீரர் களையும் கண்டு ஒருகணம் திகைத்தாலும் பின் உக்கிரமாகத் தாக்கத் தொடங்கியது. இரண்டாவது ஜாமத்தில் தாக்கத் திட்டமிட் டிருந்ததால் யானைகள் கள்ளை உண்டு போருக்குத் தயாராகவே இருந்தன. புரவிப் படையின் முதல் தாக்குதலுக்கு அதிகம் அசைந்து கொடுக்காத அந்த அணி வகுப்பைக் கவனித்த காலிங்கராயன், தனது வாளை உயர்த்தி சைகை செய்யவே, புரவி களினூடே புகுந்து முன்னால் வந்த வீரர்கள், விற்களைத் தரையில் நிறுத்தி அம்புகளைப் பொழியவும் துரித கதியில் வேல்களை ஒன்றன் பின் ஒன்றாக எடுத்து வீசவும் தொடங்கினர்.

மத்தகங்களிலும் கழுத்திலும் கூரிய அம்புகளும் வேல்களும் பாய்ந்ததால் துதிக் கைகளை உயர்த்தி, பயங்கரமாகப் பிளிறிய யானைகள் திரும்பி, கங்கன் படையினூ டேயே புகுந்து ஓடத் தொடங்கின. அணி வகுப்பு குலைந்து சற்று இடைவெளி கிடைத்ததும் புரவிப் படையை நன்றாக

உள்ளே புக உத்தரவிட்ட காலிங்கராயன், பக்கவாட்டில் வந்து கொண்டிருந்த தனது யானைப் படையை, கங்கனின் காலாட் படை வீரர்களைத் தாக்குமாறு உத்தர விட்டான். இரண்டாகப் பிரிக்கப்பட்ட கங்க னது படை பின்புறம் ஓடிய நதியாலும் மது ராந்தகனது புரவிப் படையாலும் இடதுபுறத் தில் புகுந்த யானைகளாலும் திணற ஆரம் பித்தது. முன்னாலிருந்த இடைவெளியில் செல்வதற்குப் பெரும் தடையாக, காலிங்க ராயன் ராட்சதனைப் போல் வாளை வீசிய படி வந்து கொண்டிருந்தான்.

காலருத்திரனைப் போல் யுத்தம் செய்த காலிங்கராயனின் புரவி பாய்ந்த இடங்களி லெல்லாம் கங்க வீரர்கள் கழுத்தும், கைக ளும், உடலும் வெட்டுப்பட்டு விழுந்தனர். அவன் புரவி சென்ற பாதை மதங்கொண்ட யானை நடந்து சென்ற கரும்புத் தோட்ட மாகக் காட்சியளித்தது.

மூன்று பக்கங்களிலும் நெருக்கப்பட்ட கங்க வீரர்கள் பின்வாங்கி நதியில் குதித்துத் தப்ப முயன்றனர். இறுதி வரை நின்று போராடிய கங்கமன்னனுடன் போரிட்ட வீரர்கள், களத்தில் விழுந்து கிடந்தனர். காலிங்கராயனின் வேல் மார்பில் குத்தி நிற்க, கங்கமன்னன் அமராபரன் நிலத்தில் விழுந்து கிடந்தான். கிடைத்த இடைவெளி யில் தப்பிய சிங்கணன், மிச்சம் மீதியிருந்த

வீரர்களுடன் கோட்டையை நோக்கி ஓடினான்.

விடிவதற்குச் சற்று நேரமேயிருந்ததால் வானில் எழுந்த வெள்ளியும், நடந்த போரைக் கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டிருந்த நிலாவும் பொன்முகலி யாற்றில் கலந்து ஓடிய குருதியைக் கண்டு திகைத்து நின்றன.

போர் முடிந்தும் வாளை உறையிலிடாத காலிங்கராயன், சோழர் படையை கங்கன் கோட்டையை நோக்கித் திருப்பினான்.

மூன்று காத தூரத்துக்குப் பாய்ந்து சென்ற சோழர் படை, கோட்டையை அடைந்த போது கிழக்கு வெளுக்கத் தொடங்கி இருந்தது.

சிறுவனாக இருந்த கங்க இளவரசன் இரண்டாம் அமராபரணனை அழைத்துக் கொண்ட சிங்கணன், மேற்கு வாயில் வழியே தனது நாட்டை நோக்கிப் பின் வாங்கியிருந்தான்.

இருந்த சிறு எதிர்ப்பை ஒரு நாழிகை நேரத்தில் முறியடித்த காலிங்கராயன், கங்கனது கோட்டையில் புலிக்கொடியை பறக்க விட்டான்.

அடைந்த வெற்றியைக் காக்கவும், ஏறிய புலிக்கொடி இறங்காதிருக்கவும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்த காலிங்கராயன், மூன்றாவது நாளாக கங்கன் கோட்டையில் தங்கி, படைகளை மீண்டும் தெற்கே நடத்திச் செல்வது பற்றி அரையனுடன் விவாதித்துக் கொண்டிருந்தான். அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோதே உள்ளே நுழைந்த கங்கபாடியின் அமைச்சரையும் மற்ற பிரதானிகளையும் வரவேற்ற காலிங்கராயன்,

''கங்கபாடியின் அமைச்சரே, பிரதானிகளே, இன்று முதல் கங்க நாடு எமது சோழ மன்னருக்கு உட்பட்ட சிற்றரசாக ஆகிறது. இதை ஏற்பவர்கள் இந்தக் கோட்டையில் தங்கலாம். மறுப்பவர்கள் இப்போதே வெளியேறி விடுவது நல்லது'' என்றான்.

அமைச்சர் கூறினார், ''சோழப் படைத் தலைவரே, நாங்கள் சோழ குலோத்துங்கரின் ஆட்சியை ஏற்கிறோம்.''

''மகிழ்ச்சி. அப்படியானால் ஆண்டு தோறும் ஒரு லட்சம் பொற்காசுகளையும், ஆயிரம் புரவிகளையும் கப்பமாகச் செலுத்தி விடுங்கள். சிங்கணனுடன் தப்பிய உங்கள் இளவரசனுக்கோ அல்லது நீங்கள் தேர்ந்தெடுக்கும் வேறு ஒரு நபருக்கோ சிற்றரசன் என்று பட்டயம் அளிக்கப்படும். யார் சிற்றரசன் என்று தீர்மானிக்கும் பொறுப்பை உங்களிடமே ஒப்படைக்கிறேன்'' என்றான் காலிங்கராயன்.

அமைச்சர் சற்று நேரம் மற்ற பிரதானிகளுடன் கலந்து பேசினார். இறுதியாகத் தங்கள் இளவரசனையே சிற்றரசனாக ஏற்பதாகத் தெரிவித்தனர்.

கங்கரை வெல்வதற்கு முக்கிய கருவியாக அமைந்த அந்தப் பாலத்தின் கருங்கற்களில் கங்கநாட்டு கல் தச்சர்களை வைத்து சோழரது வெற்றியைப் பொறிக்க ஏற்பாடு செய்தான் காலிங்கராயன்.

அனைத்து ஏற்பாடுகளையும் முடித்து அனைவரையும் அனுப்பி விட்டுத் திரும்பிய காலிங்கராயன், அரையனது மதிப்பில் மிக உயர்ந்து நின்றான். இத்தகைய படைத் தலைவர்களைப் பெற்றது சோழ மன்னர் செய்த பாக்கியம் என்றால் அதில் தவறேதுமில்லையென்றே தோன்றியது அவனுக்கு. படைத் தலைவனுடனேயே இருந்து இன்னும் பலவற்றையும் கற்றுக் கொள்ளத் தீர்மானித்தான்.

அவன் தீர்மானத்தை உடைக்கவும் உடனடியாக அவனைப் படைத் தலைவனிடமிருந்து பிரிக்கவும் அன்று மாலையே சோழப் பேரமைச்சரிடமிருந்து ஒரு தூதன் வந்து சேர்ந்தான்.

படைத்தலைவனைக் கண்டு வணங்கிய தூதன் அமைச்சரின் ஓலையை ஒப்படைத்தான்.

ஓலையைப் படிக்கப் படிக்க படைத் தலைவன் முகத்தில் விரிந்த சிந்தனையைக்

அருள்வாக்கு



கோயில் ப்ராகாரத்தைத் தேய்த்து அலம்பி விடுகிற காரியத்தைச் செய்வதாக வைத்துக் கொள்வோம். 'ஸாக்ஷாத் ஸர்வேச்வரன், ஸர்வ வ்யாபி, அவனுடைய ஸர்வ வ்யாபகத்தைப் புரிந்து கொள்ள முடியாத அசடுகளான நமக்காக ஒரு அர்ச்சையில் (விக்ரஹத்தில்) குடிகொண்டிருக்கிற இடம் இது. இதில் அழுக்கு சேராமல் காப்பாற்றினால் நம் ஹ்ருதயத்திலும் அழுக்கு சேராது; இதில் ஊர்வாசிகள் எல்லாரும் சேர்ந்து கொண்டால் ஸமூஹத்திலும் த்வேஷம், பேதம் முதலான அழுக்குகள் சேராது' என்ற எண்ணத்தோடு, நல்ல பக்தியோடு, நன்றியோடு தேய்த்து அலம்பினால் விசேஷம். ஆனால் தேய்த்து அலம்புகிற கார்யம் இருப்பதாலேயே இப்படிப்பட்ட ஸத்சிந்தனையில் அப்படியே அமிழ்ந்து போக முடியாது. ப்ராகாரத்தைச் சுத்தம் செய்வதென்றால் தண்ணீர் இழுப்பது, அதற்கான பாத்ரங்கள் ஸம்பாதனம் செய்வது, கட்டைத் துடைப்பத்தை இறுக்கிக் கட்டி வைத்துக் கொள்வது, பிசுக்குப்பட்ட இடங்களில் ஒரு தரத்துக்கு இரண்டு தரமாக அழுத்தித் தேய்ப்பது, த்வாரம் அடைத்துக் கொண்டிருக்கிற இடத்தில் குத்தி விடுவது என்று எத்தனையோ கார்யம், உபகார்யம் வரத்தான் செய்யும். குத்தி விடும் குச்சியே சில ஸமயத்தில் அடைத்துக் கொண்டு விடுகிறாற் போல, இந்தக் கார்யங்களே ஸத்சிந்தனையைக் கொஞ்சம் அடைக்கத்தான் செய்யும். ஆனாலும் அதற்கான பக்வம் வரும் வரையில் - அந்தப் பக்வமும் ஸத்கர்மாக்களாலேயேதான் வரும், அப்படி வரும் வரையில் - த்யானம் என்று உட்காருவதை விட ஸத்கர்மாவில் ஈடுபடுவதுதான் சிந்தனையை ஓரளவுக்காவது நல்வழியில் செலுத்துவதற்கும், இதைவிட ரொம்பப் பெரிய அளவுக்குக் கெட்டதிலிருந்து திருப்பி விடுவதற்கும் உபகாரம் செய்வது. 'பாஸிடிவ்' - ஆக அது செய்வதை விட, 'நெகடிவ்'-ஆகச் செய்யும் உபகாரம் பெரிசு.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

கவனித்த அரையன், ''படைத்தலைவரே, ஏதேனும் கவலை தரும் செய்தி வந்துள்ளதா?'' என்று விசாரித்தான்.

''ஆம். மதுராந்தகா, மாறவர்மன் கோட்டாற்றங்கரையில் திரட்டும் படை வலுவடைந்து வருவதாகவும், கொற்கை வரையில் ஈழத்துக் கலங்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார் அமைச்சர்.''

''அப்படியானால் பாண்டியர் தாக்குதலை விரைவில் எதிர்பார்க்கலாம்'' என்றான் அரையன்.

''எதிர்பார்ப்பதா? மதுராந்தகா! பாண்டியன் தாக்குதலைத் தொடங்கியே விட்டான்!''

''என்ன?'' அரையன் ஏறக்குறைய எழுந்து விட்டான்.

''ஆம் மதுராந்தகா, கோட்டாற்று எல்லைப் பகுதியில் உள்ள கிராமங்களையும் சிறிய நகரங்களையும் ஆக்கிரமித்திருக்கிறான் மாறவர்மன். அவன் படை, தாக்குதலைத் தொடர்ந்தபடியே வடக்கே நகர்ந்து கொண்டிருக்கிறது.''

அரையன் முகத்தில் சிந்தனை படர்ந்தது.

''வடக்கிலா வடமேற்கிலா படைத்தலைவரே?'' அரையன் கேள்விக்குக் காரணம் விளங்காத படைத்தலைவன் மீண்டும் அமைச்சரின் ஓலையில் குறிப்பிட்டிருந்த ஊர்களின் பெயர்களைப் படித்ததும் வியப்படைந்தான்.

''ஆம். மதுராந்தகா, அவன் பாதை வடமேற்கில்தான் செல்கிறது!''

அதன் பிறகு அரையன் நீண்ட நேரம் மௌனம் சாதித்தான். அவன் புத்தி துரிதமாக இயங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்த படைத்தலைவன் கவியின் சீடனை உற்றுக் கவனித்தபடி அமர்ந்து கொண்டிருந்தான்.

நீண்ட நேரம் கழித்து மௌனத்தை உடைத்த அரையன், ''படைத்தலைவர் உத்தரவிட்டால் நான் இன்றே சேரநாட்டிற்குக் கிளம்புகிறேன்'' என்றான்.

ஓலையின் இறுதி வரிகளை மீண்டும் படித்த படைத்தலைவனது விழிகள் மறுமுறையும் வியப்பில் மலர்ந்தன.

அரையன் மதுராந்தகனை உடனடியாக சேரநாட்டுக்குச் செல்ல உத்தரவிட்டிருந்தார் பேரமைச்சர்!

(தொடரும்)

பகடையாட்டமா? பாதுகாப்பா?

உங்கள் சேமிப்பை எங்கே டெபாசிட் செய்யப் போகிறீர்கள்?

வீட்டு வசதி போன்ற நீண்டகாலத் தவணைமுறையில் கடனுதவி வழங்கும் ஒரு நிதி நிறுவனத்திலா? அல்லது

36 மாதங்களுக்கு மட்டுமே முதலீடு செய்யும் ஒரு நிதி நிறுவனத்திலா?


வீட்டு வசதி நிதியுதவி நிறுவனங்கள் வீடு கட்டுவோருக்கும் ஃப்ளாட் வாங்குவோருக்கும் கடனுதவி அளிக்கின்றன. இத்தகைய கடனுதவிகள் 15 ஆண்டுகளுக்கும் கூடுதலான மாதத் தவணைகளில் திரும்பப் பெறப்படுகின்றன. இந்த நிறுவனங்களுக்கு அடமானமாக அளிக்கப்படும் சொத்துக்கள் பாதுகாப்பானவையாகக் கருதப்படுகின்றன. இருந்தாலும், இந்நிறுவனங்களின் பணப் புழக்கத்தில் பிரச்சனைகள் ஏற்படக்கூடும். ஏனெனில், இவை மாதத்தவணைகளாக மிகக் குறைந்த தொகைகளையே வசூலிக்கின்றன. இத்தகைய நிறுவனங்களில் இரண்டாண்டு காலத்துக்கு நீங்கள் டெபாசிட் செய்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இவை திரும்ப வசூலிப்பது நீண்ட காலத் தவணைகளில் குறைந்த தொகைகளாக இருப்பதால், இவற்றால் உங்கள் டெபாசிட்டுகளை எவ்வாறு உரிய நேரத்தில் திருப்பி அளிக்க முடியும்?

ஸ்ரீராம் நிறுவனங்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவை சராசரியாக 36 மாதத் தவணைகளில்தான் நிதியுதவி அளிக்கின்றன. லாரிகளை வாங்குவதற்கு மட்டுமே தவணை முறை நிதியுதவி அளிக்கின்றன. லாரி போக்குவரத்துத் தொழில் ரொக்க அடிப்படையில் நடைபெறுகிறது. எனவே, லாரி உரிமையாளர் வாங்கிய கடனைக் குறிப்பிட்ட தவணைகளில் திருப்பிச் செலுத்தி விடுகிறார்.

மிகத் திறமையோடு இயங்குவதால் கொடுத்த கடனைத் திரும்ப வசூலிப்பதில் 100% வெற்றியைப் பெற்றுவிடுகின்றன.

ரூ.100 கோடிக்கும் கூடுதலான டெபாசிட் தொகையைப் பெறவும் முடிந்துள்ளது.

கூடுதல் பணப்புழக்கம், முழுமையான பாதுகாப்பு, உடனடியான சேவை — இவையனைத்தும் சேர்ந்து இன்று டெபாசிட்தாரர்கள் தேர்வில் முதல் இடம் வகிக்கும் நிறுவனம் ஸ்ரீராம்.



ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்
ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
ஸ்ரீராம்-சிடி யூனியன் ஃபைனான்ஸ் லிமிடெட்
மூகாம்பிகா காம்ப்ளெக்ஸ்,
மூன்றாவது மாடி,
4, லேடி தேசிகாச்சாரி ரோடு,
மயிலாப்பூர்,
சென்னை - 600 004.
போன்: 4990960|4991363|4993768|4990336|4993704

ADWAVE/SSC/4590 B

''கமாண்டோ!''



மத்திய ரிஸர்வ் போலீஸ் படையின் (CRPF) நடவடிக்கைகள் குறித்த 'டெமான்ஸ்டிரேஷன்' ஒன்றை ஆவடி காம்ப்பில் இரண்டு நாட்கள் சமீபத்தில் நடத்திக் காட்டினார்கள். கார்த்திகேயன் ஐ.பி.எஸ்ஸின் ஏற்பாடு. ''என்னமோ ரிஸர்வ் போலீஸ், ரிஸர்வ் போலீஸுங் கறாங்க, அவங்க என்னதான் பண்றாங்கன்னு தெரிஞ்சிக்க வேண்டாமா? அதுக்காகத்தான்'' - கார்த்திகேயன்.

கலவரப் பிரதேசங்களில் நிலைமையைக் கட்டுப் படுத்த மத்திய அரசால் அனுப்பப்பட்டு, மாநில அரசின் கட்டுப்பாட்டில் இயங்குவது CRPF.

லோக்கல் போலீஸுக்கும் இவர்களுக்கும் உள்ள வேறுபாடு தொப்பை சைஸிலிருந்தே தொடங்குகிறது.

பயிற்சிகளிலும் அணுகுமுறைகளிலும் CRPF நபர்கள் முக்கால் மிலிட்டெரி.

எந்த நிமிஷத்திலும் நாட்டின் எந்தப் பகுதிக்கும் செல்லத் தயாராக இருப்பவர்கள். எந்த ஒரு ஜவானுக்கும் மரணம் குறித்த பயம் இருக்கிறதாகத் தெரியவில்லை. 'கமாண்டோ...' என்று கத்திக் கொண்டு நெருப்பைத் தாண்டுகிறார்கள், பதினைந்தடி உயரத்திலிருந்து சர்வசாதாரணமாகக் குதிக்கிறார்கள், முள் கம்பிகளுக்கு அடியே ஊர்ந்து கடக்கிறார்கள், முப்பதடி உயரத்தில் கயிற்றில் நடக்கிறார்கள், ஏ.கே. 47 ஐயும் அதன் தாத்தாவையும் குறி பிசகாது உபயோகிக்கிறார்கள், ஸ்டண்ட் மாஸ்டர் இல்லாமலே அசாதாரணமாய்ச் சண்டையிடுகிறார்கள், இரவு, பகல், உணவு, உறக்கம், உறவு, ஊர் பாராது உழைக்கிறார்கள். ''ஹமாரா தேஷ்'' என்று ஆர்ப்பரிக்கிறார்கள். ஓய்வு கிடைக்கும் போது முற்றிலும் மாறுபட்ட மனிதர்களாய் ஜெலுதால் பாடல்களை இசைக்கிறார்கள். மிமிக்ரி, மோனோ ஆக்டிங் என்று கொஞ்சமாகப் பொழுது போக்குகிறார்கள்.



* கார்த்திகேயன்






* துளசி நாயுடு



* சிங் சாஹிபி



ஆண்களை விடவும் பெண் கமாண்டோக்கள் அதி உற்சாகமாகச் செயல்படுவது காண்க:

''என்னிக்காவது சாகத்தானே போறோம்? நாட்டுக்காகச் சாகறதுல சந்தோஷம்தான்.'' - தமிழ் சினிமா டயலாக் அல்ல; ஆந்திராவைச் சேர்ந்த பெண் கமாண்டோ துளசி நாயுடுவின் சீரியஸான வார்த்தைகள் இவை.

வியர்வை சொட்ட-அல்ல-கொட்ட வெயிலில் பேண்ட், பூட்ஸுடன் பரேட் முடித்து, முகம் அலம்பி, புடவை கட்டி 'பூவே செம்பூவே' பாடும் அனிதா - தமிழ் கமாண்டோ.

''லோக்கல் போலீஸுடன் இவர்களை 'கம்பேர்' பண்ணவே முடியாது. இவர்களது பயிற்சியும், திறமையும், அணுகுமுறையும் அக்மார்க், ISI ரகம். ஈ, எறும்பு நுழைய முடியாத இடங்களில் கூட இவர்கள் நுழைந்து விடுவார்கள்'' என்றார் துணை கமாண்டர் R.D. சிங் சாஹி.

ரொம்ப சரி, ஆனால் 'அயோத்தி கலவரத்தைத் தடுக்க அனுப்பப்பட்டு சும்மா வேடிக்கை பார்த்து நின்றவர்களும் இவர்கள்தானே? இலங்கைக்கு அனுப்பப்பட்ட அமைதிப் படையில் இவர்களும்தானே இருந்தார்கள்? கர்நாடகத் தமிழர் படுகொலை சந்தர்ப்பங்களில் மைய அரசால் அனுப்பப்பட்டு சென்ற இவர்களால் பிரமாதமாக என்ன சாதிக்க முடிந்தது?' என்றெல்லாம் கேட்டால்....

''இந்தக் கேள்விக்கு நாங்க பதில் சொல்லக்கூடாது'' என்ற பதில்தான் கிடைக்கும்.

ஆனால் நமக்குத் தெரியும் பதில் என்ன என்று:

''அரசியல் குறுக்கிடு.''

– பா. ராகவன்

புகைப்படங்கள் : கோபிநாத்

வாசகர் குமுறல்

விடுமுறை தந்த வேதனை!

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் பொன்விழா ஆண்டாம்; அதற்காக மத்திய-மாநில அரசு காரியாலயங்களையும் வங்கிகளையும் மூடிவிட்டார்கள். விடுதலைப் போராட்டத் தலைவர்களை இதயத்தில் இருத்தி நாடு மேம்பட அன்று நாம் வழக்கத்தைவிட அதிகமாக உழைத்திருக்க வேண்டுமேயன்றி வெட்டிப் பொழுது போக்கியிருக்கவே கூடாது. ஒரு நாள் விடுமுறையால் தேசத்துக்கு எத்தனையோ கோடி நஷ்டமாகியிருக்கும். போதாக்குறைக்குப் பள்ளிகளுக்கு முன்கூட்டியே அரசு அறிவிக்காததால், பிள்ளைகளைப் பெற்றோர் பள்ளிகளில் விட்டுச் செல்ல, திடீர் விடுமுறை அறிவிக்கப்பட, குழந்தைகளும் பெற்றோரும் பட்டபாடு....

அனுபமா.

சென்னை,

8000 இடைநிலை ஆசிரியர்களை அரசுப் பள்ளிகளில் நியமிக்க, அரசு செய்யும் முறையற்ற நடவடிக்கைகளைப் பற்றி ஒரு சில வாரங்கட்கு முன்பு ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தீர்கள். சமீப செய்திப்படி அரசு சில மாறுதல்களைச் செய்திருக்கிறதாம். டிப்ளோமா பெற்றவர்கட்குத் தேர்வு வைப்பதே தவறு. வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த சீனியாரிடி அடிப்படையில் தான் பணி நியமனம் செய்ய வேண்டும் என்று கோரிக்கைகள் இருக்கும் போது, அரசு, தேர்வில் பாஸ் செய்தவர்கட்கு இன்டர்வ்யூ வேறு வைக்கப் போகிறதாம். இது, குதிரை கீழே தள்ளியது மட்டுமின்றிக் குழியும் பறித்த கதையாக உள்ளது. இன்டர்வ்யூ வைத்தால் அரசு அதிகாரிகள் தான் நடத்துவார்கள். அவர்கள், அமைச்சர்கள், ஆளுங்கட்சி எம்.எல்.ஏக்கள், ஆளுங்கட்சிப் பிரமுகர்கள் ஆகியோரின் சொற்படித்தான் நடந்தாக வேண்டும். இதிலும் தில்லுமுல்லுகளும், ரொக்கம் புரளுவதும் நடக்க இன்னும் தாராளமாக வழி வகுத்துள்ளது அரசு.

திருபுவனம்,

வி.கே. பிள்ளை.



ராஜீவைக் காப்பாற்றப் போறேன்!

மணி 9:50.
இனி மூச்சு விட நேரமில்லை.
பொதுக் கூட்டம் நடக்கும் இடத்துக்கு ஓட ஆரம்பித்தான் வினோத்.
நேரம் லட்சம் டன் காந்தம் ஈர்க்கும் இரும்புத் துண்டாய் 10:20 நோக்கிப் பாய ஆரம்பித்தது.
ராஜீவின் கார் ஸ்ரீபெரும்புதூருக்குள் நுழைந்தது.

விநோத் பௌதிகத் துறை விற்பன்னன். சர் ஐஸக் நியூட்டன் முதல் ஸ்டீபன்-ஹாகிங் வரை கரைத்துக் குடித்தவன். ஐந்து செமீ உயரம் குறைந்த ரகுவரன் போல் காட்சியளிப்பவன். சார்பியல் தத்துவங்களை அடிப்படையாய்க் கொண்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்பவன்.

விநோத் தன் ஆப்த நண்பன் வசந்தகுமாருடன் ஆராய்ச்சிக் கூடத்துக்குள் நுழைந்தான்.

"வசந்த்! சார்பியல் சிறப்புத் தத்துவத்தில் அசாதாரணமான ஆராய்ச்சி செய்து ஜெயித்து விட்டேன். அதன்படி தர்மோடைனமிக்ஸின் இரண்டாவது விதியை முழுவதும் தகர்த்து எந்த மனிதரும் இறந்த காலத்துக்குள்ளேயோ எதிர்காலத்துக்குள்ளேயோ பயணித்து விட்டு நிகழுக்கு மீள முடியும்..." என்றான் விநோத்.

வசந்தகுமார் காகப் பார்வை பார்த்துக் கொண்டான். "நம்ப முடியவில்லை விநோத்!"

"விஞ்ஞானத்தில் எதுவுமே சாத்தியம். அவநம்பிக்கை அறியாமையின் உச்சக்கட்டம். நான் உன்னை இங்கே அழைத்து வந்ததே என் ஆராய்ச்சியினை பிரம்மாண்டமான அளவில் நிரூபிக்கத்தான்..."

"எப்படி? எப்படி?"

"உனக்கு ராஜீவ்காந்தி பிடிக்குமா?"

"அரசியலில் அவரைப் பற்றி ஆயிரம் கருத்துகள் இருக்கலாம். ஆனா என் பார்வையில் அவரொரு அழகிய தலைவன். அவரின் அளவான புன்னகை மோனாலிஸாவுக்கு இணையானது. அவர் ஆடை அணியும் நேர்த்தி பக்கா மேற்கத்திய தரம். அவரின் ஆங்கிலம் விநோத சங்கீதம் கலந்தது. இரண்டு வருடங்களுக்கு முன் வன்கொலையானவரைப் பற்றி இப்ப ஏன் கேட்கற விநோத்?"

"நான் ராஜீவைக் காப்பாற்றப் போறேன்..."

வசந்தகுமார் ஸ்தம்பித்தான். "விநோத்! உனக்கென்ன பைத்தியமா? ஹியூமன் பாமால் உருக்குலைந்த ராஜீவ் தகனம் செய்யப்பட்டு அஸ்தியாய் இந்தியாவின் சகல நதிகளிலும் கரைந்து 26 மாதமாகிறது. கரைந்த கடல் நீரிலும் நதி நீரிலும் எந்தத் துணுக்கு ராஜீவ் என்று புலன் ஆய்ந்து பௌதிக உடல் கோர்க்க முடியும்?"

"இயற்கையின் விதிகளைச் சற்றே தளர்த்தினால் நூறு சாகசம் புரியலாம். உலகின் அனைத்து நிகழ்வுகளும் என்னைப் பொறுத்த வரை ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட வீடியோ கேசட் போல. தேவையான தொழில் நுட்பம் கைவசமிருந்தால் கேசட்டை நமக்குத் தேவையான இடத்துக்குப் பின்செலுத்தி வேண்டாத நிகழ்வுகளைத் தடயம் இல்லாமல் அழித்து விட்டு விருப்பமான நிகழ்வைப் பதிவு பண்ணிக் கொள்ளலாம் வசந்த்!"

"உன் ஆராய்ச்சியும் அதன் தொடர்பான வாதமும் உண்மை என்றே வைத்துக் கொள்வோம். ஆனா - நீ இறந்தகாலத்துக்குப் பயணித்தாலும் பார்வையாளனா மட்டுமே இருக்க முடியும். பங்கேற்பாளனாய் நிகழ்வின் இம்மியைக் கூட மாற்ற முடியாது விநோத்!"

"இனி பேசி உன்னை நம்ப வைக்க முடியாது. பிராக்டிகலாய் நிரூபிக்கிறேன்..." ஒரு கூண்டுக்கு நடந்தான் விநோத். கூண்டுக்குள் மூன்று வகையான கடிகாரங்கள் தொங்கின. கடிகாரங்களுக்கு வலது பக்கத்தில் பெரியதொரு வரைபடம் இருந்தது. கடிகார முட்களையும் வரைபட இண்டிகேட்டரையும் விருப்பத்துக்குத் திருப்பி வைத்தான் விநோத். கூண்டின் தலை மேல் பகுதி பச்சை பட்டனை அழுக்கினான். 21.5.1991 காலை 10 மணிக்குத் தன் மனைவி தன்னை எடுத்த புகைப்படத்தைப் பார்த்தபடி சுயவசியம் செய்து கொண்டான் விநோத்.

சரியாகப் பத்து நொடிகள் கரைந்தன.

உஷ்ஷ்ஷ்க்! விநோத் நான்காவது பரிமாணத்தில் 6,84,28,800 நொடிகள் பின்னுக்குப் பறந்தான். எல்லையில்லா பாதாளக் குடைவு போல காலம் அமைந்திருந்தது.

கூண்டு தோட்டப் பகுதிக்கு உஷ்க்கி நின்றது. இறங்கினான் விநோத். ரீவைண்ட் செய்யப்பட்ட கேசட்டின் பிம்பம் போல விநோத் வீட்டு வரவேற்பறைக்குப் போய் நின்றான். கேமிராவைக் கிளிக் செய்தாள் தன்யா. 21.5. 1991 காலை மணி 10:00:08!

ஏற்கெனவே பேசிய வார்த்தைகளைப் பேசும் மனைவியைத் தவிர்த்தான் விநோத். "தன்யா! இன்றிரவு 11 மணி வரை என்னைத் தேடாதே. எனக்கு உலக முக்யமான அலுவல்...." புறப்பட்டான் இரண்டு சக்கர வாகனத்தில். சென்னை சுவர் முழுவதும் தேர்தல் போஸ்டர்கள். ஒரு போஸ்டர் ராஜீவின் ஸ்ரீபெரும்புதூர் தேர்தல் பிரசார கூட்டத்தை அறிவித்தது. போக்குவரத்து மக்களும் வாகனங்களும் அன்றிரவின் விபரீத நிழல் அறியாமல் நகர்ந்தனர்!

காங்கிரஸ் காரியாலயத்துக்குள் நுழைந்தான் விநோத்.

உள்ளிருக்கும் பிரதான கட்டடத்தின் எதிரே கட்சிப் பிரமுகர்கள் இரு கோஷ்டிகளாய்ப் பிரிந்து கதைத்துக் கொண்டிருந்தனர்.

ஆர்னிகா நாசர்

ஒரு கதர் சட்டையிடம், ''வணக்கம்!'' என்றான் விநோத்.

''என்ன மிஸ்டர்?''

''மாநில கமிட்டி தலைவரைப் பார்க்கணும். இன்றிரவு ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்தில் ராஜீவ் உயிருக்கு ஆபத்து... மனித குண்டு... தனு... தனு..''

அடுத்த பத்து நிமிடங்களில் பைத்தியக்காரனாய் அறியப்பட்டு வெளி துரத்தப்பட்டான் விநோத். அனைத்து கட்சிகள் தலைமைத் தேர்தல் அலுவலகங்களையும் காவல் துறைத் தலைவர் அலுவலகத்தையும் அணுகியதில் தொடர் தோல்வி.

கவர்னரை - ஜனாதிபதியை - தேர்தல் கமிஷன் தலைவரை - ராஜீவ் ஆலோசகரை - பத்து ஜன்பத் சாலையைத் தொடர்பு கொண்டு தளர்ந்தான் விநோத்.

மேஜை மீது ஆர்டி எக்ஸ் வெடி மருந்தும் 2 மி.மீ. இரும்பு ஊசிகளும் கலந்த வெடிகுண்டு அமர்ந்திருந்தது. அதனருகில் 9 வோல்ட் பேட்டரி. வெடிகுண்டில் பாது காப்பு ஸ்விட்ச்சும் வெடிக்கச் செய்யும் ஸ்விட்ச்சும் அமைந்திருந்தன. பாமை இடுப்பில் வைத்துக் கட்ட இடுப்பு பெல்ட் தனியாய். பாலிமர் உறை. வெய்ஸ்ட் ஜாக்கட்.

தனு மாநிறமாய் 5'-2'' உயரமாய் கண்ணாடி அணிந்து சற்றே தெற்றுப் பல்லாய்க் காட்சி அளித்தாள். அவள் எதிரே பெரட்டா துப்பாக்கியுடன் சிவராசன்.

அடுத்த

இதழில்...

● தீக்குளிப்புக் கொடுமைகள்....

- ஓர் அலசல்

● அரக்கோணம்

- ஒரு விசிட்!

''தனு!''

''அண்ணா!''

''மெரினா கூட்டத்திலும் வி.பி.சிங் கூட்டத்திலும் நாம் நடத்திய ஒத்திகைகள் உலக வெற்றி. ராஜீவின் அரசியல் நடவடிக்கைகள் நமக்கு ஏற்படுத்திய பாதகங்களை நீ தூக்கத்திலும் மறக்க மாட்டாய். இன்றைய உன் உயிர்த் தியாகம் இயக்கக் குறிக்கோளுக்கு மகா நிச்சயம் உதவும் தனு!''

''துளியும் என் மீது சந்தேகம் வேண்டாம் அண்ணா!''

''அயர்லாந்து கொரில்லாக்களை விட திறமையானவர்கள் நாம். இன்று நாம் நிகழ்த்தும் வன்கொலையைப் பாதுகாப்பான தூரத்தில் நின்று புகைப்படம் எடுத்து வவுனியாவுக்கு டெலிபேக்ஸ் பண்ணப் போகிறான் ஹரிபாபு. எந்த அலிபையும் இல்லாமல் சிபிஐ தன் சந்தேகத்தை ஓர் அப்பாவி தமிழகக் கட்சி மீதும் காலிஸ்தான், காஷ்மீர் தீவிரவாதிகள் மீதும் திருப்பும்...''

''ஆமண்ணா!''

''ராஜீவை நீ கொல்லத் தவறினால் போலி பத்திரிகையாளனாய் பிரஸ் பகுதியில் நிற்கும் நான் கொல்லுவேன். ராஜீவ் மரணம் காலத்தின் கட்டாயம்...'' பேசி முடித்தவன் தனுவுக்குப் போதை மருந்து ஏற்றினான்.

விசாகப்பட்டினத்திலிருந்து தனி விமானத்தில் புறப்பட்ட ராஜீவ் காந்தி இரவு 8:30 மணிக்கு மீனம்பாக்கம் பழைய விமான நிலையத்தில் இறங்கினார்.

8:40 மணிக்கு விஐபி லவுஞ்சில் அமர்ந்து ராஜீவ் பத்திரிகையாளருக்குப் பேட்டியளித்தார். அவரின் இருக்கைக்குப் பின் கட்சியின் பிரபல தலைகள் நின்றிருந்தன.

போலீஸ் வளையத்தை மீறி விநோத் ஓடி வந்தான். ''ராஜீவ்வ்வ்!''

தடுக்க முயன்ற அதிகாரிகளுக்கு ராஜீவ் கட்டளையிட்டார். ''ரிலாக்ஸ். லெட் ஹிம் இன்...''

விநோத் மூச்சிரைத்தான்.

''வாட்ஸ் யுவர் ப்ராப்ளம்?''

ஆங்கிலத்தில் விளக்கினான் விநோத்.

கதம்ப முகபாவம் கொண்டார் - ராஜீவ். ''வொய்ல்ட் இமாஜினேஷன் மிஸ்டர். இட்ஸ் ஹைலி இம்பாஸிபிள்! டேக் கேர் ஆஃப் யுவர் மென்டல் ஹெல்த் (திரும்பி) செக்யூரிட்டி! டேக் ஹிம் அவே!'' விநோத்தை சில நொடி இரக்கப் பார்வை பார்த்து விட்டுப் பேட்டி கொடுக்கத் திரும்பினார் ராஜீவ்.

விநோத்தை அலேக்காய்த் தூக்கிப் போய் விஐபி பட்டன் கேட்டுக்கு அப்பால் போட்டு மிருகத்தனமாய் உருட்டினர் போலீஸார்.

''நாயே நாயே! நாலு நாளா உயிர்க் குடுத்து ஸ்ரீபெரும்புதூர் பொதுக் கூட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிச்சிக்கிட்டிருக்கோம். நீ என்னடான்னா மனிதகுண்டு கினித குண்டுன்னு உளர்ற! மரியாதையா ஓடிரு. அடுத்த தடவை பார்த்தோம் சுட்டே கொன்னுப்புடுவம்...''

மூக்கில் வழிந்த இரத்தத்தைத் துடைத்தபடி தடுமாறி எழுந்தான் விநோத்.

இரவு ஒன்பது மணிக்கு கான்வாய் கார்களுடன் ராஜீவ் புறப்பட்டார். காரிலேயே வெளிநாட்டுப் பெண் நிருபருக்குப் பேட்டி கொடுத்தார். வழியில் இறங்கி நேரு சிலைக்கு மாலையிட்டார்.

கவசாகி பஜாஜ் பெட்ரோல் தீர்ந்து கோமா நிலையில் நின்றிருந்தது. யோசித்து விநோத் வாடகை டாக்ஸிக்குள் ஏறினான்.

''போரூர் போ. மீட்டருக்கு மேலே இருபது ரூபா தரேன்...''

வாகனம் புறப்பட்டது. ஒதுக்குப்புறமான இடத்தில் டாக்ஸியை நிறுத்தச் சொன்னான் விநோத். காரணம் கேட்டு உதைபட்ட டிரைவர் மயக்கமானான். டிரைவரை சாலையோரம் எறிந்து விட்டு, காரைச் செலுத்தினான் விநோத்.

மணி 9:15. போரூர் கூட்டத்தில் பேசினார் ராஜீவ். அதே நேரத்தில் ஸ்ரீபெரும்புதூரில் சங்கர்-கணேஷ் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. தனு சந்தன மாலையுடன் நின்றிருந்தாள். அதற்குள்ளாகவே ஆறு ஸ்நாப்கள் எடுத்திருந்தான் ஹரிபாபு.

மணி 9:30. பூந்தமல்லி கூட்டத்தில் பேசினார் ராஜீவ். 'டமார்' என்ற பெரும் சப்தத்துடன் வாடகை டாக்ஸியின் டயர் வெடித்தது. இறங்கி வெடிப்பு டயரை உன்னித்தான் விநோத். டிக்கியில் ஸ்டெப்னி இல்லை. வெறியாய்த் தரையை உதைத்தான். அரக்கோணம் செல்லும் லாரிகளுக்குக் கைநீட்டினான் விநோத். இரக்கப்பட்டு ஒரு லாரி ஏற்றிக் கொண்டது. ஸ்ரீபெரும்புதூரில் இறக்கி விட்டது.

மணி 9:50. இனி மூச்சு விட நேரமில்லை. பொதுக்கூட்டம் நடக்கும் இடத்துக்கு ஓட ஆரம்பித்தான் விநோத். நேரம் லட்சம் டன் காந்தம் ஈர்க்கும் இரும்புத் துண்டாய் 10:20 நோக்கிப் பாய ஆரம்பித்தது. ராஜீவின் கார் ஸ்ரீபெரும்புதூருக்குள் நுழைந்தது. தாயார் சிலைக்கு மாலையிட்டார் ராஜீவ்.

மணி 10:10. கூட்ட மேடைக்கு நடக்க காரிலிருந்து இறங்கினார் ராஜீவ். சதியாளிகள் பரபரத்தனர். ராஜீவ் வந்ததை அறிவிக்கும் விதத்தில் பட்டாசு வெடிப்பு நடந்தது.

மணி 10:15. தமக்குப் போடப்பட்ட மாலைகளையும் சால்வைகளையும் கூட்டத்தை நோக்கி வீசியபடி சிவப்பு கார்பெட்டில் நடந்தார் ராஜீவ். இரைக்க இரைக்க ஓடி வந்து சேர்ந்தான் விநோத். மணி 10:17. விநோத்தை அடையாளம் கண்டு தடுக்க ஓடி வந்த போலீஸ் அதிகாரியைப் பத்தாவது குத்தில் மயக்கமாக்கினான் விநோத்.

இன்னும் எழுபதே நொடிகள்!


ராஜீவுக்கும் தனுவுக்கும் நாற்பதடி இடைவெளி. பேய்த்தனமாய் தனுவை நோக்கி ஓடினான் விநோத். தடுத்த பெண் போலீஸை சாத்தி தள்ளி தனுவுக்குப் பாய்ந்தான். விநோத்தின் அணைப்புக்கு அகப்படாமல் முரண்டு பண்ணினாள் தனு.

இன்னும் இருபதே நொடிகள்!

''ஸ்டாப் தேர் ராஜீவ்! டோண்ட் கம்!!''

ஆனால் ராஜீவ் நிற்கவில்லை; அதிவேகமாக தனுவை நோக்கி வந்தார்.

தனு தன்னை விடுவித்துக் கொண்டு ராஜீவின் பாதங்கள் நோக்கிக் குனிந்தாள்.



● பத்ம சிவாஜி, நீடாமங்கலம்.

? தெரிந்தே தப்பு செய்பவர்கள் பற்றி...?

! மன்னிப்பு கிடையாது. குண்டு வெடிப்பு சம்பவம் காரணமாக இது பலர் கண்களில் படவில்லை : திருச்சியில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த கும்பல் மீது திருவள்ளுவர் பஸ் ஏறியதில் ஆறு பேர் அங்கேயே மரணம். காயங்களுடன் பலர் மருத்துவமனையில். சாலை விதிகளை அனுசரித்து டிரைவர் சுற்றி வளைத்து வந்திருந்தால் விபத்து நிச்சயம் தவிர்க்கப்பட்டிருக்கும். தெரிந்தே செய்த தவறு ஆறு உயிர்களைக் குடித்து விட்டது!

● கோ. கல்யாணசுந்தரம், கோவை.

? சமீபத்தில் தங்கள் மனத்தை நெகிழ வைத்த சம்பவம்?

! தெலுங்கு தேச எம்.எல்.ஏவும் முந்நாள் அமைச்சருமான சிவரெட்டி குண்டு வீச்சில் மரணமடைந்தது. 'இந்த நாடு எங்கேதான் போய்க் கொண்டிருக்கிறது?' என்று விசவிக்க வைத்தது. அவர் தமது உயிருக்கு ஆபத்து நெருங்குவதை உணர்ந்து பாதுகாப்புக் கேட்டும், ஆந்திர அரசு போதிய பாதுகாப்பு வழங்கவில்லை என்பது ஆச்சிரம் கொள்ளச் செய்தது. என்.டி.ஆர்., ஆந்திர காங்கிரஸ் அரசை தேவைக்கு அதிகமாகச் சாடி நாடகமாடுகிறாரோ என்று எண்ணிய வேளையில், சிவரெட்டியின் மனைவி தம்மைப் போலீஸ், காவல் நிலையத்துக்கு அழைத்துப் போய் துன்புறுத்தியதாகக் கூறி காயங்களையும் காண்பித்திருக்கிறார். 'ஆந்திராவில் நடப்பது காங்கிரஸ் ஆட்சியா? வில்லன்களின் ஆட்சியா?' என்று கேட்கத் தோன்றுகிறது.

● வெற்றித் தூண்!



● ஆர். உமா, திருச்சி.

? "சிம்பனி" என்றால் என்ன?

! ஒன்றுக்கொன்று இசைவான ஒலிகள் எழுந்தால் 'ஹார்மனி'. உதாரணமாக பாடகருக்கு இசைவாக வயலின் வித்வான் வாசிப்பது 'ஹார்மனி'. அதேசமயம் சாலையில் ஒரு 'ஏர் ஹார்ன்' பயங்கரமாக ஒலித்தால், ஹார்மனி அல்ல. பல்வேறு இசைவான ஒலிகள் பல்வேறு வாத்தியங்களால் எழுப் பப்படுவது 'சிம்பனி'. 'ஆர்கெஸ்ட்ரா' வில் ஏராள வாத்தியங்கள் இருக்கும். ஒன்றுக் கொன்று இசைவான ஒலிகளை மனோரஞ்சிதமாக அமை எழுப்புமின் றவ எனில் 'சிம்பனி ஆர்கெஸ்ட்ரா'... அரைக்கால் இளையராஜா ஆகிவிட்டீங்க, போங்க!

● அ. அஷ்ரப் அலி, தக்கலை.

? உள்ளாட்சி தேர்தலை நடத்த மறுக்கும் ஜெ., பழனி, ராணிப்பேட்டை இடைத் தேர்தல்களை ஒத்திவைத்ததற்காக ஏன் பாய்கிறார்?

! மருமகள் உடைத்தால் மண்குடம்தானே, மாமியார் உடைத்தால்தானே பொன் குடம்! அதனால்தான்!

● பி. பிரான்சிஸ், குடந்தை.

? கல்கிக்கு அ.தி.மு.க. வாசகர்கள் இருக்கிறார்கள்; அதனால் அ.தி.மு.கவை விமர்சிப்பதை கல்கி நிறுத்தி விடலாமே?

! கல்கிக்குத் தி.மு.க. வாசகர்கள் இருக்கிறார்கள். அதனால் தி.மு.கவை விமர்சிப்பதையும் நிறுத்திடலாம்; காங்கிரஸ் வாசகர்கள் இருக்கிறார்கள். அதனால் காங்கிரஸை விமர்சிப்பதையும் நிறுத்திடலாம்... இப்படியே வாதம் புரிந்தால் அரசியல் விமர்சனம் மட்டுமென்ன, கலை, இலக்கியம் போன்ற விமர்சனங்கள் எல்லாவற்றையும் விட்டு விட வேண்டியதுதான். விமர்சனங்கள் கல்கியில் கோபத்தால் எழுதப்படுவதல்ல; அன்புடன்தான் என்பதை உணர்ந்தால் உங்களுக்குச் சங்கடம் இராது.

● ஐ.எஸ். வாசு, மாடம்பிள்ளைதர்மம்.

? அரசியல்வாதிக்குப் பதவியை விட முக்கியமானது எது?

! அதன் மூலம் கிடைக்கும் பணம்!

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? "பதவி போனாலும் ஜெயலலிதா வீட்டு வேலைக்காரனாக இருப்பேன்" என்று மந்திரி கண்ணப்பன் கூறியிருக்கிறாரே?

! இது மாதிரி ஆசாமிகளை நம்பி வோட்டுப் போட்ட மக்களை எண்ணினால் பாவமாய் இருக்கிறது.

● ஆர். கார்த்திகேயன், மதுரை.

*? 'ஜகா, நான் நிரபராதி' என்று நாட்டில் உள்ள குற்றவாளிகள் முறையிட்டால் அவர்களுக்காக ராம் ஜெத்மலானி வாதாடு

□ ரூ. 25 பரிசு பெறுபவர் :
ஆர். உமா,
9/2, காஜாமலை காலனி,
திருச்சி - 620 020.


● நீதி. நேர்மையா?


● குண்டுக்குப் பலி!


● "வேலைக்காரன்!"


● தம் நிகரற்றவர்


● ஏமாற்றி விட்டார்!

வதா? அப்புறம் என்ன நீதி நேர்மை வேண்டியிருக்கிறது?

! நீதி நேர்மை கருதிதான் அவர் வாதாடுகிறார். நமது சட்டம் என்ன சொல்கிறது? 'ஒருவன் குற்றவாளி என்று ஐயம் திரிபற நிரூபிக்கப்படும் வரை அவன் குற்றவாளியல்ல' என்கிறது. 'குற்றவாளி' என்று நிரூபிக்க முயல்வது அரசு வழக்குரைஞர் கடமை. 'அல்ல' என்று வாதாடுவது ஜெத்மலானி போன்ற, குற்றம் சுமத்தப்பட்டவருக்காக வாதாடும் வக்கீல்களின் கடமை. இரண்டையும் அலசிப் பார்த்து உண்மை என்று தாம் உணர்வதைத் தீர்ப்பாக வழங்குவது நீதிபதியின் கடமை.

● பால கிருஷ்ணமூர்த்தி, மருங்கூர்.

? சின்மயானந்தா மறைவு குறித்து?

! மனிதவள மேம்பாடு பற்றி இன்று நிறைய பேசப்படுகிறது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து மனித உள்ளத்தை மேம்படுத்துவதையே தமது வாழ்க்கை நெறியாகக் கொண்டு பாடுபட்டவர் அவர். இதற்கு அவர் கையாண்ட கருவி கீதை. உத்தர காசியில் தபோவன ஆசிரமத்தில் உபநிஷதங்களையும் கீதையையும் இதர ஆன்மிக நூல்களையும் ஆழ்ந்து படிப்பதிலேயே பத்து ஆண்டுகள் செலவிட்ட அவர், ஆன்மீகச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதில் தந்நிகரற்றவராக விளங்கியதில் வியப்பில்லை. மனித மனத்தைப் பக்குவப் படுத்துவது என்பது சிறு வயதிலேயே ஆரம்பமாக வேண்டும் என்ற பெரு நோக்கு, ஏராள கல்வி நிலையங்களையும் தோற்றுவித்தது.

● ஜோ. ஜெயக்குமார்,
நாட்டரசன்கோட்டை.

? ஜெயலலிதா உண்ணாவிரதம் இருந்த இடத்தில் "வெற்றித் தூண்" நிறுவப் போகிறார்களாமே?

! சிவகாமியின் சபதத்தில் "ஜெயஸ்தம்பம்" என்ற அத்தியாயம் படித்திருப்பீர்களா? மறந்து விட்டிருந்தால் மறுமுறை எடுத்துப் படித்துப் பாருங்கள். (மூன்றாம் பாகம் - ஐம்பத்தோராம் அத்தியாயம்.)

● முத்தஸ், நாரேந்தல்.

? கசப்பான உண்மை எது?

! 'ராமசாமி படையாச்சியார் மாவட்டம் என்று அரசு பெயர் வைத்ததில் தவறில்லை' என்ற நீதிமன்றத் தீர்ப்பு ஏற்றுக் கொள்ளக்கூடிய உண்மையே. ஆனால் அதே நேரத்தில் சென்னையில் கிருஷ்ணமாச்சாரி சாலை, 'கிருஷ்ணம்மா சாலை'யாகி இருப்பதையும் கஸ்தூரி ரங்க அய்யங்கார் சாலை, 'கஸ்தூரி ரங்கா' சாலையாகியிருப்பதையும் யாரும் கண்டு கொள்ள மறுப்பது கசப்பு.

● வி.எஸ். ரங்கராஜன்,
சென்னை.

? தமிழர்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள் என்று 'ஜெ' சொன்னதில் என்ன தவறு? குழு அமைக்கப்பட்டதா? மத்திய அமைச்சர் ஏமாற்றவில்லையா?

! 'ஏமாற்றித்தான் விட்டார், ஆனால் தமிழக மக்களை அல்ல' என்பதே என் வாதம். 'கண்காணிப்புக் குழு, அமுல்படுத்தும் கமிட்டி' என்றெல்லாம் அவர் சொன்னதை இங்கே மிகப் பெரும்பாலோர் நம்பவேயில்லை. ஆகவே அவர்கள் ஏமாறவும் இல்லை. நம்பி ஏமாந்தவர்கள் 'ஜெ'யும் அவரது ஆலோசகர்களும், தொண்டர்களும்தாம்.

● சா. ரமேஷ் பாபு, லால்குடி.

? தியேட்டருக்குப் போய் சினிமா பார்ப்பதுண்டா?

! உண்டு. அண்மையில் பார்த்து ரசித்தது FATHER OF THE BRIDE. சிரிக்கவும் நெகிழவும் வைத்த இந்தப் படத்தைப் பற்றிய ஒரே ஒரு கவலை, ஹிந்தி அல்லது தமிழில் தர்ஜுமா பண்ணப் போய், கெடுத்துத் தொலைக்கப் போகிறார்களே என்பதுதான்!

4

மடிமீது தலை வைத்து!

கஸ்தூரிரங்கன் பாய்ந்து ஓடினான். கஸ்தூரிரங்கன் நின்றிருந்தது சாப்பிடும் பண்டங்களுக்கு இந்தப் பக்கம். சல்வார் கமீஸ் குழந்தை இருந்தது அந்தப் பக்கம். நடுவே இரண்டடி அகல மேஜை, நீளமாக, பீங்கான் தட்டுகள். ஸ்பூன், ஃபோர்க். ஸ்டவ். குருமா. பூரி. சட்டென்று தாவ முடியவில்லை. மேஜைக்குக் கீழ் புகுந்து புறப்படவும் வழி இன்றி, குறுக்கு மரச் சட்டங்கள்.

மேஜையை அவன் சுற்றி வருவதற்குள் அந்தக் குழந்தை நெருப்பைக் கண்டு பயந்து அலறி ஓடியது. துப்பட்டாவின் நெருப்பு அவளுடைய ஆடையில் பற்றியது. கஸ்தூரிரங்கன் ஒரே பாய்ச்சலில் அந்தக் குழந்தையைப் பற்றினான்.

அங்கங்கே இளம்பெண்களின் சுருதி பேத ஒலிகள் கேட்டன. குழந்தையின், கொண்டை போட்ட அம்மா கொஞ்சம் நாடகத்தனமாகக் கைகளிரண்டையும் விரித்து, ''மணிமேகலை!'' என்று கத்தினாள்.

கஸ்தூரிரங்கன் குழந்தையைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டு அப்படியே புல் தரையில் உருண்டான். மூன்று முறை உருண்டவுடனேயே தீ அணைந்து விட்டது.

எழுந்தான். மணிமேகலைக்குத் தீக்காயம் ஏதும் பட்டிருக்கிறதா என்று பார்த்தான். கமீஸ் பற்றிய இடத்தில் லேசாகப் பின்னந்தொடைத் தோலில் தீக்காயம் தெரிந்தது. சிவந்திருந்தது. நல்லவேளை. வடு தங்காது. கஸ்தூரிரங்கன் ஒரு பெருமூச்சு விட்டான். எப்போதும் அவர்களிடம் தயாராக இருக்கும் பர்னாலைத் தடவச் சொன்னான். சிங்காரம் அந்த வேலையைச் செய்தார்.

குழந்தை பயத்தில் மயங்கிப் போயிருந்தது. அதன் அம்மா டாக்டரிடம் கொண்டு சென்றாக வேண்



டும் என்று அடம்பிடித்தாள். கல்லூரிப் பெண்கள் சின்னச் சின்ன இரண்டு சக்கர வாகனங்கள் வைத்திருந்தார்கள். கார் எது வும் இல்லை. ஆட்டோவுக்காகப் பிரதான சாலை வரை போக வேண்டும்.

கஸ்தூரிரங்கன் முரண்டு பிடிக்கும் வாடிக்கையாளர்கள் நிறைய சந்தித்தவன். சமாளித்தவன்.

''என் வேன்ல கொழந்தையோட உக் காந்துக்கறீங்களா? நான் வேனை ஓட்டிட்டு வரேன்.''

உடனே அவள் வேனின் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்தாள். கஸ்தூரிரங்கன் குழந்தையை அவள் மடியில் இட்டான்.



பிறந்த குழந்தையை வாங்கிக் கொள்வது போல அவள் குழந்தையைப் பெற்றுக் கொண்டாள்.

''சிங்காரம்...''

''நான் கவனிச்சிக்கறேன் ரங்கா.''

கஸ்தூரிரங்கன் வேனோடு அந்தப் பெண்மணியின் குடும்ப டாக்டர் வீட்டுக் குப் போய், டோக்கன் பெற்றுக் காத்திருந்து, டாக்டர், மணிமேகலையைப் பரிசோதித் துப் பார்த்து, ''ஒண்ணுமில்ல. பார்வையே போதும். இதுக்காகவா சிரமப்பட்டு வந் தீங்க?'' என்று சொல்லி, ''நீங்க ஒண்ணு மில்லேன்னு சொன்னாத்தான் டாக்டர் எனக்குத் திருப்தி!'' என்று அவள் சொல்லி, அந்தப் பெண்மணியின் வீட்டில் குழந்தை யுடன் அவளையும் விட்டு விட்டு, ''நீ போலாம் டிரைவர்'' என்று அவளிடம் இருந்து கையெழுத்திடப்படாத ஆணை பெற்றுத் திரும்பி வந்த போது மணி இரவு பத்தாகி இருந்தது.

சபரி ஆட்கள் கேட்டிலேயே காத்திருந் தார்கள். வாட்ச்மேன் வீட்டில் மனைவிக்கு ஜுரம் என்று போய் விட்டானாம்.

''பார்ட்டி எல்லாம் ஜோரா நடந்தது ரங்கா. அந்த அக்காதான் ஒழுங்கா சாப் பிடலை.''

''எந்த அக்காடா?''

''அதான் அந்த ஷுகர் காக்டெய்ல் துப்பின அக்கா.''

''ஏன்?''

''நீ வரலையா, வரலையான்னு கேட்டுக்கிட்டே இருந்தது. டாக்டர் வீட்டு போன் நம்பரும் தெரியாதாம். மிஸஸ் ஹிட்லர் வீட்டுக்கும் போன் கெடையா தாம்.''

''அது யாரு மிஸஸ் ஹிட்லர்?''

''அதான். ஒன்னோட வந்தாளே. அந் தம்மாதான். இங்க மிஸ்ஸா வேலை பாக்க றாங்களாம். கிருஷ்ணா... அந்தம்மா எப்ப டிரா கத்தினாங்க?''

கிருஷ்ணன் முகத்தை வலிய விகார மாக்கிக் கொண்டு, இரு கைகளையும் விரித்து, அதே நாடகபாணியில் ''மணி மேகலை'' என்றான் கீச்சுக் குரலில்.

''டேய், பெரியவங்களை எல்லாம் கிண்டல் பண்ணக் கூடாதுன்னு சொல்லி யிருக்கேன்ல?''

''ஆமாங்க புதிய புத்தரே!''

''அடிச்சேன்னா பாரு! போலாமா?''

''அந்த அக்காதான் ஒன்னைப் பாக்க ணும்னு நின்னுட்டிருந்தது. அழுதிருச்சி ரங்கா.''

சுபா

''ஏன்?'' என்று ரங்கன் திகைப்போடு கேட்டான்.

''அவங்க பார்ட்டி வச்ச அன்னிக்கா இப்படி ஆகணும்னுதான். ஒங்கிட்ட ஸாரி சொல்லச் சொல்லிட்டுத்தான் அந்தக்கா போச்சு.''

கஸ்தூரிரங்கனுக்குச் சுநீதாவை நினைத்தால் கொஞ்சம் பரிதாபமாக இருந்தது.

''ஏறுங்கடா... போலாம்'' என்று சொல்லி விட்டு வேனை ஸ்டார்ட் செய்தான்.

மறுநாள். மாலை ஐந்து மணி இருக்கும். கஸ்தூரிரங்கன் சபரியின் பர்சனல் கம்ப்யூட்டர் முன்னால் அமர்ந்து முந்தைய நாள் கணக்குகளைச் சரிபார்த்துக் கொண்டிருந்தான்.

காகிதத்தில் எழுதியிருப்பதும் கம்ப்யூட்டரில் பதிவாகி இருப்பதும் சரியாக இருக்கிறதா என்று ஒப்பிட்டுக் கொண்டிருந்தான். ஒரு சந்தர்ப்பத்தில் தலை நிமிர்ந்த போது, கம்ப்யூட்டரின் பச்சை எழுத்துத் திரைக்குப் பின்னால் அவள் நின்றிருந்தாள்.

சுநீதா.

''ஹலோ'' என்றான் ஆச்சரியத்துடன். மகிழ்ச்சியுடன். இனம்புரியா கிளுகிளுப்புடன்.

''நான் வரலாம் இல்லியா?'' என்று கேட்டாள் சுநீதா. அலங்காரத்தில் இன்றைக்கும் தீவிர கவனம் செலுத்தியிருந்தாள். இன்றைக்கு இலைப் பச்சையும், கரும் பச்சையும் அவள் உடலில் பூக்களாக மலர்ந்திருந்தன. ரவிக்கை கரும் பச்சை. வழக்கம் போல் முழங்கை தாண்டிய ரவிக்கை. தோள் பட்டையில் பஃப் வைத்தது. தலைமுடியைப் பின்னாமல் ஷாம்பூ விளம்பரத்திற்குப் போவது போல படரவிட்டிருந்தாள்.

''எதுக்குப் பர்மிஷன் எல்லாம் கேக்கறீங்க. சபரி உங்களோடது. நீங்க எப்ப வேணும்னாலும் வரலாம். போலாம்.''

''அதுக்கில்ல...''

''உக்காருங்க சுநீதா.''

உட்கார்ந்தாள்.

''சொல்லுங்க. எதுக்கில்ல?''

''நேத்து நான் எதிர்பார்க்காததெல்லாம் நடந்து போச்சி. மிஸஸ் ஹிட்லர் உங்ககிட்ட கொஞ்சம் சீப்பா பிஹேவ் பண்ணிட்டாங்கன்னு தெரிஞ்சி எனக்கு மனசு ரொம்ப நொந்து போச்சு மிஸ்டர் ரங்கன்.''

''அதென்ன மிஸஸ் ஹிட்லர்?''

''ஸ்டூடண்ட்ஸ் வெச்சிருக்கிற பேர். ஹிட்லருக்கு மீசை மாதிரி இவங்களுக்கு மீன் கண்ணாடியும் கண்ணைச் சுத்தி மையும். ஹிட்லர் கையை தோள்லேர்ந்து மேலே தூக்கி அந்தரத்துல நிறுத்தி சல்யூட் பண்ற மாதிரி, இவங்க விரட்றா மாதிரி 'குட்மார்னிங்' சொல்வாங்க - மாணவிகளும். எப்பப் பாரு கடுகடுன்னு இருப்பாங்க. எல்லாரும் அவங்க கண்ட்ரோல்ல இருக்கணும்னு பாப்பாங்க.''

''பர்சனல் லைஃப்ல அடிபட்டிருப்பாங்க...''

''கரெக்ட் மிஸ்டர் ரங்கன். எப்படி அவ்வளவு சரியாச் சொன்னீங்க?''

வாழ்க்கையில் தனிப்பட்ட முறையில் அடிபட்டு, மனச் சித்திரவதைக்கு உள்ளாகிறவர்கள் எல்லாம், உடைக்க முடியாத பாறாங்கற்களாக இறுகிப் போய் விடுகிறார்கள். அவர்களுக்கு யாரைப் பார்த்தாலும் எரிச்சல் வருகிறது. வெறுப்பு வருகிறது. சுடு வார்த்தைகளை அள்ளி வீசத் தோன்றுகிறது. இது ஒரு வகை தற்காப்பு முயற்சியே. அடுத்தவர்கள் நம்மைச் சுட்டிக்காட்டுமுன், அந்த அடுத்தவர்கள் மீதே பாய்ந்து தங்களைத் தற்காக்கும் முயற்சி. இவர்களைத் திருத்த ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அன்பு வழி.



''ஒரு அனுபவந்தான்,'' என்றான் கஸ்தூரிரங்கன் பழைய பக்கங்களை அந்தக் கணநேரத்திற்குள் புரட்டிப் பார்த்து.

''ஸாரி சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்.''

''எதுக்கு?'' என்றான் அவன் ஆச்சரியம் தொனிக்க.

''நீங்க உங்க பெருந்தன்மையால இப்படிப் பேசறீங்க. ஆனா எனக்கு

Image Creators

"உங்க கதையைப் படித்ததும் அறிஞர் அண்ணா சொன்னது நினைவுக்கு வந்தது."

"பலே! என்ன நினைவு வந்தது?"

"எதையும் தாங்கும் இதயம் வேண்டும்!"

- எஸ். சந்திரசேகர்



நேத்தெல்லாம் எவ்வளவு கஷ்டமாயிருந்தது தெரியுமா? நான்தானே வந்து உங்களை வலியக் கூப்ட்டேன். எனக்காகத்தானே நீங்க எங்க காலேஜுக்கு வந்தீங்க. வந்த எடத்துல எவ்வளவு பெரிய விபரீதம் நடந்திருக்க வேண்டியது. உங்களாலதானே அது ஆரம்பத்திலேயே அணைஞ்சி போச்சி. ஒண்ணும் இல்லாததுக்கு அந்த மிஸஸ் ஹிட்லர் குதி குதின்னு குதிச்சி, உங்களைப் பாடாப் படுத்தி, டாக்டர் வீட்டுக்கு வெரட்டி, உங்களை டிரைவர் மாதிரி ட்ரீட் பண்ணாங்களாமே..."

"கதோ. ஏன் அழறீங்க?" என்று அவன் பதற்றத்தோடு கேட்டான். "ப்ளீஸ்... அழாதீங்க... உங்களுக்கு ரொம்ப பூஞ்சை மனசுன்னு நெனைக்கறேன். கண்ணைத் தொடச்சிக்கங்க."

"கர்ச்சீஃப் கொண்டு வரல்லே."

அவன் சிரித்து பான்ட் பாக்கெட்டில் இருந்து கைக்குட்டையை எடுத்து நீட்டினான். அவள் கண்களை ஒற்றிக் கொண்டாள். "நீங்க திரும்பி வர்றப்ப வேற நான் இல்லாம போய்ட்டேன். ரொம்ப வேட்டாய்டிச்சின்னு ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் கூப்ட்டாங்க. அதனால உங்ககிட்ட சொல்லாம போய்ட்டேன். என்னைப் பொறுப்பில்லாதவன்னு நெனைச்சிப்பீங்க இல்ல? எல்லாம் அந்த மிஸஸ் ஹிட்லரால வந்தது."

"உங்களோட மிஸஸ் ஹிட்லர் கிட்ட, நீங்க கொஞ்சம் பணிவா நடந்துக்குங்க. அன்பாப் பேசுங்க. அவங்க 'எழுந்துக்க'ன்னு சொன்னா எழுந்துக்குங்க. 'உக்காரு'ன்னா உக்காருங்க. அவங்களுக்கு ஜலதோஷம்னா, ஆஸ்த்மாவே வந்துட்ட மாதிரி நெனச்சிப் பரிவாப் பேசுங்க. மிஸஸ் ஹிட்லர் மாறிப் போய்டுவாங்க. மதர் தெரசா ஆய்டுவாங்க. அதுக்குப் போய் நீங்க ஏன் மனசு கஷ்டப்படணும்? இங்க வந்து இவ்வளவு ஃபீல் பண்ணணும்?"

கதோ தன்னையறியாமல் லேசாய்ப் பிளந்த உதடுகளுடன் அவனைக் கவனித்தாள். கஸ்தூரிரங்கனின் பேச்சில் இருந்த மென்மை, மற்றவர்களிடம் அணுக வேண்டிய முறையை அவன் விவரித்த விதம், இரண்டுமே அவளைக் கட்டிப் போட்ட மாதிரி செய்து விட்டன.

"பார்ட்டி நல்லா இருந்திச்சா?" என்று கேட்டான்.

"ஃபர்ஸ்ட் க்ளாஸ். மிஸஸ் ஹிட்லர் போனப்பறம் நாங்க ரொம்ப ரொம்ப ஃப்ரீ."

"வெரிகுட். நான்தான் மிஸ் பண்ணிட்டேன்."

"எதை?"

"ஏகப்பட்ட சைட்டுங்களை!"

"என்னது?" என்று கேட்டு முறைத்து, பின் கதோ சிரித்தாள். "உங்களுக்கு அந்தப் பழக்கமெல்லாம் கூட இருக்கா மிஸ்டர்?"

"அந்தப் பழக்கமெல்லாம் இருக்கற வயசுதானே மிஸ்?"

"கல்யாணம் ஆகலையா?"

"ஏன், என்னைப் பாத்தா அப்படியா தெரியுது? கல்யாணமானவன் மாதிரியா அசடு வழியறேன்... ஹலோ தானக் சிங். குட் ஈவ்னிங். லாங் டைம் நோ ஸீ."

"ரங்கா... ரங்கா" என்று பதற்றமான குரல் கேட்டது.

கஸ்தூரிரங்கன் திரும்பினான். அவளும் திரும்பினாள்.

இரண்டு யூனிஃபார்ம் அணிந்த சிறுவர்களின் நடுவில் ஒரு சின்னப் பையன் சிக்கியிருந்தான். அவன் முகத்தில் பயம் இருந்தது. எண்ணெய் காணாத தலை. கக்கத்தில் கிழிந்த, நைந்து போன சட்டை. தையல் பிரிந்து தொங்கிய பாக்கெட். அணிந்திருந்த டிராயரின் விளிம்பு பிள்ளையார் குடைக் குஞ்சலம் போல் நூல், நூலாய், பிரி, பிரியாய்த் தொங்கிக் கொண்டிருந்தது.

"என்னடா?"

"சார் விட்ருங்க சார்! வேணாம் சார்."

"என்னடா?"

"ஃபுல்லா சாப்ட்டுட்டு, காசு கொடுக்காம ஓடப் பாக்கறான் ரங்கா."

"சார் விட்ருங்க சார். பசி சார். இனிமே செய்ய மாட்டேன் சார்."

கதோவுக்கு அந்தப் பையனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. கஸ்தூரிரங்கன் அவனை முறைத்தான். அவன் கண்களில் நீர் வழிய அழத் தொடங்கினான்.

"பசியினால சாப்ட்டேன் சார். என்னை ஒண்ணும் பண்ணிடாதீங்க சார்."

"டேய். அவனை ஜெயில்ல போடுங்கடா. அவனை விடறதா, வேண்டாமான்னு கோர்ட் முடிவு பண்ணட்டும்."

"சார்... சார்!" என்று அவன் கதறக் கதற சபரியின் சிறுவர்கள் அவனை வலுக்கட்டாயமாக இழுத்துக் கொண்டு போனார்கள்.

கதோவுக்கு, கஸ்தூரிரங்கன் மேல் இது வரை வராத கோபம், வெறுப்பு எல்லாம் சேர்ந்து வந்தன.

(தொடரும்)



✱ மூர்த்தி

ஷண்முகப்பிரியாவுக்கு ஒரு சூட்கேஸ்!

"மூர்த்தி சிறிது; கீர்த்தி பெரிது" என்று எழுதினார் அமரர் கல்கி, இவ்வாண்டு கிருஷ்ண கான சபையில் "சங்கீத சூடா மணி" பட்டம் பெற்ற மிருதங்க வித்வான் டி.கே. மூர்த்தியை முன்பொரு முறை விமர்சிக்கும் போது. எழுதிப் படிக்கும் பேச்சாளர்களுக்கு வசதியாக ஓர் உயரமான அமைப்பை மேடையில் வைத்திருப்பார்கள் அல்லவா? அதன் பின் நின்று பேசினால் மூர்த்தி மறைந்தே போய் விடுவார்! எனவே பட்டமளிப்பு விழாவில் மூர்த்தி, தமக்கு 'மைக்'கைத் தனியே இப்பால் எடுத்து வைக்கச் சொன்னார். இந்த அளவுக்கு உருவம் சிறிதானாலும் கீர்த்திக்குக் குறைவே இல்லை. "மிருதங்க சக்ரவர்த்தி" பட்டம் தவிர, வேறு பலவும் பெற்றுள்ளவரின் கலை ஆற்றலுக்கு உச்சகட்டமாக அமைந்தது, ஐ.நா. சபையில் எம்.எஸ். அவர்களின் கச்சேரிக்கு வாசிக்கக் கிடைத்த சந்தர்ப்பம். எம்.எஸ். கச்சேரிகளுக்கு ஏராளமாக வாசித்து பெருமையுற்ற மூர்த்திக்கு எம்.எஸ். சார்பில் அவர் கணவர் சதாசிவம் அன்று பொன்னாடை போர்த்தி கௌரவித்தது ரொம்பப் பொருத்தம். செம்மங்குடி, உமையாள்புரம் முதலியோர், மூர்த்தியின் ஆற்றலையும் அவரது குருநாதரின் சிறப்பையும், மூர்த்தியும் ஒரு சிறந்த குருநாதராக இன்று விளங்கி வருவதையும் எடுத்துச் சொன்னார்கள்.

ஏற்புரைக்காக மைக்கைத் தனியே எடுத்து வைக்கச் சொன்னாரே தவிர, மூர்த்தி அதிகம் பேசவில்லை. நன்றி சொன்னதோடு நிறுத்திக் கொண்டார். "கிருஷ்ண கான சபை வழக்கமாக இளைஞர்களைத்தான் பட்டமளித்து ஊக்குவிக்கும்; 71 வயதான மூர்த்திக்கு இப்ப எதுக்கு?" என்ற சிலரின் முணுமுணுப்புக்குக் கூட அவர் பதிலளிக்கவில்லை. 'வார்த்தை எதற்கு? வாசிப்பில் காட்டலாம்' என்று எண்ணியவர் போல சில தினங்கள் சென்று டி.வி. சங்கரநாராயணன் கச்சேரியில் மிருதங்கத்துடன் அமர்ந்தார். 71 வயதா வாசித்தது? 17 வயது வாலிபம் வெளுத்துக் கட்டியது! சங்கரநாராயணனுக்கு வாசிப்பது இலேசுப் பட்ட காரியமல்ல. ஸ்வரப் பிரஸ்தாரங்கள் பூ மழை போல் பொழியும். ஒவ்வொரு பூவும் நிறத்திலும் மணத்திலும் வேறுபடும். அவர் புரிகிற இந்திர ஜாலங்களுக்கு வாசிக்க முன்னுணர்வு (anticipation) நிறைய வேண்டும். அது மூர்த்தியிடம் இலகுவாகவும் இயல்பாகவும் அமைய, விரல்களில் மட்டுமல்ல, சிந்தனையிலும் தாம் பதினேழுதான் என்று நிரூபித்தார். அவரைக் கௌரவிப்பது போல் முன்னதாக அவரை மேடைக்கு அனுப்பிவிட்டு, சங்கரநாராயணனும் சந்திரசேகரனும் பின் தொடர்ந்ததில் பண்பாடு பளிச்சிட்டது.

சந்திரசேகரன் வயலின் வாசித்தார் என்றால் பாடகரின் ராக ஆலாபனைக்குப் பிறகு, அதே ராகத்தில் பிரபலமான பாடல்கள் சிலவற்றை அவரது வயலின் கோடி காட்டும் என்று நிச்சயம் நம்பலாம். அன்று மோகனத்தில் அவர், 'கிரிதர கோபாலா' என்ற 'பக்த மீரா' திரைப்படப் பாடலின் இசையில் சில ராகத் துளிகளை வழங்கியது, எம்.எஸ்ஸை நினைவூட்டி, அவருக்காக வாசித்துப் பெரும் புகழ் பெற்றவர் மூர்த்தி என்பதையும் எடுத்துக்காட்டி, ரசிகர்களின் இதயங்களைக் குளிர்வித்தது.

சங்கரநாராயணன் அன்று கடைசியாக, "பாருக்குள்ளே நல்ல நாடு" பாடினார். "ஞானத்திலே, பரமோனத்திலே, உயர் மானத்திலே, அன்னதானத்திலே" என்று பாரதியின் வரிகளை அவர் பாடிக் கொண்டே போக, பக்கத்தில் இருந்த நண்பர் "லஞ்ச ஊழலிலே" என்றும் சேர்த்துக் கொள்ளலாம் என்றார் தமாஷாக.


"நாட்டின் நிலைதான் தெரிந்த கதையாச்சே; பாட்டைச் சொல்லுங்க" என்றேன். "ஹர்ஷத் மேத்தா போல் நம்மிடம் பணம் இருந்தால் இப்பவே மேடை ஏறி சங்கரநாராயணனுக்கு ஒரு ஸூட்கேஸ் கொடுக்கலாம். அது லஞ்ச ஊழலும் ஆகாது!"

"ஷண்முகப்பிரியாவுக்கே ஒரு கோடி சரியாப் போச்சய்யா! பாக்கிக்கு என்ன பண்றது?" என்றார் நண்பர்.

வாஸ்தவமான பேச்சு.

- குட்டி கிருஷ்ணன்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
அறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.



Registered as Newspaper in Srilanka
No more
WAIST!
Introducing
Sunline
Super - refined Sunflower Oil
New Sunline is packed with the golden goodness of Sunflower. Which makes it rich in nutrition and good for your heart. It's also the first step towards keeping slim, trim and healthy.
But that's not all. Sunline has been de-waxed to make it a lighter, clearer oil. And it's anti-cholesterol properties help you stay healthy by fighting cholesterol build-up in your body.
So ask for Sunline and celebrate good taste with your family.
DE-WAXED
ANTI-CHOLESTE
The taste that wins hearts!
A quality product from S.S.D. Oil Mills Co. Ltd., Madras - 600 056
ARTIG/SSD/1274